

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


பங்குனி – சித்திரை
ஏப்ரல் – 2021

மலர் 10 இதழ் 4


## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| வண்டு ஸ்தோத்ரம் | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 7 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 10 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ப்ரபோத சிந்தாமணி | 16 |
| ஆசாரக் கோவை | 18 |
| ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் 3வது ஆராதனை | 20 |
| ஸ்ரீ மடம் நிகழ்ச்சிகள் | 21 |
| பீஷ்மஸ்தவராஜம் | 28 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 30 |
| சித்திரை மாத விசேஷ தினங்கள் | 32 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 35 |
| புராணக்கதை | 37 |
| வேதாந்த ஸாரம் | 39 |
| மகாபாரத சுருக்கம் | 41 |
| ஸ்ரீ பாகவதம் காட்டும் வாழ்க்கை நெறி | 43 |
| தத்வ சிந்தனை | 45 |
| ஸனாதன தர்மம் : கேள்வி பதில்கள் | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


**நிர்வாகக் குழு**

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்




## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



**வெளியிடுவோர் :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



**அலுவலக முகவரி :**
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

**மின் அஞ்சல் :**
kamakotipradeepam@gmail.com



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## இவன் தான் மனிதன்

ஓ மனிதன் ஒரு அத்புதமான படைப்பு'' என்று ஷேக்ஸ்பியரும் மனிதன் தான் ஸ்ருஷ்டியில் ஸ்ரேஷ்டமானவன்'' என்று ஐதரேய உபனிஷத்தும் கூறும். உண்மைதான். இவன் சாதிக்காதது எது? உலகம் முழுவதும் கோடானுகோடி மக்கள் பிறக்கின்றனர். வாழ்கின்றனர், மடிகின்றனர். அதில் எத்தனையோ மகான்கள், விஞ்யானிகள் தத்வமுணர்ந்தோர், இப்படி பல ஸ்ரேஷ்டமான பிறப்பையும் பார்க்கிறோம்.

அதே சமயத்தில் இதற்கு மாறாக அசுரகுணம் கொண்ட மனிதர்களையும் பார்க்கிறோம். சாதனை படைத்தவர்களை விஞ்சி இவர்களது ஆளுமை செயல்படுகிறது. சாதனை என்னும்போது பெண்களின் சாதனையும் சேர்த்தே சொல்லப்படுகிறது. இவ்வளவு இருப்பினும் எல்லா குண நலங்களுடன் இருக்கமாட்டானா? ஒரு குணம் இருந்தால் இன்னொரு குணமில்லை. ஆத்மகுணங்கள் பொருந்திய மனிதன் இல்லையா?

நமக்கு ஐயம் வருவதுபோல் வால்மீகி முனிவருர் வர நாரத மகரிஷியிடம் ''ஐயனே தபஸ்வியே இந்த லோகத்தில் இப்போது குணவானாகவும், வீர்யவானாகவும் தர்மத்தை அறிந்தவனாகவும் காட்சிக்கு எளியனாகவும் நன்றி அறிபவனாகவும், ஆத்மவானாகவும் இருப்பவன் யார்/?இப்படி இன்னும் பல அடைமொழிகளைச் சேர்த்து கேட்கின்றார். நாரத மகரிஷியும் அப்படி எல்லா குணங்களும் சேர்ந்து உள்ள மனிதனை பார்ப்பது அரிது, இருப்பினும் இக்ஷ்வாகு குலத்தில் பிறந்திருக்கும் ராமன் என்னும் மனிதன் உள்ளான். அவனுக்கு இந்த குணங்கள் உண்டு என்று அடுக்குகிறார். என்னென்ன குணங்கள் ஒரு மனிதனை முழுமையாக்கும் என்பதைச் சற்றுப் பார்ப்போம்.

அவர் பதினாறு குணங்களைக் கூறுகிறார். வேதம் ஷோடஸீ அதாவது பதினாறு என்பதற்கு முக்யத்வம் தரும். 1. குணவான், 2. வீர்யவான், 3. தர்மம் அறிந்தவன், 4. நன்றி அறிந்தவன், 5. ஸத்யம் பேசுபவன், 6. வ்ரதத்தில் உறுதி கொண்டவன், 7. நடத்தையில் சிறந்தவன், 8. எல்லா உயிர்களிடத்திலும் ஹிதமானவன், 9. வித்வான் 10. ஸமர்தன், 11. காட்சிக்கு எளியன், 12. ஆத்மவான், 13. க்ரோதத்தை வென்றவன், 14. ஒளி உடையவன், 15. அஸூயை இல்லாதவன், 16. தேவர்களையும் நடுங்க வைக்கும் கோபமுடையவன். இதற்கு நாரதர் 23 குணங்களை சேர்த்து ராமன்

என்பவனுக்கு இக்குணங்கள் உண்டு என்று கதையை ஆரம்பிக்கிறார். அவன் காட்டிய வழியே ராமாயணம் ஆனது. ராமாயணம் முழுவதிலும் என்னென்ன குணங்கள் கூறப்பட்டனவோ அத்தனையையும் ப்ரதிபலிப்பதைப் பார்க்கலாம். மூல பல யுத்ததில் பல ராமர்களாக உரு மாறி ராக்ஷஸர்களை அழிப்பதுபோல் ராமாயணம் முழுவதும் வால்மீகியின் ஷோடஸ குணங்களுக்கு விளக்கம் அளிக்கிறார். இது வெறும் mythology என்று விமர்சனம் செய்தாலும் காட்டப்பட்ட முழு மனிதனாக நாம் ஏன் ஆவதில்லை? முயற்சி கூட செய்வதில்லை. இத்தகைய குணங்களை உடையவர் சாதாரண மனிதனாக இருக்க முடியாது. அவர் ஒரு அதி மானுஷர் (superman). அவரே தன்னடக்கத்துடன் ''ஆத்மானம் மானுஷம் மன்யே'' என்று சொல்லிக் கொண்டாலும் அவர் அதி மானுஷர்தான். அப்பேர்பட்ட ஸ்ரீ ராமசந்த்ரனின் பாததூளி பட்ட இப்பாரதம் புனிதமானது. நாம் எல்லாரும் பாக்யவான்களே. சொல்லப்பட்ட 16 குணங்களில் ஏதேனும் ஒன்றை பின்பற்றினாலே அதி பாக்யவந்தர்களாக இருப்போம்.

ஷேக்ஸ்பியரில் தொடங்கினோம். அதிலேயே முடிப்போம்.

"His life was simple and the elements so mix's in him that nature might stand up
And say to all the world this was a man

அவருடைய வாழ்க்கை எளியது. எல்லா பூதங்களின் கலவையான அவரைப் உலகுக்கு ''இதோ இவன் தான் மனிதன்'என்று இயற்கைக் காட்டும். இது அழியும் மனிதனை கவி போற்றியது. அழியாத அவதார புருஷரை அதோடு ஒப்பிட வேண்டாம்.

மாரீசனின் ''ராமோ விக்ரஹவான் தர்ம:''(தர்மமே ராமனின் உரு) என்னும் வாக்யம் பொருத்தமாக இருக்கும். என்று கூறி ராமனின் புகழ் பாடுவோம். இவ்விதழ் ராமாயண சிறப்பு மலராக (கொரனாவால் போன வருடம் வெளியிட முடியவில்லை) வருகிறது என்று கூறிக் கொண்டு இவ்விதழை ஸ்ரீசரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

## ப்லவ வருஷ புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# வண்டு ஸ்தோத்ரம்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஞானத்துக்கும் விஷ்ணு



மஹாவிஷ்ணு தான் இந்த லோக வ்யாபாரத்தை நிர்வாஹம் பண்ணும் பரிபாலன மூர்த்தி. அதனால் அவன் தானாகவே தன் உத்யோகப்படி ஆர்த்தனுக்கும், அர்த்தார்த்திக்கும் அனுக்ரஹம் பண்ணிவிட்டுப் போகிறான். ஆனால் அவன் இதற்கு மேல் ஞான வைராக்யாதிகளை அநுக்ரஹிக்க சக்தி இல்லாதவனா என்ன? இல்லை. நாராயணம் பத்மபுவம என்று ப்ரஹ்ம வித்யா ஆசார்யர்களிலேயே அத்வைதிகள் அவனைத்தான் முதலாவதாக வைத்து நமஸ்காரம் பண்ணுகிறார்கள். லோக பாலகனேதான் லோக வ்யவஹாரமெல்லாம் முடிந்து போகிற தத்வத்துக்கு முதல் ஆசார்யனாக இருக்கிறான். அதனால் அவனிடம் ஞான ப்ரார்த்தனையும் பண்ணலாம்.

'ஞானம், முக்தி சிவன் தான் தருவான். இந்த லோக வ்யவஹாரத்துக்குத்தான் விஷ்ணுவைப் பிடிக்க வேண்டும்' என்று தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிற ஜனங்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும் என்று பகவத்பாதாள் நினைத்தாரோ என்னமோ? இப்படித் தோன்றுகிற மாதிரி, ஞான உதயத்துக்குப் பூர்வாங்கமான சித்த சுத்திக்கு வேண்டிய விஷயங்களையே இந்த 'ஷட்பதீ' முதல் ச்லோகத்தில் ப்ரார்த்திக்கிறார். இஹம் – பரம், போகம் – ஞானம் என்பதில் இரண்டையும் மஹாவிஷ்ணு அநுக்ரஹம் செய்வாரென்று காட்டி, குறிப்பாக இந்த ஸ்துதியில் இரண்டாவதையே அவனிடம் கேட்கச் சொல்லிக் கொடுக்கிறார்.

ஷட்பதீ மட்டுமில்லை. இன்னும் அநேக ஸ்தோத்ரங்களிலும் மஹாவிஷ்ணுவை ஆசார்யாள் ஞான தாதாவாக வைத்தே ப்ரார்த்திக்கிறார். ஞான வைராக்யங்களுக்குப் பாடின 'பஜ கோவிந்த'த்தில் அவர் சொல்லியிருப்பது கோவிந்தனைத்தானே? 'ஹரிமீடே' ஸ்தோத்ரமென்று அத்வைதமாகப் பண்ணியிருக்கிறார். அதிலே ஒவ்வொரு ஸ்லோகத்திலும் 'ஸம்ஸார இருட்டை அழிக்கும் ஹரியை ஸ்தோத்திரிக்கிறேன். தம் ஸம்ஸார த்வாந்த விநாசம் ஹரிம் ஈடே என்று முடித்திருக்கிறார். இப்படி அநேகம்.

# மனம் ஸரியாக

மனஸை ஸரியாக ஆக்கிக் கொண்டாலொழிய எவனும் ஸௌக்யமாயிருக்க முடியாதென்பதால், அப்படிப் பண்ணிக் கொள்வதற்கான ப்ரார்த்தனையோடு ஆசார்யாள் ஷட்பதீ ஸ்தோத்ரத்தை ஆரம்பிக்கிறார். வெளி ஸௌகர்யங்கள் எத்தனை இருந்தாலும் மனஸ் நல்ல படியாக இருந்தால் தான் ப்ரயோஜனமுண்டு. இல்லாவிட்டால் துக்கம் தான், அழுகை தான், பயமும் சஞ்சலமும் தான். வெளி ஸௌகர்யங்கள் எதுவுமே இல்லாவிட்டாலும் கூட, மனஸ் மட்டும் இருக்க வேண்டியமாதிரி இருந்து விட்டதோ, அப்போது கஷ்டமும் தெரியாது. ''இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என்று அப்பர் ஸ்வாமிகள் சொன்ன மாதிரி ஸதானந்தமாக இருந்து கொண்டிருக்க முடியும்.

மனஸ் நல்லபடியாக இருப்பது என்றால் என்ன? எப்போது பார்த்தாலும், அது வேண்டும்; இது வேண்டும்; இப்போது இருக்கிற ஸௌகர்யங்கள் போதாது; பொருள், பதவி, பேர் வேண்டும்' என்று ஓயாமல் எதற்காவது மனஸ் ஆசைப்பட்டுக்கொண்டே இருக்கிறது அதாவது எப்போதும் அத்ருப்தியிலேயே இருந்து கொண்டிருக்கிறது. வேண்டியது கிடைத்துவிட்டது என்றாலும் த்ருப்தியாக நிறைந்திருக்க அதற்குத் தெரிகிறதோ? இல்லை. இன்னம் ஏதாவது தேவையை ஸ்ருஷ்டி பண்ணிக்கொண்டு அதற்காக அலையத்தான் செய்கிறது. இப்படியில்லாமல் மனஸ் த்ருப்தியாக, நிறைந்து இருந்து விட்டால் அப்போது தான் ஸரியாக இருக்கிறது என்று அர்த்தம். ஆசை, அதனால் வருகிற அத்ருப்தி, த்வேஷம், போட்டி, பொறாமை, துக்கம் இவை உள்ளவரை எத்தனை கோடீச்வரனானாலும், மஹா பண்டிதனானாலும் ஒருத்தனுக்கு சாந்தியும் இல்லை, ஸௌக்யமும் இல்லை. **'சாந்தமு லேக ஸௌக்யமுலேது'** என்று த்யாகையர்வாளும், **அசாந்தஸ்ய குத : ஸுகம்'** என்று க்ருஷ்ண பரமாத்மாவும் சொன்ன மாதிரிதான்! க்ருஷ்ணர் சொன்னதை நினைத்துக் கொண்டேதான் த்யாகையர்வாள் இப்படிப் பாடியிருக்கிறார் என்று தோன்றுகிறது. மன நிறைவினால் ஏற்படும் நிம்மதியில்லாமல் நிஜமான ஸௌக்யம் என்பது இல்லவே இல்லை என்று அந்த இரண்டு பேரும் சொல்கிறார்கள்.

(தொடரும்)

வாசகர்கள் மறக்காமல் சந்தா தொகையை செலுத்துமாறு வேண்டுகிறோம். உங்கள் நண்பர்களை ப்ரதீபத்தின் சந்தாதாரராக சேர ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



# தமயந்தி

### தளராத மனம்

(பிருகதீச்வரர் யுதிஷ்டிரனுக்கு உபதேசித்தது)

நிஷத தேசத்தை ஆண்டு வந்த வீரசேனனுக்கு நளன் என்ற மகன் பிறந்தான். அவன் கல்வி கேள்வியிற் சிறந்தவனாகவும் குண நலன்கள் அனைத்தும் வாய்க்கப் பெற்றவனாகவும் வளர்ச்சி அடைந்தான். ஒருநாள் தோட்டத்தில் அவன் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது சில அன்னப் பறவைகள் அங்கே வந்து தங்கின. அவற்றுள் தங்கச் சிறகுகள் போன்ற இறகுள்ள பறவை ஒன்று அவனருகில் அமர்ந்தது. நளன் அதனைப் பற்றிக் கொண்ட போது அவ்வன்னம் தன்னை விடுவிக்கும்படிக் கோரியது; கைம்மாறாக மாந்தருட் சிறந்தவனாகிய அவனைப் பேரழகியும் பண்பு நிறைந்தவளுமான தமயந்தியிடம் அவனைப் பற்றிக் கூறுவதாக உறுதியளித்தது. நளனும் அப்பறவையை விடுவித்தான்.

விதர்ப்ப நாட்டின் அரசன் பீமனுக்கு தமயந்தி என்ற செல்வமகள் இருந்தாள். நங்கையருள் சிறந்த அவள் பாங்கியருடன் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த போது அன்னப் பறவை அவளிடம் சென்று அவளுக்கேற்ற கணவன் நளன் ஒருவனே என்று கூறியது. நளனுடைய இலக்கணங்களை அறிந்த தமயந்தி அன்னத்தை நளனிடம் சென்று தன்னிலையைச் சொல்லும்படி கோரினாள். அப்பறவையும் நிடதத்தில் நளனிடம் ஆசைக் கனலைத் தூண்டி விட்டுத் தன் கூட்டத்தை நாடிச் சென்று விட்டது.

திருமணப் பருவம் எய்திய தன் மகளின் வாட்டத்தைப் பற்றி அறிந்த மன்னன் பீமன் அவளுடைய சுயம்வரத்துக்கு ஏற்பாடு செய்தான். மன்னர் பலருக்கும் அழைப்பு விடுத்தார்.

நாரதமுனிவரின் வாயிலாக இச்செய்தியை அறிந்த இந்திரன், யமன், அக்னி, வருணன் ஆகிய நால்வரும் அச் சுயம்வரத்திற்கு

தாங்களும் செல்ல முடிவு செய்து நளன் வரும் வழியில் அவனைச் சந்தித்தனர். அவனுடைய உதவியை நாடினர். நளன் உதவி செய்ய வாக்களித்த பின் அவர்கள் தாம் யாவர் என்பதையும் தமக்குள் ஒருவரை தமயந்தி வரிக்கும்படி கோர, அவளிடம் தூது செல்ல வேண்டும்படியும் கேட்டார்கள். நளன் தயங்கினான். தேவர்கள் வற்புறுத்தவும் மேலும் அவனைப் பிறரறியாமல் அரண்மனைக்குள் நுழையும் சூக்ஷ்ம உருவம் தந்திடவும் தன் கடமையின் பால் கவனத்துடன் சென்றான்.

தமயந்தி முன் சுய உருவத்துடன் நின்ற நளனைக் கண்டதும் அவன் கோரிக்கைக்கு செவி சாய்க்காது மறுத்து விட்டாள். தான் நளனுக்கு மட்டுமே உரியவள் என்று உறுதி கூறினாள். இதை அறிந்த தேவர் நால்வரும் நளனைப் போலவே உருவம் தரித்து அவனுடன் சுயம்வர மண்டபத்தை அடைந்தார்கள். தமயந்தி கையில் மாலையுடன் வந்த போது ஐந்து நள வடிவத்தினர்களைப் பார்த்துச் சற்றே அதிர்ச்சி அடைந்தாள். பின் கண்மூடி தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து உண்மையான நளனைக் கண்டு கொண்டாள். அவள் கண்களைத் திறந்த போது தேவர்களின் உடல்கள் பூமியில் படாது இருப்பதையும் மாலைகள் வாடாமலும் இருப்பதைப் பார்த்து மனித நளனை எளிதில் கண்டு கொண்டு மாலையிட்டாள். தேவர்களும் அவ்விருவரையும் வாழ்த்தி நளனுக்கு வரங்களை அளித்துச் சென்றனர்.

தேவர்கள் வானுலகு செல்லப் புறப்பட்ட போது தாமதமாக வந்த துவாபரனும் கலி புருஷனும் அவர்களிடம் சுயம் வரம் நடந்ததைக் கேள்வியுற்றனர், கலி தனக்கு தமயந்தி கிட்டாது போகவே சினம் கொண்டான். எனினும் பன்னிரண்டு ஆண்டுகள் சிறந்த முறையில் வாழ்ந்து வந்த நளமகாராஜனை அவனால் பீடிக்க முடியவில்லை. அதுவரை குற்றமே செய்யாது இருந்த நளன் ஒருநாள் தோட்டத்திற்குச் சென்று வந்தபின் கால் கழுவாமல் மாலை வணக்கமாகிய சந்தியாவந்தனம் செய்தான். கலி அவனைப் பிடிக்க வாய்ப்பு கிடைத்தது. மேலும் சிறந்த சூதாட்டக்காரனான நளன் தம்பி புஷ்பகரனிடம் தான் அவனுக்கு உதவி செய்வதாகக் கலி வாக்களித்து அவனுடைய பகடைக் காய்களில் நுழைந்து கொண்டான்.

புஷ்கரன் நளனைச் சூதாட வற்புறுத்தினான். நளனும் அதற்கு இணங்கி ஆவேசத்துடன் விளையாட ஆரம்பித்தான். கொஞ்சம் கொஞ்சமாக பொருளனைத்தையும் தோற்றான். பல நாட்கள் தொடர்ந்து இவ்வாறு ஆடினான். இடையிலே இராஜ்ஜிய காரியமாக வந்த மந்திரகளையோ தன்னை மீட்க மிக தீனமாக வேண்டிக் கொள்ளும் தமயந்தியையோ திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

சொத்துக்கள் இழக்கப்படுவதை அறிந்ததும் தமயந்தி தன் குழந்தைகள் இருவரையும் வார்ஷ்ணேயன் என்ற தேர்ப்பாகனிடம் ஒப்புவித்து அவர்களைத் தன் தந்தையான பீமனிடம் விதர்ப்ப நாட்டில் அடைக்கலப்படுத்தச் சொன்னாள். அவனும் அவ்வாறே செய்தபின் அயோத்தி மன்னன் ருதுபர்ணனிடம் தேரோட்டியாக அமர்ந்தான்.

செல்வத்தையும் நாட்டையும் இழந்த நளனிடம் புஷ்கரன் மீதமுள்ள தமயந்தியைப் பந்தயமாக வைக்கச் சொன்னதும் நளன் வெகுண்டான். தன் ஆசையைத் தவிர அணிகலன்கள் அனைத்தையும் தோற்றபின் தமயந்தியுடன் நகர எல்லையில் மூன்று நாட்கள் நீர் மட்டும் பருகி வசித்தான். மக்களைப் புஷ்கரன் அச்சுறுத்தியதால் எவரும் எந்த உதவியும் செய்திலர். பசியால் வருந்திய நளன் வனத்திற்குள் சென்றான். தமயந்தி அவனைப் பின் தொடர்ந்தாள்.

வனத்தில் பொற் சிறகு அன்னங்களைக் கண்ட, நளன் அவற்றைப் பிடிக்கத் தன் ஆடையால் மூடினான். ஆனால் அவைகள் உண்மையில் கலியால் உந்தப்பட்ட சூதுக் காய்களே. அவைகள் ஆடையுடன் பறந்து விட்டன.

நளன் மேலும் காட்டிற்குள் செல்லும் போது ஆங்காங்கே விதர்ப்ப நாட்டிற்குச் செல்லும் வழிகளை குறிப்பிட்டுக் கொண்டே வந்தான். ஆயினும் அவள் அவனை விட்டு விலகவே இல்லை. காட்டில் ஒரு மண்டபத்தில் இருவரும் படுத்து உறங்கும் போது தனி ஆடை அற்ற நளன் நள்ளிரவில் அவளுடைய புடவையின் முற் பகுதியைக் கிழித்து உடுத்திக் கொண்டு அவள் அறியாதபோது தனியாகச் சென்று விட்டான். பீறிக் கொண்டு வரும் துக்கத்தை அடக்கிக் கொண்டு கலியின் ஆட்சியினால் மனைவியை விட்டு ஓடினான்.


அடர்ந்த காட்டில் நளன் சென்று கொண்டிருந்த போது திடீரென்று காட்டுத் தீ பரவியது. அதனூடே'நளனே! புண்ணிய சுலோகனே! என்னைக் காப்பாற்று'' என்ற ஒலி கேட்டது. நளன் தைரியமாகத் தீ நடுவில் சென்றான். முன்னர் அக்னி பகவான் கொடுத்த வரத்தினால் தீ அவனைச் சுட வில்லை. அங்கு கீழே கிடந்த கார்க் கோடகன் என்ற நாகம் பெரு முனிவர் ஒருவருக்குச் செய்த தீங்கினால் சாபம் பெற்றுச் செயலற்றுக் கிடந்தது. நளன் அதனை எடுத்தவுடன் சாபம் நீங்கிய நாகம் நன்றி கூறி தன்னைப் பத்து அடி எடுத்துக் கொண்டு போகும்படித் சொல்லிற்று. அப்படியே நளன் செய்யும் போது 'தச' (பத்து) எண்ணிக் காலடி வைக்கயில் 'தச' (கடி) என்ற பொருளின்படி நாகம் அவனைக் கடித்தது. அப்போது நளனுடைய உருவம் மாறி விகாரமடைந்தது.

(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஸ்ரீ ராமஜன்ம பூமி விழா - 01.02.2021



*இன்றைய தினம் பொன்னான நாள். எந்த ஒரு நல்ல அறப்பணிக்காக ஆயிரம் கணக்கானவர்கள் அர்ப்பணித்து உணர்வுடன், இந்த அறப்பணியை முன்னின்று நடத்திக் கொண்டு வருகிறார்களோ, அவர்களெல்லாம் சந்தோஷப் படக்கூடிய, த்ருப்தியை தரக்கூடிய, பெருமை படக்கூடிய ஒரு நன்னாள்.*

*இந்த இடம், இன்றைய சூழ்நிலையில் சிறிய இடமாக இருந்தாலும், சீரிய இடமாக நம்மால் பார்க்கப்படுகிறது இந்த வளாகத்தில்தான், இதற்கான பல ஆலோசனைகள், பல்வேறு முயற்சிகள் , பல்வேறு வேள்விகள் இதெல்லாம் பல காலமாக, பல்வேறு சம்பிரதாயங்கள், சொல்லப்போனால் பல்வேறு சமயத்தை சார்ந்தவர்கள் கூட, பல்வேறு சமயங்களிலே வந்து சென்று இருக்கிறார்கள் இந்த இடத்திற்கு .*

*ஒரு முறை ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் ரயில்வே துறை மந்திரியாக இருந்த போது, இந்த இடத்திற்கு மகா பெரியவர்களை சந்திப்பதற்காக, இங்கே வரும் போது , அதாவது, மையமானவர்களை வைத்து, சுமுகமான தீர்வு எட்டப்படவேண்டும் என்பதற்காக, அவர் தேர்ந்து எடுக்கப்பட்டாரோ என்னவோ தெரியாது, அவர் இங்கு வந்து பஞ்ச கச்சம் கட்டிக்கொண்டு வந்து, பெரியவர்கள் இடத்திலே, இதே வளாகத்திலே, தரிசித்து, பல நேரம் பேசிக் கொண்டு இருந்தார்.*

*ஆந்திர மாநிலத்தின் கவர்னர் ஆக விளங்கிய கிருஷ்ண காந்த் அவர்கள், பல மணி நேரம் தங்கி பேசினார்கள். பிற சமயத்தைச் சார்ந்த, மத்திய பிரதேஷ் மற்றும் பீகார் மாநிலத்திலே கவர்னராக விளங்கிய இருவர் வந்து, அந்த நேரத்திலே வந்து பேசிச் சென்றார்கள். இப்படி பலரும் பல்வேறு அரசாங்கங்கள், 1980ல் இருந்து ஆரம்பித்த இந்த 80கள், 90கள், இந்த 2020 வரை இருக்கக் கூடிய , இந்த நாற்பது வருஷங்களிலே, பல முயற்சிகள் நல்ல எண்ணத்தோடு பணித்தமாக, இந்த இடத்தில், இங்கே தான் அருகாமையிலே, சிலா பூஜனம், அசோக் ஜீயும் , இங்கு வந்து இருக்கக் கூடிய நம்முடைய வேதாந்தம்ஜீ அவர்களும், இன்னும் பலரும் வந்திருந்த*

சந்தர்ப்பத்திலே, பெரியவர்கள், மஹா பெரியவர்கள் , பல்லக்கு பக்கத்திலே இருந்து, அந்த சிலா பூஜனத்திற்கு அனுக்கிரகம் செய்தார்கள்.

கவர்னர் அவர்கள் தெரிவித்தது போன்று, அந்த தரிசனத்திற்காக திறந்து விட்ட நேரத்திலே, 80களிலே, இடம் என்பது முக்கியமானது. அந்த நேரத்திலே அலகாபாத்திலே, ப்ரயாகையிலே நமது புதுப் பெரியவர்கள் இருந்தார்கள். இங்கிருந்து பெரியவர்களுடைய அனுக்ரகத்தோடு, இங்கே இருக்கும் குருமூர்த்தியின் மாமா அவர்கள் கண்ணன் இங்கு இருந்தார்கள். எல்லோரும் சேர்ந்து, இங்கிருந்து flight-ல் இரண்டு பேரை அனுப்பி, சத்திரமும், சாமரமும் அனுப்பி வைத்தார்கள். குடையும், வெண்குடையும், சாமரமும் இங்கிருந்து அனுப்பி வைத்து, அலகாபாத்தில் இருந்து, இன்றைய திருவேணி , முன்னாடியும் திருவேணி தான். நடுவிலே ஒரு பெயர் வந்தது; அந்த திருவேணி சங்கமத்தில் இருந்து, அயோத்தி வருவதற்குள், இவர்கள் சென்று, துளசி ராமாயணத்தையும், வால்மீகி ராமாயணத்தையும் பாராயணம் செய்து, இந்தக் குடையையும், அந்த சாமரங்களையும், முதல் மரியாதையாக காஞ்சீபுரத்தில் இருந்து அயோத்திக்கு சென்றது காமாக்ஷியின் தவப்புதல்வனான சக்கரவர்த்தி திருமகன் ராமருக்கு.

ஏனென்றால், காமாக்ஷி அம்மன் இடத்திலே தவம் செய்து அவர் பிறந்தவர் என்பதனாலே, காமாக்ஷியின் தவப்புதவர் ராமபிரான். அந்த ராமபிரானுடைய அழகான கோவில், புனிதமான கோவில், அயோத்திக்கும், காஞ்சிபுரத்திற்கும் தொடர்பு இருக்கிறது. சிவ பெருமானுடைய பஞ்ச பூதஸ்தலங்களிலே, ப்ரித்வி ஸ்தலம் காஞ்சிபுரம். அம்மனுடைய பஞ்ச பூதஸ்தலங்களிலே, ப்ரித்வி க்ஷேத்திரம் அயோத்தியா. அயோத்தி என்பது சக்தி பஞ்சபூத ஸ்தலங்களிலே, ப்ரிதிவி க்ஷேத்திரத்தை சார்ந்தது. ஆகவே இந்த சிவ-சக்தி க்ஷேத்திரங்களாக அயோத்தியும், காஞ்சிபுரமும் விளங்குகின்றன.

ஆகவே, இந்த காஞ்சீபுரமும், அயோத்தியும் ஒரு சேர்ந்து செய்ய வேண்டிய பணிகள் நிறைய இருக்கின்றன. அது போன்று, காஞ்சி காமகோடி பீடத்திற்கும், இந்த அயோத்தியா ராம ஜன்ம பூமி இயக்கத்திற்கும் நெருங்கிய ஒரு தொடர்பு பல காலமாக இருந்து வருகிறது. இதிலே ஆயிரக்கணக்கானவர்கள் மனதாலும், உடம்பினாலும் ; அதாவது தியாகம் சேவை, ஒற்றுமை, அற்பணிப்பு என்பதற்கும், சேர்ந்து செல்லுதல் , சேர்ந்து பணி புரிதல் என்பதற்கு எடுத்துக் காட்டாக இந்த இயக்கமானது நம்முடைய நாட்டினுடைய பெருமையை, பொறுமையையும் விளக்கி இருக்கிறது. உண்மையையும் விளக்கி இருக்கிறது இந்த ஒரு இயக்கமானது. இப்படி நல்ல முறையிலே, இந்த ராமபிரான் உலகத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குபவர்.

எங்கேயோ தாய்லாந்தில் இருப்பவர்களும், இந்த ராமருடைய பெயரைத் தாங்கி, அரசாட்சி செய்கிறார்கள். இப்படி உலகம் முழுவதும் இந்த ராமபிரானுடைய பெயர் வியாபகமாக இன்றைக்கும் நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். அவர் அனைவரையும் சந்தோஷப்படுத்தியவர். தன்னுடைய பண்பினால் சந்தோஷப்படுத்தியவர். பட்டதினாலேயோ, பதவியினாலேயோ, அதிகாரத்தினாலேயோ அவர் சந்தோஷப்படித்தினார் என்பதை விட, தன்னுடைய பண்புகளின், குணங்களின் காரணமாக பண்பை ஆதாரமாகக் கொண்டு, முக்கியமாகக் கொண்டு, வாழ்க்கை முறை என்ற இந்திய கலாசாரத்தின் எடுத்துக் காட்டாக, ஆதர்சனமாக விளங்கக்கூடிய இராமபிரானுக்கு, ஒரு மரியாதையின் அங்கமாக, அடையாளமாக விளங்கப் போவது இந்த ஒரு திருக் கோவில்.

ஆகவே, அந்த ஒரு கோவில் என்பது இராமபிரானுடைய பண்புகளை, உலகம் முழுவதும் அனைவருடைய உள்ளத்திலேயும் குடி கொண்டிருப்பவர். குடிசைகளிலிருந்து ஆரம்பித்து, அனைவர்களின் உள்ளத்திலேயும் குடிகொண்டு இருப்பவர். ராமபிரான் தண்டகாரிண்யம் செல்லும் போது, வனத்திலே மட்டும் அவர் பிரவேசிக்கவில்லை. வனத்தில் பிரவேசிக்கும் அதே நேரம் நல்ல உள்ளம் எங்கெல்லாம் இருக்கின்றதோ , அது மாளிகைகளிலும் இருக்கலாம், குடிசைகளிலும் இருக்கலாம், விவசாயிகளாகவும் இருக்கலாம், தொழிலாளிகளாகவும் இருக்கலாம், முதலாளிகளாகவும் இருக்கலாம். எந்த நிலையிலே இருந்தாலும், நல்ல உள்ளம் என்பது இருந்தால், அங்கு ராமபிரான் குடி கொண்டு இருக்கிறார் என்பதாக மஹாகவி காளிதாசர் நமக்கு குறிப்பிடுகிறார். அப்படி அந்த நல்லதுக்கு உதாரணமாக இருக்கக் கூடிய அந்த இராமபிரானுடைய ஆலயம், சிறப்பான முறையிலே நடை பெறுவதற்கு, இந்த ஒரு ஆறு, ஏழு மாதங்களாக விளங்கக்கூடிய பல்வேறு சிரமங்கள் மத்தியிலேயும், பெரும் திரளாக, மக்கள் இங்கு ஆர்வமாக , ஏனென்றால் அவரவர்களுக்கும் பல்வேறு சிரமங்கள் இருந்தாலும், இதன் நடுவிலே, இந்த தாராளமாக விஷ்வ ஹிந்து பரிஷத் தமிழ்நாடு சேர்ந்தவர்கள், ஆந்திராவில் இருந்து எம். எஸ். மூர்த்தி அவர்கள் குடும்பத்தை சார்ந்தவர்கள், கவர்னர் அவர்கள் சிறப்பாக பாராட்டிய மணிக்குடி வெங்கட்ராமையர், ஜெயராமன் அவர்களுடைய குடும்பம் மோகன் போன்றவர்கள் , இப்படியெல்லாம் பலரும் சேர்ந்து, இவ்வளவு, அவ்வளவு என்று அல்ல; அனைவருடைய உள்ளங்களும் சேர்ந்து இருக்கின்றன. அனைவருடைய காணிக்கையும் இங்கு சேர்ந்து இருக்கின்றது. அதுதான் இராமபிரானுடைய தத்துவம். இராமபிரானுடைய தத்துவத்தை உலகம் முழுவதும் பரப்பினால், இந்தியாவிற்கும் சுபிக்ஷம் , உலகத்திற்கும் நல்ல ஒரு அமைதி ஏற்படும்.

இந்தியாவுடைய பெருமைக்கும், இந்தியாவுடைய வலிகள் நீங்கி, வலிமையோடு விளங்குவதற்கு, இராமபிரானுடைய வீரமும், விவேகமும், பக்தியும், நல்ல குணங்களும் நமக்கு எடுத்துக்காட்டாகவும், வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும், வழிகாட்டி என்பது ஒன்று, உறுதுணை என்பது என்று ஒன்று. ஆகவே, அந்த பக்தி என்பது அனைவருடைய உள்ளத்திலேயும் வளர வேண்டும். பக்தி என்றால் தெய்வ பக்தி மட்டுமல்ல. மனித உறவுகளுக்கு மத்தியிலே இருக்க வேண்டிய பக்தி.

குடும்பங்களிலே இருக்க வேண்டிய ஒருவரை ஒருவர் நம்ப வேண்டிய , நட்புடன் பழக வேண்டிய, மதிக்க வேண்டிய இணைந்து செயல் பட வேண்டிய பக்தி. பக்திதான் அனைவரையும் இணைத்து வைத்து இருக்கிறது.

ஆகவே, சமுதாயத்திலே வளர வேண்டிய பக்தி, பொறுப்பு உணர்ந்து செயல்படுதல். அந்த பக்தி அனைவரிடத்திலும், ஒவ்வொரு பிரஜைகள் மத்தியிலேயும் பக்தி வளர வேண்டும். தெய்வ பக்தி வளர வேண்டும். இராம பக்தியும் வளர வேண்டும். வளர்ந்து, அதன் மூலம் சிறப்பான முறையிலே, சாந்த ரீதியிலே, இந்தக் கோவில் அதற்காக பலரும், தியோரா பாபாவில் இருந்து ஆரம்பித்து பலரும், இதற்காக பெரும் முயற்சிகள் பல்வேறு மகான்கள் , பல்வேறு சித்தர்கள், பல்வேறு-அதாவது ஊர் பேர் தெரியாது. எங்கிருந்தோ மூலை முடுக்கில் எல்லாம் இருப்பவர்கள் எல்லாம் வேலை செய்து, சிறப்பான பணி, மிக சிறப்பான முறையிலே, சங் பரிவார் முப்பதுக்கும் மேற்பட்ட அமைப்புகள், இப்படி பலரும் சேர்ந்து, இதை இராமபிரானுக்கு அணிகலன்களாக இருந்தன. இது போன்று இந்த ஆலயம் கட்டும் பணியிலேயும் தொடர்ந்து அனைவரும் ஒற்றுமையுடனும், அன்புடனும், பக்தி ச்ரத்தையுடன் ஈடுபட்டு, விரைவாக அந்த இராமபிரானுடைய அந்த ஆலயம் நிர்மானம் செய்யப்பட்டு , அந்த கும்பாபிஷேகம் எல்லாம் சிறப்பாக நடைபெறுவதற்கு, இந்த குருவருளும், திருவருளும் துணை நிற்க வேண்டும்

இரண்டு பெரியவர்களும் அதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள், அவர்கள் அளித்த ஆசிகள், இந்த ஆண்டு ஆகஸ்ட் 5ம்(2019) தேதியன்றும் யாதர்சிகமாக நம்முடைய புதுப்பெரியவர்களுடைய பிறந்தநாளாக அது அமைந்தது. இப்படி, பிப்ரவரி மாதம் இரண்டு வருஷங்களுக்கு முன்பாக , மூன்றாவது வாரம், ஒரு பக்த பிரமுகர் சுப்ரீம் கோர்ட்டிலே இந்த வாதங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. நல்ல தீர்மானங்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது, நீங்கள் வந்து திறந்து வைக்க வேண்டும், கலந்து கொள்ள வேண்டும் என்ற செய்தியைச் சொன்ன போது, கையைத் தட்டி தன்னுடைய சந்தோஷத்தை புதுப் பெரியவர்கள் வெளிப்படுத்தினார்கள் × பிப்ரவரி 25ம் தேதி. அவருடைய மனதிலே அந்த இராமபிரானுடைய ஒரு நினைவு.

இந்த ஒரு சிறந்த முயற்சிக்காக பாடுபட்டவர்களுக்கு, சமுதாயம் அவர்கள் அனைவரையும் நினைவு வைத்திருக்கும்.

தொடர்ந்து இந்த நல்ல முயற்சி , நம்முடைய தேசத்தை வலுப்படுத்துவதற்கும், நம்முடைய தேசம் உலகத்திலே ஒரு சிறந்த நல்ல இடத்தைப் பெறுவதற்கும், சிறந்த ஓர் இடத்தை-ஐந்து, ஆறு பேர் அங்கு உட்கார்ந்து கொண்டு இருக்கார்கள் அங்கே. அந்த இடத்தில் இந்தியாவும் உட்கார வேண்டும்-பாதுகாப்பான அந்த இடத்திலே அமர்வதற்கு, பாதுகாப்புக்கான இடத்திலே நம் தேசம் அமைவதற்கு. அது போன்று ஒரு சிறந்த இடத்தை. நம்முடைய பல்வேறு நல்ல பணிகளை நாம் செய்து கொண்டு இருந்தாலும், உலகளவிலே அதற்குரிய அதிகாரமும், அங்கீகாரமும், அபிமானமும் நமக்கு கிடைக்கப் பெற்று, இந்த இராமருடைய பலம், பல்வேறு விதமான பலம் நமக்கு ஊன்றுகோலாக, ஊக்கு சக்தியாக, ஊற்றுக்கண்ணாக, நமக்கெல்லாம் அமைந்து, அந்த ஆத்ம சக்தி, இராமபிரானுடைய ஆத்ம சக்தியானது, நமக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இந்த ஒரு நிகழ்ச்சியிலே தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்ஜி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இந்த நல்லதொரு ஆலயம் அமைய வேண்டும் என்பதற்காக 1980களில் இருந்து அவர் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டவர். அந்தவிதத்திலேயும், தனிப்பட்ட முறையிலேயும் அவர், அதாவது விகர்ணன் என்று சொல்வார்கள். நூறிலே ஒரு வித்யாசப் பட்டவர். பல எண்ணிக்கையிலே, பல எண்ணங்களோடு இருந்தபோது, அவர் தனிமனிதராக இந்த அயோத்தியிலே ஒரு ஆலயம் அமைப்பதற்காக, அன்றைய தினங்களிலே, அவர் பெரும் முயற்சியை எடுத்துக் கொண்டவர் என்பதும் , அவரை இங்கு ஒரு சிறப்பு விருந்தினராக அழைப்பதற்கு ஒரு முக்கியமான காரணம். ஆகவே, ஆராதனை அன்று, மஹா ஸ்வாமிகளின் ஆராதனை அன்று யாரை இந்த நிகழ்ச்சிக்கு அழைக்கலாம் என்று யோசித்த போது, இந்த கவர்னர் அவர்களை அழைப்பது என்று தீர்மானம் செய்து, அவரும் இந்த நேரத்திலே சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கின்றார். ஆகவே, அவர் தமிழக ஆளுநர் என்பது தமிழக நிகழ்ச்சிக்கு பொருத்தமான, பெருமையான ஒரு விஷயம். அதோடு சேர்ந்து, இந்த இயக்கம் வலுப்படுவதற்கு , தனி மனிதராகவே இருந்து, பெரும் முயற்சியை சுலபமாக இது நடைபெற வேண்டும், சுமூகமாக இது நடைபெற வேண்டும், சீக்கிரமாக நடைபெற வேண்டும் என்பதற்காக அவர் முயற்சி எடுத்தார்.

இணக்கம் என்பது மனிதர்களுக்கு இடையிலே ரொம்பவும் முக்கியமானது. இதிலே, ராம ஜன்ம பூமியிலே தற்போது உடுப்பி தேஜாவர் ஸ்வாமிகள் வாரிசான, நம்முடைய

விஸ்வப்ரசன்ன தீர்த்த ஸ்வாமிகள் பங்கு பெற்று இருக்கிறார்கள். அது ஒரு நல்ல விஷயம். மக்களிடத்திலே, கர்நாடக தமிழக மக்களிடத்திலே இணக்கத்தை ஏற்ப்படுத்துவதற்க்கான தூதராகவும் நாம் அவரை பார்க்க முடிகிறது. அழகான தமிழிலே கன்னடத்தை சார்ந்தவர்கள் தமிழிலே நல்ல சொற்பொழிவு தந்தார்கள்.

நம்முடைய பெரியவருடைய ஆசியைப் பெற்ற பைதான் என்ற இடத்திலே ஞானதேவ் மகாராஜ், ஏக்நாத் மகராஜ் பிறந்த இடத்திலே அவர்கள் கோவிந்தகிரி மகாராஜ் அவர்கள்.சங்கத்தோடு பலநாட்களாக அறிமுகமானவர். இந்தியா முழுவதும் முப்பதைந்துக்கும் மேலான வேதபாட சாலைகளை அவர் நடத்திக் கொண்டு வருகிறார். அந்த அமைப்பின் வேதமஹரிஷி பிரதிஷ்டான் மூலமாகவும் திருப்பணிக்காக ரூபாய் 11 லட்சம் அவர்கள் அளித்து உள்ளார்கள். விஷ்வ ஹிந்து தமிழகத்தின் சார்பாக 18 ½ லட்சமும் பல்வேறு கல்வி நிறுவனங்களாக கொடுத்து இருக்கிறார்கள். அதே போன்று எம்.எஸ். மூர்த்தி அவர்களின் குடும்பம் ரூபாய் 25 லட்சம் கொடுத்து இருக்கிறார்கள். இதே போன்று பலரும் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். எல்லாவற்றிக்கும், சிகரம் வைத்தாற்போல், மணிக்கொடி அவர்கள் , மணிக்கொடி அங்கே பறப்பதற்காக, அயோத்தியில் மணிக் கொடி பறப்பதற்காக இந்த சிறப்பான நன்கொடை அளித்து இருக்கார்கள் .

நம்முடைய நாட்டிலே கொடை என்பது வளர வேண்டும். நல்ல குடையும் இருக்க வேண்டும். நல்ல கொடையும் இருக்க வேண்டும். நிர்வாகம் செய்ய நல்ல குடை தேவை. கிராமப்புறங்கள் வளர நல்ல கொடை தேவை. நம்முடைய நாட்டிலே ஈவு, இரக்கம் வளர வேண்டும். இந்தியாவிற்கு கிடைக்க வேண்டிய ஈவுத் தொகை, உலகளவிலே இந்தியாவிற்கு கிடைக்க வேண்டிய, ஈவுத் தொகை-அதாவது நம்முடைய பங்கை நாம் பெற வேண்டும். இந்தியா என்பது, பாரதம் என்பது உலகளவிலே நல்ல ஒரு இடத்தில் வர வேண்டும். அதற்கு உலக நாடுகள் அனைத்தும் நம் மீது இறக்கம் காட்ட வேண்டும். இதற்கு நம்முடைய சக்தி வளர வேண்டும். பக்தியும் வளர வேண்டும். இந்த அனைத்துக் குணங்களுக்கும் இருப்பிடமாக இருக்கக் கூடிய -சமஸ்த கல்யாண குணாதி ராமஹா - அனைத்து நல்ல குணங்களுக்கும் இருப்பிடமாக இருக்கக் கூடிய அந்த இராமபிரானுடைய அருள், ஆஞ்சநேய சுவாமியுடைய சேவா மனப்பான்மை - புத்திர் பலம் யேசோ தைர்யம், நிற்பயத்வம் அரோகதா .... என்கிற அனைத்துக் குணங்களும் நமக்கு அமைந்து , தர்மோ ரக்ஷிதி ரக்ஷிதஹா அந்த தர்ம சக்தி நம்மிடையே வளர்வதறகு , இராம பிரானை பிரார்த்தனை செய்வோம்.

ஹர ஹர நமப் பார்வதி பதயே,ஹர ஹர மகா தேவா

# ப்ரபோத சிந்தாமணி

ஆயுஷ்மன்

தவம் தபஸ் என்று கேள்விப்படுகிறோம். பெரிய வார்த்தையாக உள்ளது. அச்சமாகவும் உள்ளது. உபவாசம் அகிம்சை பூஜை இவைகளோடு தவத்தை இணைத்து பயப்படுகிறோம். தவம் கடினமானதுதான். பகீரதன் தவம் அர்ஜுனன் தவம் விஸ்வாமிதரரின் தவம் பல அஸுரர்களின் தவம் இவை பற்றிக் கேள்விபட்டுள்ளோம். அவர்கள் எத்தனை முனைப்புடன் தவமியற்றினர் அதனால் வந்த பலன் இவைகளும் நமக்குத் தெரியும். கங்கையைக் கொண்டுவந்தது பகீரதன் தவம் பாசுபதம் பெற்றது அர்ஜுனன் தவம், ப்ரம்ம ரிஷியாக்கியது விஸ்வாமித்ரரின் தவம். ஏன்? அஸுரர்களின் தவம் கூட பல வரங்களைப் பெற்றுத்தந்தது. தவத்தின் பொருள் அறியாமலே அச்சம் உண்டாகிறது.

உண்மையில் தவம் என்பது என்ன? ஒரு பொருளை அடைய ஒருவன் தடைகளைத் தாண்டி மேற்கொள்ளும் கார்யம் தவம் என்று சொல்லலாம். மேற் சொன்ன நபர்கள் இப்படிப்பட்டவர்கள்தான். தான் பசுபதியை அடைய வேண்டும் என்று விரும்பிய பார்வதி மேற்கொண்ட தபஸுக்கு ஈடு இணையில்லை. பஞ்சாக்னிகளின் மத்தியில் தவம் புரிந்து பசுபதியை மணந்தவள் அவள்.

நம் பாரதம் அடிமைத்தளையிலிருந்து மீள எத்தனை பேர் கடினமான வாழ்க்கை முறையை மேற்கொண்டு பாடுபட்டனர். மகாத்மா காந்தி, சுபாஷ் சந்த்ரபோஸ் வ. வு சிதம்பரம் பிள்ளை படேல் போன்றோரின் த்யாகம் எல்லாரும் அறிந்ததே. அவர்களது வாழ்வு தபஸ் அல்லவா. நாம் முன்னம் சொன்னமாதிரி ஏகாக்ர சிந்தனையுடன் ஒரு பொருளை அடைய செய்யும் கார்யமான இத்தவத்தை எல்லாரும் செய்யமுடியுமா? முடியும். மனது வைத்தால். ஏன் உலகில் எவ்வளவோ கண்டுபிடிப்புகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகளின் தேடல் தவமல்லாமல் வேறு என்ன? எத்தனையோ ஆராய்சிகளின் முடிவாக வரும் பெரும் பலன் அவர்களின் தவத்தின் பலன் அல்லவா. தாடி பெரும் பொட்டு விபூதி அலங்காரம் காவி இவைகளை அணிந்திருப்போரை தவச்சீலர்கள் என்று நினைப்போம். உண்மை அப்படி அல்ல. சத்யம் அகிம்ஸை சகோதரத்வம் போன்ற ஆத்ம குணங்கள் இல்லாமல் மேற்சொன்ன விஷயங்களைத் தரிப்பது வெறும் வேஷமே.

இந்த வேஷங்கள் இல்லாமல் தூய்மையான வாழ்க்கை தவ வாழ்க்கையாகும். இப்படி வாழ்ந்து காட்டியவர்கள் நமது பாரத ரிஷிகள். ஒரு பேருண்மையைத் தெரிந்துகொள்ள அவர்கள் எத்தனை காலம் தவமியற்றினர் என்பதை அளக்கவே முடியாது. ''தபஸா ப்ரம்ம விஜிக்யாஸஸ்வ'' என்று ப்ருகு முனிவர் ப்ரம்மானந்ததைக் காண மேற்கொண்ட முயற்சியை தைத்ரீய உப நிஷத்தில் பார்க்கிறோம்.


வேதங்கள் அனைத்திலும் இப்படிப்பட்ட ரிஷிகள் அனந்தம். அவர்களது தவத்தால் வந்த, தெரிந்த உண்மைகளும் அனந்தம். அவற்றைப் பற்றிய ஆராய்ச்சிகள் இன்று நம் எல்லோருக்கும் தேவை.

அதெல்லாம் ரிஷிகள் சமாசாரம் என்று ஒதுக்கக் கூடாது. நம்மால் முடியும் என்று முயலவேண்டும். எந்தத் துறையானாலும் சரி குறிக்கோளை அடையாமல் விடக்கூடாது என்னும் மன உறுதியினால் இதைச் சாதிக்கலாம். தேவை ஈடுபாடு மன உறுதி. இவை இருந்தால் தவத்தினால் ஆகாதது உண்டா? பூஜை ஜபம் முதலிய சாதனங்களைக் கூட ஏகாக்ர சிந்தனையுடன் செய்தால் அதுவே தவமாகும். பலனும் கூடிவரும். பாவங்களும் நசியும். சித்தசுத்தி கிடைக்கும். ஞானத்திற்கு அடிகோலும். இப்படிப்பட்ட தவத்திற்கு இணையேது?

(தொடரும்)

"ஸ்ம்ருதி முக்தாபலம்" என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.
1.வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2.ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3.ஆஹ்னிககாண்டம் உத்தரபாகம் ,
4.ஆசௌசகாண்டம், 5.ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6.ஸ்ராத்தகாண்டம் உத்தரபாகம்,
7.திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்தகாண்டமும் என்ற 7 பாகங்கள்சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப்பெறுகின்றது.ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500
கூரியர் தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்
9600543996,7904244054, 9003845456,9710765203

குறிப்பு :

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# ஆசாரக் கோவை

## ந.ரா. முருகவேள்

### நீராடுதல்

*கடவுள் வழிபாடு செய்யத் தலைப்படும் போதும், தீய கனவுகள் கண்ட இடத்தும், தூய்மைக் குறைவு நேர்ந்தபொழுதும், உணவை வாந்தி செய்த இடத்தும், தலைமுடியை களைந்த இடத்தும், உணவு கொள்வதற்கு முன்பும் படுக்கையில் நெடுநேரம் தூங்கியபின்பும், இணைவிழைச்சு செய்த பிறகும், தூய்மையற்ற பிணியாளர்கள் முதலியோனத் தீண்டியவிடத்தும், மலசலம் கழித்த காலத்தும் யாவரும் இன்றியமையாது நீராடுதல் வேண்டும்.*

*தலையில் தடவிய எண்ணெயை எடுத்து உடலின் வேறு பகுதிகளில் தேய்த்தல் கூடாது. பிறர் உடுத்த அழுக்கு ஆடையையும், பிறர் அணிந்த செருப்பையும் நாம் தீண்டுதலும் ஆகாது.*

*நீரில் நம் நிழலை விரும்பி நோக்குதலும், தரையைக் கீறுதலும், இராக் காலத்தில் மரத்தின் அடியில் சென்று இருத்தலும் குற்றங்களாகும். நீராடும் காலத்தில் நெடுநேரம் நீந்தி நீர்நிலையைக் கலக்குதலும், எச்சிலை உமிழ்தலும், நீரில் மூழ்கி நெடுநேரம் மூச்சடக்கி இருத்தலும், விளையாடுதலும், தலையை விடுத்துக் கழுத்தளவில் மட்டும் குளித்தலும் குற்றங்களாகும். நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்னும் ஐந்து பூதங்களையும், அந்தணர் பசுக்கள் ஞாயிறு, திங்கள் முதலியவற்றையும் நாம் இகழ்தல் கூடாது.*

### உடையுடுத்தல்

*ஆடை அணிதல் நாகரிகத்தின் அடையாளம். ஆடை அணிதற்குரிய சில விதிகளையும் ஆசாரக் கோவை கூறுகின்றது. நீராடும் போது ஆடையில்லாமல் இருத்தல் கூடாது. இடுப்பில் ஆடை ஒன்றை அணிந்து கொண்டே நீராடுதல் வேண்டும். உணவு கொள்ளும்போது ஒற்றை ஆடை அணிந்திருத்தல் கூடாது; . தோளில் மேலாடை ஒன்றும் அணிந்திருத்தல் வேண்டும். உடுத்த ஆடையைத் துவைக்கும்போது அதனை நீர்நிலையில் பிழிதல் கூடாது. அறிஞர் கூடிய அவைக்களத்திற்குச் செல்லுங்கால் மேலாடையை நீக்கி, ஓர் ஆடையை மட்டும் உடுத்துச் செல்லுதல் ஆகாது. இது நம் முன்னோர்கள் கண்ட ஒழுக்க முறையாகும்.*

## உண்ணும் முறை

மனித வாழ்க்கைக்கு உணவு முக்கியம். ஆதலின் உண்ணும்போது நாம் சில நல்லொழுக்க முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். உண்ணுவதற்கு முன் நீராடுதல் வேண்டும். அல்லது கை கால்களைக் கழுவுதல் வேண்டும். உண்ட பிறகு வாயை நன்கு தூய்மையுறக் கொப்பளித்துக் கழுவுதல் வேண்டும். உண்ணுவதற்கு முன்பு உண்கலத்தைச் சுற்றி நீர் இறைத்து, இறைவனைத் தியானித்து வழிபட்டு உண்ணுதல் வேண்டும். உணவு கொள்ளுவதற்கு நெடுநேரத்தை வீணிற் போக்குதல் முறையன்று. கால்கழுவிய நீரின் ஈரம் உலருவதற்கு முன்பே உண்ணத் தொடங்குக. கால் கழுவிய ஈரம் காயாமல் படுக்கைக்குச் செல்லுதல் ஆகாது. உண்ட பின்னர்ச் சிறிது நேரம் கழித்தே உறங்கப் புகுதல் நலம். உண்ணும்பொழுது கிழக்கு முகமாக அமர்க. தூங்கி விழாமலும், அசைந்து ஆடாமலும், வீண்பேச்சுப் பேசாமலும், வேறு எதனையேனும் சிந்தித்துக்கொண்டு இராமலும் சோறு முதலியன சிதறிக் கீழே விழாமலும், நல்ல முறையில் அமர்ந்து நன்றாகச் சுவைத்து மென்று உணவு கொள்ளுதல் நலம் பயக்கும். உண்ணுவதற்கு முன்னர் விருந்தினர்கள், வயதானவர்கள், பசுக்கள், பறவைகள், சிறு குழந்தைகள் ஆகியவர்களை முதலில் உண்ணச் செய்தல் வேண்டும். அதற்குப் பின்னரே நாம் உண்ணுதல் முறை. ஒழுக்கத்தில் தவறாதவர்கள் இந்த நெறியைக் கடைப்பிடிப்பார்கள்.

வாயிற்படிக்கு நேராக இருந்து உண்ணுதலும், வாயிற்படிக்கு நேரே கட்டிலிட்டுப் படுத்தலும் குற்றமாகும். படுத்துக்கொண்டே உண்ணுதல், நின்று கொண்டே உண்ணுதல், வெள்ளிடை (மைதானம்) ஆன இடத்தில் உண்ணுதல், சுவையை விரும்பி அளவுக்கு மேல் உண்ணுதல், படுக்கும் கட்டிலின் மேலிருந்து உண்ணுதல் முதலியன குற்றங்களாகும். உண்ணும்பொழுது நமது வரிசையில் நம்மைவிடப் பெரியவர்கள் இருந்தால், அவர்கள் உண்ணுவதற்கு முன்னர் நாம் உண்ணுதலும், அவர்கள் எழுந்திருப்பதற்கு முன்னர் நாம் எழுந்திருத்தலும், அவர்களை இடித்துக்கொண்டு நெருக்கமாக இருத்தலும் கூடா. உண்ணும் போது இனிப்புடைய பண்டங்களை முதலிலும், கசப்பான பண்டங்களை இறுதியிலும், ஏனைய சுவையுடைய பண்டங்களை இடையிலும் உண்ணுதல் முறையாகும். நீர் அருந்துங்கால் இரண்டு கைகளையும் சேர்த்துப் பிடித்து அருந்துதல் ஆகாது. பெரியோர்கள் கொடுக்கும் பொருளை ஒற்றைக் கையினால் வாங்குதலோ, நாம் அவர்க்கு ஒன்றை ஒற்றைக் கையால் கொடுத்தலோ கூடாது. நம் உடம்பில் எங்கேனும் தினவு எடுத்தால் இரண்டு கைகளாலும் விகாரமாகச் சொறிதல் கூடாது.

(தொடரும்)

# ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் 3 வது வார்ஷிக ஆராதனை



*26.03.2021 வெள்ளிக்கிழமை பால்குண சுத்த த்ரயோதசி தினத்தன்று ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் 3வது வார்ஷிக ஆராதனை விழா காஞ்சிபுரம் ஸ்ரீமடத்தில் நடைபெற்றது. ஆராதனையை முன்னிட்டு மூன்று நாட்களுக்கு வேதபாராயணம், பாஷ்ய பாராயணம், வாக்யார்த்த ஸதஸ் மற்றும் ஸங்கீதாஞ்சலி ஆகியவை நடைபெற்றது.*

*ஆராதனை அன்று காலை முதல் ஸ்ரீ பெரியவாள் ப்ருந்தாவனத்தில் விசேஷ அபிஷேக, அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. மஹாருத்ரம், சண்டி, லோக க்ஷேமத்தை முன்னிட்டு காம்யார்த்த ஹோமங்கள், ஏகாதச ருத்ர ஜபம் ஆகியவை நடைபெற்றன. ஹோம கலசங்கள் ப்ருந்தாவன ப்ரதக்ஷிணமாக எடுத்து வரப்பட்டு ஸ்ரீ பெரியவாள் அவர்களால் ப்ருந்தாவனத்திற்கு அபிஷேகம் செய்யப்பட்டு மஹாதீபாராதனை நடைபெற்றது. திருமலை திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து சிறப்பு ப்ரஸாதங்கள் எடுத்துவரப்பட்டு ப்ருந்தாவனத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதேபோல் காஞ்சி காமாக்ஷி அம்மன் மற்றும் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் கோவில் ப்ரஸாதங்களும் வழங்கப்பட்டன.*

*முன்னதாக ஸ்ரீ பெரியவாள் அவர்கள் ஆராதனைக்காக ப்ரத்யேகமாக நிர்ணயிக்கப்பட்டிருந்த 32 வேத விற்பன்னர்களுக்கு வஸ்திரம் வழங்கினார்கள். பிறகு சுமார் 50 இசைக்கலைஞர்கள் பஞ்சரத்ன கீர்த்தனைகளை கோஷ்டி கானமாக இசைத்தனர்.*

*ஆராதனை ப்ராம்மணர்கள் ஸ்ரீ காமாக்ஷி கோவில் குளத்தில் ஸ்நானம் அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பசுமாடு, மங்கள வாத்யம், கௌரி காளை, குடை, தீவட்டி போன்ற மரியாதைகளோடு ஊர்வலமாக ஸ்ரீமடத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.*

*சுமார் 2.00 மணியளவில் தீர்த்த நாராயண பூஜை நடைபெற்றது. ஆராதனை ப்ராம்மணர்களுக்கு தகுந்த ஸம்பாவனை மற்றும் குடை, தடி, விசிறி, ஆசனம் பாதரக்ஷை முதலியன வழங்கப்பட்டன. பிறகு பக்தர்களுக்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஆராதனை ப்ரஸாதமாக அக்ஷதை வழங்கினார்கள். முன்னதாக வேத சதஸில் பங்கேற்ற பண்டிதர்களுக்கும் வேத பாராயணத்தில் பங்கேற்ற வைதீகர்களுக்கும் ஸம்பாவனை வழங்கப்பட்டது. மாலை 6.00 மணி அளவில் ஸ்ரீ பெரியவாள் ப்ருந்தாவன வளாகத்தில் ஸ்வர்ண ரத ஸேவை நடைபெற்று சிறப்பு ஆரத்தி காண்பிக்கப்பட்டது.*

# ஸ்ரீமடம் முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி



03. 03. 2021 அன்று, ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், காலை ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரர் பூஜையை 10 மணிக்குள் முடித்து, ப்ரசித்தி பெற்ற ஏகவீராம்பாள் கோவில் கும்பாபிஷேகத்தினை தலைமை ஏற்று நடத்தி வைத்தார்கள். பின்பு திருவானைக் கோவிலிருந்து புறப்பட்டு, வழியில் திருச்சி BHEL நிறுவன சத்சங்கம் உள்ளிட்ட பல இடங்களுக்கு விஜயம் செய்து, தொடர்ந்து, பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், திருவையாறு அருகே உள்ள, ஈச்சங்குடி க்ராமத்திற்கு விஜயம் செய்து, அங்கு உள்ள பாடசாலை, மற்றும் ஸ்ரீ மடம் கிளையாக தற்பொழுது உள்ள, பூஜ்யஸ்ரீ ஜகத்குரு மஹாஸ்வாமிகளின் பூர்வாஸ்ரம தாயார் பிறந்த வீட்டிற்கு விஜயம் செய்தார்கள்.

அன்றிரவு, கும்பகோணத்தை வந்து அடைந்தார்கள், அந்த ஊரின் வேத வித்வான்கள், மற்றும், கும்பகோணவாசிகள், ராஜா வேத பாடசாலை அருகே, பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்றனர்.

பூஜ்ய ஸ்ரீ பெரியவர்களை அங்கிருந்து முறையாக, வெகு விமரிசையாக, ஊர்வலமாக சங்கர மடத்திற்கு, நாதஸ்வரம், வேத பாராயணம், யானை, மற்றும், குதிரையுடன் அழைத்துச் சென்றனர்.

கோலாஹலமான உத்ஸாஹத்துடன், மங்கள வாத்யம், வாண வேடிக்கையுடன் இந்த ஊர்வலம் நடந்தேறியது.

ஸ்வாகத பத்ரம் படித்து, சமர்ப்பணம் செய்யப்பட்ட பின் பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், பக்தர்களுக்கு அனுக்ரஹ பாஷணம் அளித்தார்கள்.

கும்பகோணம் சங்கர மடம், ஒரு வரலாற்று சிறப்பு மிக்க இடமாகவும், 62, 63, மற்றும் 64- ஆவது ஆசார்யார்களின் அதிஷ்டானங்களை உடையதாகவும் உள்ளது.

பூஜ்யஸ்ரீ மஹாஸ்வாமிகள் இங்கு 1907 ப்லவங்க, 1909 ஸௌம்ய, 1910 ஸாதாரண, 1914 ஆனந்த, 1915 ராக்ஷஸ, 1916 நள, 1917 பிங்கள, 1918 காலயுக்தி, 1939 ப்ரமதி, 1946 வ்யய வருடங்களில் சாதுர்மாஸ்ய வ்ரதம் அனுஷ்டித்திருக்கிறார்கள்.

04. 03. 2021 அன்று, பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் மன்னார்குடியில் இருக்கும் சங்கர மடத்திற்கு விஜயம் செய்தார்கள்.

அதைத் தொடர்ந்து, மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி திருக்கோவிலுக்கு விஜயம் செய்தார்கள். பக்தர்கள் வெகு விமரிசையாக ஏற்பாடு செய்த குதிரைகள் பூட்டினாற்போல் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில், பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள் ஏறிக்கொண்டு, வரவேற்பு விழாவில் பங்கேற்றார்கள்.

ஹரித்ரா நதியில் தீர்த்தப் ப்ரோக்ஷணம் செய்து கொண்ட பிறகு, பூஜ்ய ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் திருக்கோவிலுக்கு பூர்ணகும்பம், பரிவட்டம், மாலை மரியாதையுடன் அழைத்துச் செல்லபட்டார்கள்.

திருக்கோவிலில் ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமிக்கு சாமரம் வீசி தரிசனம் செய்தார்கள். இவ்வாறாக ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீராஜகோபால ஸ்வாமிக்கு மங்களாசாஸனம் செய்யும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடந்தது.

அதைத் தொடர்ந்து குன்னியூர் பண்ணை மற்றும் எஸ்டேட் அய்யங்கார் அவர்களின் இல்லங்களுக்கு விஜயம் செய்து, கும்பகோணம் ஸ்ரீமடத்திற்கு திரும்பும் வழியில், ஆலங்குடியில் ஆஞ்சநேய ஸ்வாமி திருக்கோவில் வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சகடபுரம் மடத்திற்கு அவர்களின் அழைப்பை ஏற்று விஜயம் செய்து, பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார்கள்.

அதனை அடுத்து திப்பிராஜபுரம் க்ராமம் விஜயம் செய்து, அக்ரஹாரம் முழுவதும் நடந்து பக்தர்கள் அளித்த பூர்ண கும்ப மரியாதையை ஏற்றுக்கொண்டார்கள்.

அதைத் தொடர்ந்து, ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸாங்க வேத பாடசாலைக்கு விஜயம் செய்த பிறகு, ஸமீபத்தில் கும்பாபிஷேகம் நடந்தேறிய, ஸ்ரீ ருக்மிணீ ஸமேத வேணு கோபாலஸ்வாமி திருக்கோவில் மற்றும் கும்பாபிஷேகத் திருப்பணி நடந்து கொண்டிருக்கும், அருள்மிகு அபிராமி அம்பாள் ஸமேத ஸ்ரீ விக்ரமசோளேஸ்வர ஸ்வாமி திருக்கோவிலுக்கும் விஜயம் செய்தார்கள். இவையனைத்தையும் முடித்துக் கொண்டு இரவு 12 மணியளவில் கும்பகோணம் ஸ்ரீமடத்திற்கு திரும்பினார்கள்.

திப்பிராஜபுரம் க்ராமமானது, திருமலைராஜன், மற்றும் முடிகொண்டான் ஆற்றங்கரையில் இருக்கின்றது. மேலும் இங்கு பல வருடங்களுக்கு முன்பாக

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் ஆசார்யார்கள் 20 நாட்களுக்கு தங்கியிருந்து நித்ய பூஜைகள் செய்திருக்கிறார்கள்.

06. 03. 2021 அன்று, ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் 66-ஆவது ஆசார்யாளான, பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி VI சங்கராசார்ய ஸ்வாமிகளின் ஆராதனை, மாக க்ருஷ்ண அஷ்டமியை முன்னிட்டு, கும்பகோணம் ஸ்ரீ மடத்தில், பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் முன்னிலையில் சிறப்பாகநடைபெற்றது.

ஸ்ரீ ஆசார்யாள், உதயம்பாக்கம் க்ராமம், செங்கல்பட்டு மாவட்டத்தில் பிறந்தார்கள். அவர்கள் அத்வைத வேதாந்த சாஸ்த்ரத்தை பராமரித்து, அதன் கல்வியை ஊக்குவிப்பதற்கு, அத்வைத சபையை நிறுவினார்கள்.

அந்த உதயம்பாக்கம் க்ராமமானது, காஞ்சீ மடத்தின் ஒரு பூர்வாசார்யர்களுக்காக, க்ருஷ்ண தேவராயரால் நன்கொடையாக அளிக்கப்பட்டது.

இந்த ஆசார்யாள் தான், தனது திண்டிவனம் சாதுர்மாஸ்யத்தின் போது, ஸ்ரீ ஸ்வாமிநாதனை (காஞ்சீ மஹாஸ்வாமி அவர்களை), காஞ்சீ மடத்தின் வருங்கால ஆசார்யாளாக அடையாளம் கண்டு கொண்டவர்கள்.

ஆற்காடு மாவட்டம், கலவை க்ராமத்தில் அவர்கள் 1907-ல் முக்தி அடைந்தார்கள்.

- தர்மத்திற்காக அந்த ஆசார்யாள் செய்த, முக்யமான பல சேவைகளை இந்த திருநாளில் நினைவு கூறப்பட்டது.
- ஸ்ரீமடத்திற்குப் பழைய தஞ்சாவூர் ஜில்லாவில் சொந்தமான ஸ்தலங்கள் இருக்கும் ஆயிரம் க்ராமங்களுக்கும், தொண்டை மண்டலத்திலிருந்த அனேக இடங்களுக்கும் ஆனை மீதேறி அம்பாரியிலமர்ந்து முப்பது வண்டிகள். குதிரைகள், ஒட்டகங்கள், 200 பரிஜனங்கள் உடன் வர விஜய யாத்ரை செய்தவர்கள்.
- ஆயிரம் க்ராமம் ஸ்வாமி என்று போற்றப்பட்டவர்கள்
- தாம் இளையோராக இருந்தபொழுதே 1894ம் ஆண்டு கும்பகோணத்தில் அத்வைத ஸபையை ஸ்தாபித்தவர்கள்.
- 1892ம் ஆண்டு வாஞ்சியூர் தேவஸ்தானம் மற்றும் எஸ்டேட் சொத்துகளை ஏற்று ஸ்ரீமடத்துடன் சேர்த்தவர்கள்.

- இவர்களைப் போற்றிப் பணிந்து திருவிதாங்கூர், கொச்சி, தஞ்சை மன்னர்களும், திருநெல்வேலி எட்டையபுரம் மற்றுமுள்ள ஸம்ஸ்தானாதிபதிகளும் ஸமர்ப்பித்திருக்கும் காணிக்கைகள் மற்றும் கடிதங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் கணக்கில..

- பாண்டிச்சேரி ஃப்ரெஞ்ச் அரசாங்கம் இவர்களது விஜயத்தின்போது எடுத்த புகைப்படத்தை தபால் அட்டையாக வெளியிட்டது.

- இவர்களது இளமைப் பருவத்தில், ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் காசி ஹனுமந்த கட்டம் கிளை மடத்தின் மஹந்த் ஆக இருந்த ஸ்ரீக்ருஷ்ணானந்த தீர்த்த ஸ்வாமிகள் என்பார். தென்னகம் வந்து இவர்களுக்கு கார்டியனாக இருந்து கொண்டு ஸ்ரீமடத்தின் பணிகளை ஏற்றுப் போற்றி வந்துள்ளார் என்பதும் ஸ்ரீமடத்து ஆவணங்களில் கண்டது.

அன்று மாலை, பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், உமையாள்புரம் க்ராமத்திற்கு விஜயம் செய்தார்கள். புண்ய நதியான காவேரீயில் அனுஷ்டானம் செய்து, ஸ்ரீ ஆசார்யாள், ஸ்ரீ விநாயகர் கோவில், பாரதி குழந்தைகள் பள்ளி, மேல் நிலைப் பள்ளி, புதிய யாத்ரி நிவாஸ், அண்மையில் தொடங்கவிருக்கும் புதிய பாடசாலை, மற்றும், ஸ்ரீ குங்கும அம்பாள் ஸமேத ஸ்ரீ காசி ஸ்ரீவிஸ்வநாதஸ்வாமி திருக்கோவிலுக்கும் விஜயம் செய்தார்கள்.

09. 03. 2021 புண்ய தினத்தன்று, பூஜ்யஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஜெயந்தி மஹோத்ஸவம், கும்பகோணம் ஸ்ரீ மடத்தில், வெகு விமரிசையாக, நடைபெற்றது.

பல்வேறு கோவில்களின் ப்ரஸாதங்கள், பூஜ்யஸ்ரீ ஆசார்யாளுக்கு வழங்கப்பட்டது. பக்தர்களனைவரும், ஆசார்யாளுக்கு, ஹாரத்தி காண்பித்து, அனுக்ரஹத்தை பெற்றுக்கொண்டனர்.

அன்று நடைபெற்ற விசேஷ ஹோமங்கள் மற்றும் இஷ்டி பூர்ணாஹுதி, பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் நடைபெற்று, அந்த புண்ய கலச தீர்த்தங்கள், ஸ்ரீ பெரியவர்களுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது.

அன்று சுவாஸினி பூஜை, தம்பதிபூஜை, கன்யா பூஜை மற்றும் வடுக பூஜையும் சிறப்பாக நடந்தது. ஸ்ரீ பெரியவர்கள், கும்பகோணம் ஸ்ரீ மடத்திலுள்ள, காஞ்சீ காமகோடி பீடத்தின் 62, 63 மற்றும் 64-ஆவது ஆசார்யார்களின் அதிஷ்டானங்களில், விசேஷ பூஜைகள் செய்தார்கள். மாலை, பூஜ்யஸ்ரீ பெரியவர்களுக்கும், மந்த்ரபுஷ்ப கோஷங்களுடன், புஷ்பாஞ்சலி ஸ்ரீமடத்தில்நடைபெற்றது.

அதன் பிறகு, ராம மந்திரத்தில், பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், தனது குரு மற்றும் பரம குரு அவர்களின் பாதுகைகளுக்கு ஸ்வர்ணபாத பூஜை செய்த பிறகு, பூஜ்யஸ்ரீ பெரியவர்களுக்கும் ஸ்வர்ணபாத பூஜை நடைபெற்றது.

பக்தர்கள் அந்த நன்னாள் முழுவதும், ஜெயந்தி மஹோத்ஸவங்களில் ஆனந்தமாக கலந்து கொண்டு, பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகளின் தரிசனம் பெற்று, அருளாசியை பெற்றுக் கொண்டார்கள்.

10. 03. 2021 அன்று, பூஜ்யஸ்ரீ பெரியவர்களின் முன்னிலையில், அருள்மிகு த்ரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீ விருபாக்ஷீஸ்வர ஸ்வாமி திருக்கோவில், செருகுடி க்ராமத்தில், மஹாகும்பாபிஷேகம், சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை, ஸ்ரீசந்த்ரமௌளீஸ்வர ஸ்வாமிக்கு ப்ரதோஷ பூஜை பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள் செய்தார்கள்.

11. 03. 2021 அன்று, மஹாசிவராத்ரி புண்யகாலத்தில், பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், 52 வருடங்களுக்குப்பிறகு கும்பகோணம் ஸ்ரீ மடத்தில், ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வர ஸ்வாமிக்கு, இரவு முழுவதும், தொடர்ந்து, நான்கு கால பூஜை செய்து, ஜகத்குருவானவர்கள், இந்த உலகனைத்திற்கும் அனுக்ரஹம் செய்தார்கள்.

13. 03. 2021 அன்று பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் உள்ள, ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின், 62, 63, மற்றும்,64th ஆசார்யார்களின், ப்ருந்தாவனத்தில், புஷ்பாபிஷேகம் செய்தார்கள். அதைத் தொடர்ந்து, அனுக்ரஹ பாஷணம் அளித்தார்கள்.

பிறகு, அன்று மாலை, SASTRA University கும்பகோணம் விஜயம்செய்து, கும்பகோணத்திலுள்ள National School விஜயம் செய்தார்க்ள்.

இன்றைய தினமானது ஆங்கில தேதி வழக்கப்படி ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் பிறந்த தினமாகும்.

14. 03. 2021 அன்று, ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின், 67th ஆசார்யாள், பூஜ்யஸ்ரீ மஹாதேவேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகளின், ஆராதனை, கும்பகோணம் ஸ்ரீ மடத்தில், பூஜ்யஸ்ரீ பெரியவர்களின் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. பூஜ்யஸ்ரீ மஹாதேவேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள், கலவையில் ப்ரபவ வருடத்தில், பங்குனி மாதம் ஸ்ரீ சுக்ல, ப்ரதம திதி அன்று முக்தி அடைந்தார்.

அன்று மாலை, பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், கும்பகோணத்திலுள்ள, ராம பஜனை மடம் விஜயம் செய்தார்கள். தமிழ்நாட்டு க்ராமங்களில், இது போன்ற

பஜனை கோவில்கள், மடங்கள், ராமர் மற்றும் பல தெய்வங்களின், தஞ்சாவூர் படங்களோடு, தெய்வீக கேந்த்ரங்களாக விளங்கி, முக்யமாக புரட்டாசி, மார்கழி போன்ற மாதங்களில், பல பக்தர்கள் கூடி பஜனைகள் செய்து வந்திருக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து, கும்பகோணத்திலுள்ள, கொட்டையூர் அருள்மிகு பந்தனாடு நாயகி சமேத ஸ்ரீ கோடீஸ்வர ஸ்வாமி திருக்கோவில் தர்சனம் செய்தார்கள், அடுத்து கும்பகோணம் அருகிலுள்ள, அலவந்திபுரம் க்ராமத்திற்கு விஜயம் செய்து பெருமாள்கோவில் தரிசனம் செய்து பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார்கள். மேலும் கங்காதரபுரம் கிராமம் விஜயம் செய்தார்கள்.

அதைத் தொடர்ந்து, அருள்மிகு மங்களாம்பிகா ஸமேத ஸ்ரீஆதிகும்பேஸ்ஸ்ரீவர ஸ்வாமி திருக்கோவிலுக்கு விஜயம் செய்தார்கள். அங்கு சம்ப்ரதாய முறைப்படி ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டு சிறப்பான முறையில் பரிவட்டம் மாலை மரியாதைகளுடன் ஸ்வாமி தரிசனம் செய்விக்கப்பட்டது. மேலும் ஸ்ரீமடத்தின் மூலம் நன்கொடையளிக்கப்பட்டு நடைபெற்று வரும் ஸ்ரீஆதிகும்பேஸ்வர ஸ்வாமி கோவில் திருத்தேர் திருப்பணிகளையும் ஸ்ரீ ஆச்சார்யஸ்வாமிகள் பார்வையிட்டார்கள்.

பின்பு கும்பகோணத்திலேயே ஸ்ரீமடத்தின் பக்தர்கள் பலரது இல்லங்களுக்கு விஜயம் செய்து, இரவு 10 மணியளவில் பூஜ்யஸ்ரீ ஸ்வாமிகள், கோவிந்தபுரம் ஸ்ரீ விட்டல் ருக்மிணி சம்ஸ்தானத்தை வந்தடைந்தார்கள். அங்கு ஸ்ரீ ஜயக்ருஷ்ண தீக்ஷிதர் தலைமையில் திரளான பக்தர்கள் ஸ்ரீஸ்வாமிகளை தரிசித்து அருளாசி பெற்றார்கள்.

15. 03. 2021 அன்று, பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், மாலை முகாமிலிருந்து புறப்பட்டு திருவிடைமருதூர் ஸ்ரீமடம்கிளைக்கு விஜயம் செய்தார்கள். அங்கு நடந்து கொண்டிருக்கும் புணருத்தாரண பணிகளை பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்கள். பின்பு, வேப்பத்தூர் க்ராமத்தில் உள்ள ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் சமேத ஸ்ரீகைலாஸநாதர் திருக்கோவில், மற்றும் ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோவிலையும் தரிசித்து, ப்ரார்த்தனை செய்து, அந்த க்ராமத்தின் வீதிகளில், நடந்து அங்குள்ள சில பக்தர்களின் இல்லங்களில் விஜயம் செய்து, அனுக்ரஹம் செய்தார்கள்.

அதை அடுத்து, 1600 ஆண்டுகளில் வாழ்ந்த, ஸ்ரீதர அய்யாவாள் அவர்களின் வீட்டிற்கு விஜயம் செய்தார்கள். ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாளின் மடத்தின் ஸம்ப்ரதாயப்படி, அய்யாவாள் அவர்கள் கங்காஷ்டகம் பாராயணம் செய்தபோது, அந்த வீட்டில் உள்ள கிணற்றிலிருந்து, கங்கை ஊற்றெடுத்ததாக ஐதீகம் இருக்கிறது. அவர்கள் மேலும் பல ஸ்தோத்ரங்களும், புத்தகங்களும் இயற்றி இருக்கிறார்கள்.

16 March 2021 அன்று, பௌமாஸ்ரீவினி புண்ணிய தினத்தை முன்னிட்டு, பூஜ்யஸ்ரீ பெரியவர்களின் முன்னிலையில், விசேஷ ஹோமங்கள் நடைபெற்றன. ஸ்ரீஆசார்யாள், இந்த விசேஷதினத்தை முன்னிட்டு, ஸ்ரீ சந்த்ரமௌளீச்வரர் பூஜையை முடித்தபின், வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் தீர்த்தப் ப்ரஸாதம் வழங்கி அருள் செய்தார்கள்.

அன்று மாலை, ஸ்ரீவிட்டல் ருக்மிணி சம்ஸ்தானத்திலுல்ள கோசாலை மற்றும் இதர இடங்களை பார்வையிட்டு ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரர் பூஜையை முடித்து, பின்பு இரவு 9 மணியளவில் ஸ்ரீமடம் முகாமிலிருந்து புறப்பட்டு நடந்து சென்று கோவிந்தபுரத்தில் உள்ள, ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின், 59th ஆசார்யாள், ஸ்ரீ பகவன்நாம போதேந்த்ராள் அவர்களின் ப்ருந்தாவனத்தை தரிசனம் செய்து, சிறப்பு பூஜைகள் செய்தார்கள். அங்கு அக்ரஹாரத்தில் பக்தர்களின் பூர்ணகும்ப மரியாதைகளை ஏற்று, சில கோவில்களுக்கு விஜயம் செய்தார்கள்.

ஸ்ரீ போதேந்த்ராளின், நாம சித்தாந்தத்தின் அடிப்படையில் தான், தென்னிந்தியாவில், பஜனை ஸம்ப்ரதாயம் வளர்ந்து வந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

17. 03. 2021 அன்று, பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், மணிக்குடி அருள்மிகு ப்ருஹன்நாயகீ ஸமேத பஞ்சவர்ணேஸ்வரர் திருக்கோவிலில் தர்சனம் செய்து கொண்டு, திருப்பனந்தாள் ஆதீனம் 21வதுபட்டம் ஸ்ரீகாசிவாசி முத்துகுமாரஸ்வாமி அவர்களின் 91வது ஜெயந்தியை முன்னிட்டு, திருப்பனந்தாள் காசீ மடத்திற்கு விஜயம் செய்தார்கள்.

17.3. 2021 புதன் கிழமை மணிக்குடி வரலாற்றில் பொன் எழுத்துக்களில் பதிய வேண்டி நாள். காலை சுமார் 8 மணி அளவில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், மணிக்குடி ஸ்ரீபஞ்சவர்ணேஸ்வரர் ஆலயத்துக்கு வருகை தந்து தரிசனம் செய்தார்கள்.

முதலில் அவர்களுக்கு ஆரத்தி, வானவெடி ஓசை, வேதம், மங்கள இசையுடன் ஸ்ரீ குருமூர்த்தி சிவாச்சாரியார் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்பு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சுவாமிகள் கோவிலில் உள்ள ராஜகோபர மண்டபத்தில் உள்ள கல்வெட்டில் 2019 கும்பாபிஷேகம் பற்றிய நிரல்களை படித்து தெரிந்து கொண்டார்கள்.

பின்பு ஸ்ரீ வர்ணித்து விநாயகர் பூஜை தீபாரதனை, முடித்தவுடன் கோவில் வரலாறு பற்றிய பேனரில் இருந்து விவரங்களை தெரிந்து கொண்டார்கள். அருகில் கோவிந்தபுரம் ஸ்ரீ விட்டல் மகராஜ் சுவாமிகள் வரலாறு விபரங்களை எடுத்து கூறினார்கள் .

பின்பு ஸ்ரீ பஞ்சவர்ணேஸ்வரர் சன்னதிக்கு வந்து ஜகத்குரு, ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆதிசங்கரர் மறுபிறவி ஸ்ரீஸ்ரீஸ்ரீ பாலபெரியவாள் தன் திருக்கரத்தால் பதினோரு லிட்டர் பசும்பால் மூலம் ஸ்ரீ ஈஸ்வர்க்கு ஸ்ரீ ருத்ரம் வேதகோஷம் முழங்க அபிஷேகம் செய்வித்தார்கள்.

பின்பு பிரகாரத்தில உள்ள ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி, ஸ்ரீ கோவிந்தராஜர், ஸ்ரீ பாலஆஞ்சநேயர், ஸ்ரீ மஹாகணபதி, ஸ்ரீ தருமசாஸ்தா, ஸ்ரீ செல்வமுத்துகுமாரர், ஸ்ரீ கஜலக்ஷமியை தரிசித்தார்கள்.

பின்பு கோவில் திருச்சபை மேடையில் வந்து அமர்ந்தார்கள் .

ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரியவர் அவர்களுக்கு டிரஸ்டிகள் சார்பாக வில்வம், துளசி , ஏலக்காய், எலுமிச்சை, ரோஜா மாலைகள், சால்வைகள் மூலம் சிறப்பான மரியாதை, மங்கள வாத்யம் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது .

பின்பு ஸ்ரீ ஸ்ரீ பெரியவர்கள் ஸ்ரீபஞ்சவர்ணேஸ்வரர் ஆலய வரலாற்றை வெளியிட்டார்கள். அதன் முதல் பிரதியை ஸ்ரீ விட்டல்தாஸ் மஹராஜ் சுவாமிகள் பெற்றுக் கொண்டார்கள்.

கோவில் டிரஸ்டிகள் சார்பாக ஆடிட்டர் கல்யாணராமன் பெற்றுக்கொண்டார். ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரியவர்கள் கோவில் வளாகத்தில் கட்டப்பட்டுள்ள ஸ்ரீ ஆகம வேத பாடசாலை உடன் ஆரம்பமாக அனுக்கிரஹம் செய்தார்கள் .

பின்பு ஸ்ரீ ஸ்ரீ பெரியவர்கள் அங்கு வந்த அனைவருக்கும் அருளாசி வழங்கி பிரசாதம் அருளினார்கள்.

பின்பு அங்கு உள்ள கோ சாலைக்கு சென்று அங்கு உள்ள பசுக்கள், கன்றுகளுக்கும், அகத்திக்கீரை அளித்து ஆசிர்வாதம் செய்தார்கள்.

ஸ்ரீ ஸ்ரீ பெரியவர்கள் அங்கு இருந்த அனைவருக்கும் ஆசீர்வாதம் அனுக்ரஹம் செய்து விட்டு திருப்பனந்தாள் சென்று ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலை மாமுனிவருக்கு அவர்களின் 91 பிறந்த நாளுக்கான வாழ்த்துக்களை நேரில் தெரிவித்து விட்டு கோவிந்தபுரம் சென்றடைந்தார்கள்.

மணிக்குடி முத்திராதிகாரி லேட் ஸ்ரீ ரமணி அய்யர் குடும்பத்தார் சார்பாக ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியார் சுவாமிகளுக்கு மணிக்குடி வருகை புரிந்து ஸ்ரீ சுவாமி தரிசனம் செய்து, பொது ஜனங்களுக்கு அனுக்கரஹம் செய்தமைக்காக, ஆடிட்டர் கல்யாணராமனின் அநேக கோடி நமஸ்காரங்கள்.

மேலும் ஸ்ரீ மடம் கார்யம், அலுவல் நிர்வாகம் ஸ்ரீ சுந்தரேஷ்வர அய்யர், மணிக்குடி1997-2014 பாடசாலை ஆசிரியர், ஸ்ரீ ரமண தீக்ஷிதர், அகரதிருமாலம் ஸ்ரீ வைத்தியநாதன் மற்றும் ஸ்ரீ மடத்திலிருந்து வந்தவர்கள், சிவாச்சாரியார்கள், மங்களவாத்தியம் , இந்த நிகழ்ச்சியை அருமையாக 19-3-2021 தினமலரில் வெளியிட்ட ஆசிரியர் ஸ்ரீ ராம்பத்ரன் அவர்களுக்கும், வரவேற்பதற்க்கு வந்த அனைவருக்கும் நன்றி

18. 03. 2021 அன்று மாலை, ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் முகாமிலிருந்து புறப்பட்டு, பந்தநல்லூர் க்ராமம் அருகே அமைந்துள்ள, கருப்பூர் க்ராமத்திற்கு விஜயம் செய்தார்கள். அங்கு, AKR பண்ணை உரிமையாளர்களான, திரு. ஸந்தானகோபாலன் (சென்னை RR சபா-வை நடத்தி வருபவர்) குடும்பத்தினர் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளை சிறப்பாக வரவேற்று, அவர்களது இல்லத்திற்கு அழைத்துச் சென்று, பாத பூஜை செய்து, வழிபாடு செய்தனர். பின்பு ஊர் மக்கள் அனைவருக்கும் ஆசார்ய ஸ்வாமிகள், அருளாசி வழங்கினார்கள்.

அங்கிருந்து புறப்பட்டு, ஸத்குரு ஸ்வாமிகளின் அவதார ஸ்தலமான மருதானல்லூருக்கு விஜயம் செய்தார்கள். அங்கு TVS சில்ப பாடசாலைக்குச் சென்று, மாணவர்களுக்கு அருளாசி வழங்கினார்கள்.

19. 03. 2021 அன்று, ஸ்ரீஆசார்யர்கள், இரவு ஸ்ரீ ருக்மிணி அம்பாள் சமேத ஸ்ரீபாண்டுரங்க ஸ்வாமி ஆலயத்தை தரிசித்தார்கள்.

20. 03. 2021 அன்று காலை ஸ்ரீமடம் முகாம், கோவிந்தபுரத்திலுள்ள ஸ்ரீவிட்டல் ருக்மிணி சம்ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு, ஸ்ரீபகவன் நாம போதேந்த்ராளின் அதிஷ்டானம் அமைந்துள்ள ஸ்ரீமடத்தை அடைந்து அன்றைய தினம் மூன்று காலபூஜைகளும் அங்கு நடைபெற்றது.

மாலை சுமார் 3 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு மாயவரம் சென்று அங்கு பூர்ண கும்பங்களை ஏற்றுக் கொண்டு, ஆனந்ததாண்டவபுரம் கிராமத்திற்கு விஜயம் செய்தார்கள். அங்கு ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர சரஸ்வதிசங்கராசார்ய ஸ்வாமிகள் அனுஷ்டான கேந்த்ரம் மற்றும் யாத்ரி நிவாஸ் தொடங்கி பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார்கள். பின்பு விழுப்புரம் வழியாக ஸ்ரீமடம் முகாமானது

நள்ளிரவு சுமார் 1 மணியளவில் காஞ்சிபுரம் ஸ்ரீமடத்தை வந்தடைந்தது. தொடர்ந்து காஞ்சிபுரத்தில் தங்கியிருந்து ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர ஸ்வாமி பூஜையை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் செய்து வருகிறார்கள்.

# பீஷ்மஸ்தவராஜம் - 4

*வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்*

पुराणे पुरुषम् प्रोक्तम् ब्ह्म प्रोक्तम् युगादिषु ।
क्ष्ये सम्कर्ष्णम् प्रोक्तम् तमुपास्य उपास्यामहे ।। १८

**புராணே புருஷம் ப்ரோக்தம் ப்ரம்ம ப்ரோக்தம் யுகாதிஷு**
**க்ஷயே ஸங்கர்ஷனம் ப்ரோக்தம் தமுபாஸ்ய உபாஸ்யாமஹே || 18**

*புராணத்தில் புருஷன் என்று சொல்லப்படுகின்ற, ஒவ்வொரு யுகத்திலும் ப்ரம்மம் என்று சொல்லப்படுகின்ற அனைத்து அழிவை செய்யும் ஸங்கர்ஷணன் என்று சொல்லப்படுகின்ற உபாஸனை தெய்வமான வாஸுதேவனை உபாஸிக்கிறோம்.*

यमेक्म् बहुदात्मानम् प्रातुर्भतम् अधोक्षजम् ।
नान्यभक्तान् क्रियावन्दे यजन्ते सर्वकामदम् ।। १२

**யமேகம் பஹுதாத்மானம் ப்ராதுர்பூதம் அதோக்ஷஜம்**
**நான்யபக்தான் க்ரியா வந்தே யஜந்தே ஸர்வகாமதம் || 19**

*அவன் ஒருவனையே தன்னை பலவாறாகத் தோற்றுவித்துக் கொள்பவனாக அதோக்ஷஜனாக அறிந்து அவனிடம் மட்டுமே தங்கள் விருப்பங்களை நிறைவேற்றுபவன் எனும் எண்ணத்தோடு எல்லா யாகங்களிலும் பூஜிக்கிறார்கள். (ஸர்வம் ஸ்ரீக்ருஷ்ணார்பணமஸ்து)*

यमाहु: जगद;कोशम् यस्मिन् सन्निहिता प्रजा
यस्मिन् लोके स्पुरन्ती मे जले शकुनयो भेदा: ।। २०

**யமாஹு:ஜகத:கோஸம் யஸ்மின் ஸன்னிஹிதா ப்ரஜா:**
**யஸ்மின் லோகே ஸ்புரந்தீ மே ஜலே சகுனயோ பேதா: || 20**

*எவனை இவ்வுலகின் நிலையம் என்கிறோமோ எவனிடத்தில் ப்ரஜைகள் எல்லாரும் அடங்குவரோ எவனிடமிருந்து இந்த உயிர்கள் நீர் நிலைகள், நீர்வாழ் பறவைகள் போல் வெளிவருகின்றனவோ அவன் இந்த வாஸுதேவன்.*

ऋतमेकाक्षरम् ब्रह्म यत्त् सदसतो परम्।
अनादिमध्यर्यन्तम् न देवा नार्ष्यो विदुः ।। २१

**ருதமேகாக்ஷரம் ப்ரம்ம யத்தத் ஸதஸதோ:பரம்**
**அனாதிமத்யபர்யந்தம் ந தேவா நார்ஷ்யோ விது: || 21**

*மெய்மையான ஓரெழுத்து ப்ரம்மமாய் எந்த ஒன்று உள்ளதோ சத் அசத் இவற்றிற்கு அப்பாற்பட்டதும், ஆதி மத்யம் கிடையாதோ அதை தேவர்கள் ரிஷிகள் அறிய மாட்டார்கள்.*

यम् सुरासुर गन्धर्वा सिद्दा रिषिमहोरगा ।
प्रयता नित्यम् अर्वयन्ति परम् दुः खभेषजम् ।। २२

**யம் ஸுராஸுர கந்தர்வா: ஸித்தா ரிஷிமஹோரகா:**
**ப்ரயதா நித்யம் அர்சயந்தி பரம் துக்கபேஷஜம் || 22**

*எந்த ஒரு பெருமாளை தேவர்கள் சித்தர்கள் கந்தர்வர்கள் ரிஷிகள் நாகர்கள் முயன்று தினம் ஆராதிக்கிறார்களோ அந்த துக்கம் நீக்கும் பரம ஔஷதம் அந்த வாஸுதேவனே.*

अनादि निध्नम् देवमात्मयोनिम् सनातनम्
अपेक्ष्यम् अनभिग्येयम् हरिम् नारायणम् पभुम् ।। २३

**அனாதி நிதனம் தேவமாத்மயோனிம் ஸனாதனம்**
**அப்ரேக்ஷ்யம் அனபிக்யேயம் ஹரிம் நாராயணம் ப்ரபும் || 23**

*தோற்றமும் முடிவும் இல்லா எல்லா உய்ர்களுக்கும் உயர் நிலையாய் அழிவில்லாததாய் காண இயலாததாய் அறியலுமாகா ஹரி எனும் ப்ரபு இந்த வாஸுதேவனே.*

यम् वै विश्वस्यकर्तारम् जगतस्तस्थुषम् पतिम्
वदन्ति जगदो अध्यक्षम् अक्षरम् परम् पदम् ।। २४

**யம் வை விஸ்வஸ்ய கர்தாரம் ஜகதஸ்தஸ்துஷம் பதிம்**
**வதந்தி ஜகதோ அத்யக்ஷம் அக்ஷரம் பரம் பதம் || 24**

*எவன் இவ்வுலகின் கர்த்தாவோ எவன் இவ்வுலகின் நிலையமும் பதியுமாய் உலகின் முதலாய் அழிவில்லாததாய் உயர் நிலைக்கு உரியவன் என்று சொல்கிறார்களோ அவன் இந்த வாஸுதேவனே.* *(தொடரும்)*

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -12



பி. ஆர். கண்ணன்

ஸாதாரண சேனைவீரர்கள் தேவியின் வைபவத்தை சட்டென உணர்ந்துகொண்டு, ராஜாவுக்கு திரும்பத் திரும்ப அறிவுறை கூறுகின்றனர். ஆனால் ராஜா தன் மதத்தின் மயக்கத்தில் செவி சாய்க்கவில்லை. ரஜோ, தமோ குணங்கள் கட்டுக்கடங்காமல் வலுப்பதை அசுரர்கள் இருவர் சேர்ந்து நிகழ்த்திய அட்டூழியம் காட்டுகிறது. அதனைத் தகர்க்க, தேவியும் ஒருவரே இருவராக - கௌசிகீ (சண்டிகை) சிவப்பு வர்ணத்துடன் ரஜோ குணத்தை அழிப்பதிலும், காளிகை கருப்பு வர்ணத்துடன் தமோ குணத்தை நசிப்பதிலும் - முனைவதைப் பார்க்கிறோம். தேவியின் மாத்ருகணங்கள் (பொதுவாக எழுவராக ஸப்தமாத்ருகைகளாகப் போற்றப்படுபவர்) கூட உறுதுணையாக அமைவது ஸாதகனின் இடைவிடாத பெருமுயற்சியை வெளிப்படுத்துகிறது. ரக்தபீஜன் பல ரக்தபீஜர்களாக உருவேற்பது காமத்தின் ஸூக்ஷ்மத்தையும், அதன் உள்ளே பொதிந்துள்ள அதீத பலத்தையும், அது பலவாகப் பெருகி கட்டுக்கடங்காமல் போய், மேன்மேலும் வாஸனாபலத்தை வலுப்படுத்துவதையும் சுட்டிக் காட்டுகிறது. ஆகையால் ரஜோ தமோ குணங்களை எவ்வளவு கட்டுப்படுத்துகிறோமோ, அவ்வளவுக்கு ஆன்மீக முன்னேற்றம் வலுப்படும் என்று புலப்படுகிறது.

**ராஜா, வைச்யன் கதை**

ஸ்வாரோசிஷ மன்வந்தரத்தில் ஸூரதன் என்ற அரசன் யுத்தத்தில் தன் மந்திரிகளால் கைவிடப்பட்டு, தோல்வியடைந்து, மனம் உடைந்து வனம் புகுந்தான். அங்கு மேதஸ் என்ற ரிஷியைப்பார்த்தான். அங்கேயே தங்கினான். எந்த குடும்பம் அவனை முற்றிலும் துறந்ததோ, அந்த குடும்பத்தின் நினைவு அவனை கவலைக்குள்ளாக்கியது. அப்போது ஸமாதி என்ற வைஸ்யன் ஸூரதனைப்போலவே தன் குடும்பத்தினால் கைவிடப்பட்டு, அங்கு வந்து தன் கதையை ஸூரதனிடம் கூற, இருவரும் மேதஸ் ரிஷியை அணுகி, துக்க நிவாரண உபாய உபதேசம் தருமாறு பிரார்த்தித்தனர். ரிஷியானவர், **ஜ்ஞாநிநாமபி சேதாம்ஸி பரமா ப்ரக்ருதிஃ கில ந பலாதாக்ருஷ்ய மோஹாய ப்ரயச்சதி மஹீபதே ।।** தேவியின் மாயை ஞானிகளாலேயே கடக்கமுடியாதது, மனமயக்கத்தை தோற்றுவிப்பது; ஆகையால் தேவியை சரணடையுங்கள் என்று சொல்லி, தேவியின் நவாக்ஷர மந்திரத்தை உபதேசித்து, பூஜாமுறைகளையும் சொல்லிக் கொடுத்தார். ஸப்தசதி யந்திரத்தில், நவாக்ஷர மந்திரம் எழுதி பூஜை, நவாக்ஷர மந்திர ஜபம், தசாம்ச ஹோமம், தசாம்ச தர்ப்பணம், தசாம்ச பிராம்மண போஜனம், தினமும் சரித்திரத்ரய - தேவி மாஹாத்மியத்திலுள்ள மூன்று சரித்திரங்கள் - மது கைடப வதம், மஹிஷாஸூர மர்த்தனம், சும்ப நிசும்ப வதம் - பாராயணம், நவராத்திரியில் விசேஷ

பூஜை முதலான எல்லா முறைகளையும் ரிஷி விளக்கினார். ஸுரதனும், ஸமாதியும் ரிஷியிடம் நன்றிக்கடனைத் தெரிவித்து, பகீரதனுக்கு கங்கையைப்போல தங்கள் வாக்கினாலேயே நாங்கள் புனிதமடைந்தோம் என்றனர்.

இருவரும் கடும் தபஸ் செய்தனர்; ஒரு வருஷம் பழங்களே ஆகாரம், தியானம், பூஜை; இரண்டாவது வருஷம் காய்ந்த இலைகளே உணவு; அப்போது ஸ்வப்னத்தில் தேவி தரிசனம் தந்தாள். மூன்றாவது வருஷம் நீரே ஆகாரம். மூன்று வருஷங்களின் முடிவில் தேவி தரிசனம் கிடைக்காததால், அக்னி குண்டத்தில் பிராணத் தியாக முயற்சி செய்தனர். தேவி பிரத்யக்ஷமாகி, பிரஸன்னையாக, வரம் வேண்டச் சொன்னாள். ஸுரதன் இழந்த ராஜ்யம் வேண்டும் என்றான். ராஜ்யம் அந்த க்ஷணமே திரும்பக் கிடைத்தது. அவனுடைய மந்திரியும், சேனையும் அவனை அழைத்துப்போக வந்தனர். தேவி, பரம கிருபையுடன், தானாகவே, ஸுரதன் கேட்ட வரனுக்கு மிக மேலான வரனை அருளினாள். ஸுரதன் ஆயிரம் வருஷங்கள் இங்கு ராஜாவாக ஆண்டு, பிறகு அடுத்த ஜன்மத்தில் ஸூர்யஸாவர்ணி மனுவாகஆவான் என்று அருளினாள். மனுவின் ஸ்தானம் மிக உயர்ந்தது. ஸமாதி வைஸ்யன், ஜ்ஞாநம் மே தேஹி விரதம் மோக்ஷதம் பந்தநாஸநம் ந மோக்ஷம் தரவல்ல, ஸம்ஸார பந்தத்தை அறுக்கும், பவித்திரமான ஞானம் வேண்டும் என்று கேட்டான். தேவியும் அவ்வாறே அருளினாள். இச்சரித்திரத்திற்கும் வியாஸர் விசேஷ பலஸ்ருதி அருளியிருக்கிறார். ஸகல போகங்களும், மோக்ஷம் உள்பட கிடைக்கும் என்கிறார்.

மேதஸ் ரிஷியின் பெயரே அவருடைய மேதாவிலாஸத்தைக் காட்டுகிறது. வஸிஷ்டரே மேதஸ் ரிஷி என்பது சிலருடைய அபிப்பிராயம். ராஜாவாகிற ஸுரதன், தன் பெயருக்கேற்றாற்போல், ராஜ்யத்தில் ஆசை மிகுந்தவனாகக் காண்கிறான்; பூஜை, தபஸ் எல்லாம் செய்தும் ஞானத்தில் பிரவ்ருத்தி ஏற்படவில்லை. ஸமாதி வைச்யன், தன் பெயருக்கேற்றாற்போல், ஆன்மஞானத்தில் ஈடுபாடு அதிகம் கொண்டுள்ளான். இருவரும் ஒரே ரிஷியிடமிருந்து ஒரே உபதேசத்தைத்தான் பெற்றிருந்தனர். தபஸ் செய்ய ஆரம்பிக்கையில், ஒரே மனநிலையில் தான் இருந்தார்கள். தாங்கள் இழந்த ராஜ்யம், செல்வம் இவையே விஸ்வரூபம் எடுத்து ஆடின. ஆனால், தபஸ் முடிய முடிய, ராஜாவின் மன நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. வைஸ்யனுக்கோவெனில், அவன் விவேகம் உருவெடுத்து, வலுப்பெற்று, ஸம்ஸார விஷயங்கள் - குடும்பம், செல்வம் முதலியன - துச்சமாகத் தெரிந்தன. ஆன்மஞான வேட்கை பலமாக இருந்த காரணத்தினால் தான், அந்த ஞானத்தையே வேண்டிப் பெற்றான். இது ஆச்சரியம். ஸாதனையின்போது, நம் லக்ஷியம் துல்லியமாக உயரியதாக இருக்கவேண்டும், அதை அடையவேண்டிய மனவலிமையை நாம் பெற முயற்சிக்கவேண்டும் என்பது தெளிவாகிறது.


(வளரும்)

# சித்திரை மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 14/04/2021 | புதன் | மேஷ விஷு புண்யகாலம் |
| 21/04/2021 | புதன் | ஸ்ரீராம நவமி |
| 23/04/2021 | வெள்ளி | ஏகாதசி |
| 24/04/2021 | சனி | த்வாதசி |
| 25/04/2021 | ஞாயிறு | ப்ரதோஷ பூஜை |
| 26/04/2021 | திங்கள் | பௌர்ணமி பூஜை, சித்ரா பூர்ணிமா |
| 28/04/2021 | புதன் | அனுஷம் தேர் |
| 29/04/2021 | வியாழன் | அனுஷம் பாராயணம் |
| 30/04/2021 | வெள்ளி | மூலம் தேர் |
| 01/05/2021 | சனி | மூலம் பாராயணம் |
| 02/05/2021 | ஞாயிறு | உத்ராடம் தேர் |
| 02/05/2021 | ஞாயிறு | உத்ராடம் பாராயணம் |
| 04/05/2021 | செவ்வாய் | அவிட்டம் தேர் |
| 04/05/2021 | செவ்வாய் | அவிட்டம் பாராயணம் |
| 07/05/2021 | வெள்ளி | ஏகாதசி |
| 08/05/2021 | சனி | த்வாதசி |
| 09/05/2021 | ஞாயிறு | ப்ரதோஷ பூஜை |
| 14/05/2021 | செவ்வாய் | அக்ஷய த்ரிதியை, பலராமஜயந்தி |
| 16/04/2021, 23/04/2021, 30/04/2021, 07/05/2021 - 14/05/2021 வெள்ளிக்கிழமை பூஜை | | |
| | | |
| | | |

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

## M. S. ராமஸ்வாமி ஐயர்



ஆதிசங்கர பகவத்பாதரின் மறு அவதாரமே என்று அவதரித்திருக்கும் மஹா பெரியவாவைப் பற்றி என்னைப்போன்ற சாதாரண மனிதன் என்ன கூற முடியும்? போன ஜன்மாக்களில் நான் செய்த புண்ணியத்தால் அவரை தர்சிக்கவும் சில அனுபனங்களை ஆஸ்வாதிக்கவும் முடிகிறது. இதுவும் அவரது அனுக்ரஹமே.

1960ஆம் வருடம் இளையாத்தங்குடியில் புதுப்பெரியவருடன் முகாமிட்டிருந்தார்கள். நான் நாகப்பட்டினத்தில் வேலையாய் இருந்ததால் அவரை அடிக்கடி தர்சிக்கும் பாக்யம் கிடைத்தது.

அந்த சமயம் ஒரே ராசியில் எட்டு க்ரகம் சேர்க்கையால் வரும் கேடுகளை களைய ‘கோளறு திருப்பதிகம்’’படிக்க எல்லாரையும் உத்தரவிட்டார். அந்த சமயம் நாகையில் ப்ரும்மஸ்ரீ ராதாமங்கலம் ஆர். கே நாராயண சாஸ்த்ரிகள் என்பவர் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தை ஸ்லோகம் ஸ்லோகமாக அவைகளின் எல்லா வ்யாக்யானங்களையும் எடுத்துரைத்து நிஷ்காம்யமாக தானே ப்ரவசனம் செய்து கொண்டு வந்தார்கள். அவருக்கு தகுந்த ஸன்மானம் கொடுக்கத் தலைப்பட்டோம்.

என் வேலை பளுவினால் இதை ஸ்ரீ மடத்துக்குத் தெரிவித்தேன். வழக்கமாக உடனே வரவேண்டிய பதில் வரவில்லை. எனக்கோ பதை பதைப்பு. ஒரு நாள் தபாலில் பார்சல் ஒன்று வந்தது. அதில் உபன்யாஸருக்கு ஒரு கௌரீசங்கரம், ருத்ராக்ஷமும் இருந்தன.

இவைகளை அவருக்குத் தந்தபோது அவர் அழுதே விட்டார். நான் ரொம்ப நாள் கௌரீசங்கரம் கிடைக்க ப்ரார்த்தித்தேன், பெரியவா என் மனதில் உள்ளதைப் புரிந்துகொண்டு அனுக்ரஹம் செய்துள்ளார் என்று மனம் நெகிழ்ந்தார்.

இதன் பின் இளையாத்தங்குடியில் மகானை தர்சிக்கச் சென்றபோது ப்ரஸாதம் வந்ததா? அவரை எத்தனை நாளாகத் தெரியும்? என்றார் நாகை வந்தபின் 2 வருஷங்களாகத்தான் தெரியும் என்றேன். அதற்கு அவர் எனக்கு பல வருஷங்களாகத் தெரியும், மகா பண்டிதர், ஆடம்பரம் விரும்பாதவர். அதனால் தான் அவருக்கு என்ன பிடிக்குமோ அதை அனுப்பினேன் என்றார்.

இன்னொரு சமயம் அவரது தர்சனத்தின்போது ''வாராணசியில் மடம் கட்டுகிறோம். உங்கள் டிபார்ட்மென்டில் கொடுப்பார்களா? ஓர் அறைக்கு 10000 ரூபாய் ஆகிறது. நீங்கள் மாதச்சம்பளம் வாங்குபவர். ஆதலால் யாரையும் வற்புறுத்தி வாங்க வேண்டாம். மனமுவந்து தருவதை பணம் சேர சேர மடத்துக்கு அனுப்பு'' என்றார்.

நானும் அதைச்செய்து வந்தேன். ஒரு சமயம் காஞ்சியில் அவரைத் தர்சிக்கச் சென்றபோது எவ்வளவு சேர்த்திருக்கிறாய்? என்று வினவினார். நானும் பெரியவா குறிப்பிட்ட தொகைக்கு இன்னும் 1500 பாக்கி இருக்கும் என்றேன் அவர் இத்தோடு போதும் இனி யாரையும் கேட்க வேண்டாம். தட்டமுடியாமல் யாரேனும் தந்தால் வாங்கிகொள்'' என்றார்.

இதெல்லாம் ஆகி பல நாட்கள் சென்றபின் அவர் தங்கியிருந்த கொல்லா சத்ரத்திற்குச்சென்றோம். பெரியவர்கள் படுத்துக்கொண்டுவிட்டார். நாங்கள் எதிர் திண்ணையில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஒரு சிஷ்யர் வந்து கூப்பிட மொத்த வசூல் பற்றி சொன்னோம். அதில் ஆர்வம் காட்டாமல் ''யார் யார் பணம் கொடுத்தார்கள் எனும் விவரம் இருக்கிறதா என்றார் இருக்கிறது என்று கூறியவுடன் அவர்கள் பெயர்களை எல்லாம் வாசி, அதைக்கேட்டால் எனக்குப் புண்ணியம்'' என்றார். நாங்கள் வெல வெலத்துப்போனோம். எந்த தெய்வத்தை நினைத்தால் பாபங்கள் போகும் நற்கதி கிட்டுமோ அந்த தெய்வம் இவர்களின் பெயெரைக் கேட்டால் எனக்குப்புண்ணியம் என்று சொன்னார்கள் என்றால் அதை நாம் என்னவேன்று சொல்லுவது. அந்த மாகானின் பெருந்தன்மையும் மகிமையும் அளவில் அடங்கா. நாம் செய்த பாக்யம் இது.

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

## பாசம் எனும் சிலந்தி வலை

பந்தம், பாசம் என்று வலைக்குள் மனிதன் சிக்கி வெளியில் வராமல் தவித்து கொண்டிருக்கிறான் என்று பௌராணிகர் கூற அதென்ன அதிலிருந்து மீள அவ்வளவு கஷ்டமா என்று சிஷ்யன் கேட்க அவர் தொடர்ந்தார்.

ஒரு முறை நாரத மகரிஷி மகா விஷ்ணுவிடம் பந்தம் பாசம் மனிதனை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்று வினவ அவர் பூலோகம் சென்று மாயாசங்கரன் என்பவனைப் பார். அவனை எப்படியாவது வைகுண்டம் கொண்டு வா'' என்றார்.

நாரதரும், பிக்ஷு ரூபம் எடுத்துக் கொண்டு மாயாசங்கரனைப் பார்க்க அவன் இல்லம் வந்தார். யாசகருக்கு பிக்ஷை இட சித்தமாயிருந்த அவன் ''தேவரீர் என் இல்லாள் வெளியில் போயிருக்கைறாள், சற்று பொறுக்கவும் என்று கூறினான். அப்போது துர்முகி என்னும் பெயெரைக் கொண்ட அவன் மனைவியும் வந்தாள். செய்ய வேண்டிய ஆதித்யத்தை உணர்ந்த அவள் சிடுசிடுப்புடன் உணவு தயார் செய்து பிக்ஷுவுக்கு பரிமாற வந்தாள். மிகவும் சூடான உணவு தவறுதலாக அவள் காலில் விழுந்து கொப்புளங்களை உண்டாக்கியது. அதற்காக மாயாசங்கரனை இழித்தாள், பழித்தாள். அப்போதும் அவன் அவளைக் கண்டிக்கவில்லை. மாறாக அவளது பாதங்களுக்கு பணிவிடை செய்தான். நாரதர் தன் பணியை அவனிடம் கூற அவன் அப்புறம் வாருங்கள்''என்றான்.

சில வருடங்கள் கழிந்தன. நாரதர் மீண்டும் அவனிடம் வந்து குடும்ப பாரத்தை விட்டு வரச் சொல்ல அவன் ''இப்போது முடியாது, என் நாட்டுப் பெண் புதியவள், குடும்ப பாரத்தை அவள் பழகிக் கொள்ளட்டும். பின்பு வருவேன். மேலும் பேரக் குழந்தைகளுடன் இருப்பது சுகமாய் உள்ளது''என்றான். அவன் ஆயுளும் முடிந்து அங்கேயே மஹிஷமாகப் பிறந்தான். துர்முகியும் பெண் மஹிஷமாகப் பிறக்க சந்தோஷமாக இருந்தனர். அப்போது மீண்டும் நாரதர் அவனிடம் வந்து பந்தத்தை விட்டு வர பணிக்க ஸ்வாமி துர்முகியும் இங்கே பிறந்திருக்கிறாள், நாங்கள் சுகித்து இருக்கிறோம் அப்புறம் பார்க்கலாம்'' என்றான்.

அவனுடைய அந்த ஆயுளும் முடிந்து அவ்விடத்திலேயே ஒரு நாயாகப் பிறந்தான். அவர்கள் வீட்டின் செல்லப்ப்ராணியாக இருந்தான். மீண்டும் நாரதர் அவனிடம் அறிவு கொளுத்த மாயாசனரன் ''இல்லை இல்லை இப்போது முடியாது, நேற்று இரவு நான் குரைக்காமல் இருந்திருந்தால் என் பிள்ளையின் வீடு கொள்ளை போயிருக்கும். நல்ல வேளை காப்பாற்றினேன் . அவனை யார் காப்பாற்றுவார்? இந்த பந்தத்தை அறுத்துக் கொண்டு வர இயலாது. வைகுண்டம் அப்புறம் பார்க்கலாம்'' என்றான். நாயாக இருந்த மாயாசங்கரன் ஒரு புழுவாகப் பிறந்தான்.

சற்றும் மனம் தளராத நாரதமுனி புழுவாயிருந்த அவனிடம் வைகுண்டம் வர பணித்தார். அவன் '' நான் வருவதற்கு இல்லை. ஏனெனில் என் பையன் வைத்திருக்கும் நிலத்தில் மண் வளம் பெற இருப்பேன். அவனுக்கு அது உதவும். நல்ல விளைச்சலைக் கொடுக்கும். வைகுண்டம் வேண்டாம் '' என்றான்.

பொறுமையின் எல்லைக்கே போய்விட்ட நாரதர் புழுவாக இருக்கும் போது கூட மனிதன் பாச பந்தங்களை விட மறுக்கிறானே, என்ன ஜன்மம் இது. கேடுகெட்ட ஜன்மமாக உள்ளதே. இப்படித்தான் மனிதன் தானே வலையைப்பின்னி அதில் சிக்கி வரமுடியாமல் தவிக்கிறான் என்று உணர்ந்தார். மாயாசங்கரன் பால் இருந்த கருணையினால் புழுவாக இருந்த அவனை கங்கையில் முக்கி எடுக்க அவனிடம் இருந்த பந்தம் பாசம் எல்லாம் மறைந்தன.

(மார்க்கண்டேய புராணம்)

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஏப்ரல் வினாக்கள்

1. திருப்பதியின் 7 மலைகளின் பெயர்கள் யாவை ?
2. 12 வருடங்களுக்கு ஒருமுறை தமிழ் நாட்டில் நடைபெறும் விழா
3. நர்மதை நதியின் உத்பத்தி ஸ்தானம்
4. வன்னி மரத்துடன் இணைந்த சிவன்
5. மாசி அமாவாசையின் பெயர்
6. இறைவனின் பஞ்ச க்ருத்யங்கள்
7. பார்ப்பவன், பார்க்கப்படும்பொருள், பார்வை இவை எப்படி அழைக்கப்படும் ?
8. லாஸ்யம் இது என்ன?
9. மஹா நடன் இவன் யார்?
10. முஸ்லீமாக பிறந்து இந்துவாக வாழ்ந்த மகான்.

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிந்த்ரர்

வேங்கடகணபதி சர்மா

**தத்ர ப்ரதிபிம்பிதம்சைதன்யமபி யதா தீபப்ரபாதித்ய பாவ பாஸனாஸமர்தா ஸதீ தயாபிபூதா பவத் ததா ஸ்வயம்ப்ரகாசமானப்ரத்யக் அபின்ன பரப்ரஹ்ம அவபாஸனா அர்ஹதயா தேனாபிபூதம் ஸத் ஸ்வோபாதிபூத அகண்ட வ்ருத்தேற்பாதிதத்வாத் தர்பண அபாவாவே முகப்ரதிபிம்பிதஸ்ய முக மாத்ரத்வவத் ப்ரத்யக் அபின்ன பரப்ரஹ்மமாத்ரம் பவதி ॥ 173**

*எப்படி ஒரு சின்ன தீபம் சூர்யனை ஒளிரச்செய்யாதோ , சூர்ய ஒளி தீப ஒளியை விழுங்குமோ, சித் சைதன்ய ப்ரஞ்யை பரப்ரம்ம சைதன்யத்தை ஒளிரச்செய்யாது. அது ஸ்வயம் ப்ரகாசமான அகண்டா கார ப்ரம்ம சைதன்யத்தால் விழுங்கப்படும். இந்நிலையில் இரண்டு சதன்யமும் ஒன்றாகி ப்ரம்ம மாத்ரம் ஏகமாய் ப்ரகாசிக்கும். பார்க்கும் கண்ணாடியில் தெரியும் பிம்பம் கண்ணாடியை எடுத்தவுடன் அதிலேயே மறைவதுபோல்.*

**ஏவம் ஸதி ''மனசைவ த்ரஷ் டவ்யம்'' யன் மனஸாஸா ந மனுதே இத்யனயோ ஸ்ருத்யோரவிரோதோ வ்ருத்தி வ்யாப்யத்வாங்கீகாரேண பலவ்யாப்யத்வ ப்ரதிஷேத ப்ரதிபாதனாத் ॥ 174**

*இன்னிலையில் மனதினால் மட்டும் இது பார்க்கப்படவேண்டும். எது மனதினாலும் நைனைக்கப் பட முடியாதோ'' போன்ற ஸ்ருதி வாக்யங்கள் விரோதமாயுள்ளன என்பது சரியல்ல. மனதால் தான் வ்ருத்தி ஞ்யானம் மூலம் ப்ரம்மனை அறியமுடியும் அந்த சைதன்யத்தை அதனால் உணரமுடியாது என்பதை நாம் அறிய வேண்டும்.*

**ததுக்தம்**

**''பலவ்யாப்யத்வமேவாஸ்ய சாஸ்த்ரக்ருத்பிர் நிவாரிதம்**
**ப்ரம்மண்ய அஞ்யான நாசாய வ்ருத்திவ்யாப்திரபேக்ஷிதா''**

**(பஞ்சதசீ /10)**

*ஸ்வயம் ப்ரகாசமான ப்ரம்மசைதன்யம் தன் ப்ரகாசத்திற்கு ஜீவசைதன்யத்தை எதிர்பாராது.*

**“ஜடபதார்தாகார ஆகாரைத சித்தவ்ருத்தேர் விசேஷோஸ்தி’’ 177**

*மனது ஜட பதார்த்தங்களை அறிவதில் ஒரு வேறுபாடு உள்ளது.*

**ததா ஹி அயம் கட இதி கடாகார ஆகாரித சித்தவ்ருத்தி: அஞ்யாதம் கடம் விஷயீக்ருத்ய தத்கட அஞ்யான நிரஸன புரஸரம் ஸ்வகத சிதாபாஸேன ஜடம் கடமபி பாஸயதி ॥ 178**

*அனுபவ உண்மை மனதானது இது கடம் எனும்போது அந்த கடத்தின் உருவத்தில் போர்ந்து இதுவரை தெரியாத கடத்தை காண்பிக்கும். ஜீவசைதன்யம் அந்த கடத்தின் இருப்பை உணர வைக்கும்.*

**ததுக்தம் புத்தித்ஸ்தசிதாபாஸோ த்வாவபி வ்யாப்னுதே கடம் தத்ர அஞ்யானம் தியா நஸ்யேத் ஆபாஸேன கட: ஸ்புரேத் ॥ 179**

*புத்தியும் ஜீவசைதன்யமும் கடத்தைத் தொடும்போது புத்தி கடத்தைப் பற்றிய அஞ்யானத்தை நாசமாக்க சைதன்யம் இது கடம் என்று ஸ்புரிக்க வைக்கும்.*

**யதா தீபப்ரபாமண்டாலம் அந்தகாரகதம் கடபடாதிகம் விஷயீ க்ருத்ய தத்கதாஅந்தகார நிரஸன புர ஸரம் ஸ்வப்ரபயா ததபி பாஸயதீதி’’ 180**

*அந்தகாரத்தில் இருக்கும் துணியையோ கடத்தையோ தீபப் ப்ரகாசம் அந்தகாரத்தை நாசமாக்கி கடத்தையும் படத்தையும் தன் ப்ரகாசத்தால் காணவைப்பது போல்.*

*(தொடரும்)*

### ஸனாதன தர்மப்புதிர்கள் மார்ச் விடைகள்

1. அலிபிரி
2. சோபன மார்கம்
3. சோணபத்ரம்
4. கார்தவீர்யார்ஜுனன்
5. ஸௌர மானம் சான்த்ர மானம்
6. வைத்தீஸ்வரன் கோயில்
7. திஷ்யம்
8. ராம் போலா
9. நவ பாஷாணத்தால் செய்யப்பட்டது
10. குலசேகர ஆழ்வார்.

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா



தன் அரசனனின் அனுமதி பெற்று துர்யோதனன் கர்ணனுடன்னும் தன் பரிவாரங்களுடனும் அந்த வனத்தைச் சுற்றி வந்தான். அங்கிருந்த மக்களையெல்லாம் பார்த்து அங்கே தங்கினான். யத்ருச்சையாக தர்மரும் அங்கிருந்தார்.

ஏற்கனவே கந்தர்வர்கள் அங்கு தங்கியிருந்தனர். திடீரென்று வந்த துர்யோதனாதிகளை எதிர்த்தனர். மாபெரும் ஸேனை வருவதைப் பார்த்த கர்ணன் அதன் மீது அம்பு மழை பொழிந்தான். இரு சேனைக்கும் கடும் யுத்தம் நிகழ்ந்தது. இறுதியில் கர்ணன் தோற்கடிக்கப்பட்டான். கந்தர்வ ராஜா சித்ரசேனன் துர்யோதனனை சிறை பிடித்தான். துர்யோதனனும் அவனது பரிவாரங்களும் சிறைபிடிக்கப்பட்டதைப் பார்த்த அவனது மன்த்ரிகள் மனமுடைந்தனர். துக்கத்துடன் தர்மர் இருக்குமிடத்திற்கு வந்தனர்.

பீமன் நல்லது நாம் செய்ய வேண்டியதை கந்தர்வன் செய்துவிட்டான். நமக்காக உலகில் யாரோ ஒருவர் இருக்கிறார் போலும்.

தர்மர் அப்படி கூறாதே. பந்துக்களிடம் மனஸ்தாபம் இருக்கலாம். இருப்பினும் பந்துவை கை விடக்கூடாது. துர்யோதனனை விடுவி. மற்றவர்களிடமிருந்து அபாயமெனின் நாம் நூற்றைந்து பேர். நமக்குள் மனஸ்தாபமெனின் நாம் ஐவர், அவர்கள் நூற்றுவர்.

யுதிஷ்ட்ரரின் இந்த தீர்மானத்தைக் கேட்ட பாண்டவர்கள் போருக்கு ஆயத்தமானார்கள்.

பாண்டவர்களுக்கும் கந்தர்வ ஸேனைக்கும் பயங்கரமான போர் ஏற்பட்டது. இந்த கௌரவர்களை எதற்காக பிடித்தாய் ? என்று சித்ர ஸேனனை அர்ஜுனன் வினவினான்.

சித்ரசேனன் வனத்தில் இருக்க அர்ஹதை இல்லாத உங்களை சீண்டுவதற்காகவே துர்யோதனன் இங்கு வந்தான். அவர்களுக்குப் பாடம் புகட்ட இந்தரன் உத்தரவு செய்ய நாங்கள் இங்கு வந்தோம்.

கந்தர்வனின் பேச்சைக் கேட்ட தர்மர் அவனுடன் சமாதானம் செய்து கொண்டு துர்யோதனனையும் அவனது ஸேனையையும் விடுவித்தார். விடுவிக்கப்பட்ட துர்யோதனனிடம் தர்மர் ''ப்ரிய பந்துவே இன்னொரு முறை இப்படி அசட்டுத்தனம் செய்யாதே. வீடு சேர், மனத்தில் வைத்துக் கொள்ளாதே''என்றார்.

பாண்டவர்களால் காப்பாற்றப்பட்ட அவன் மனம் குமைந்து அவமானத்துடன் நகரம் சென்றான். இப்படி பல வருடங்கள் பாண்டவர்கள் அனைவரும் வனத்தின் அழகை ரசித்துக் கொண்டு அங்கேதங்கியிருந்தனர். வனத்தில் வேட்டையாட பீமன் ஒரு நாள் அதன் உள்ளே செல்ல அங்கிருந்த ஒரு மலைப்பாம்பு அவன் உடலை சுற்றிக் கொண்டது. எனக்கு நீ இன்று ஆகாரமாவாய் என்று வேறு கூறியது. தாங்க முடியாத வலியினால் பீமன் கதற அவன் நீண்ட நேரம் வராதது கண்டு யுதிஷ்டிரர் வனத்துள்ளே புகுந்தார். பார்க்கவே கோரமாயும் பயங்கரமாயும் இருக்கும் ஒரு மலைப்பாம்பின் வாயில் பீமன் இருப்பதைக் கண்டு அதனிடம் பாம்பே நீ யார்? என்று வினவினார். அதுவும் நான் நகுஷன் என்னும் அரசன், அகஸ்த்யரால் சாபமிடப்பட்டு இவ்வனத்தில் உள்ளேன். இன்றைய ஆகாரம் இவன்தான்'' என்றது. தர்மரும் அவன் என் தம்பி நீ எதை ஆக்காரமாய்க் கொண்டால் இவனை விடுவாய்'' என்றார். அதுவும் நான் இவனை விட மாட்டேன்.

வேறு ஆகாரமும் தேவையில்லை, இருப்பினும் என் வினாக்களுக்கு பதில் கூறுவாயானால் இவனை விடுவேன்'' என்றது. தர்மரும் அதற்கு சம்மதிக்க எவன் ப்ராம்மணனாகிறான்/எது அறியத்தக்கது? சொல்'' என்றது.

தர்மர் ''நாகேந்த்ர எவனிடத்தில் உண்மை கொடை, பொறுமை, நல்லொழுக்கம், இரக்கம், தவம், கருணை இவைகள் காணப்படுகின்றனவோ அவனே ப்ராம்மணன். எது விசேஷங்கள் அற்றதாயும், தேச கால, வஸ்துக்களால் அளவிடமுடியாததாகவும் துக்கம் ஸுகம் இல்லாததாகவும், அகண்ட ஏகரஸமாய் இருக்கிறதோ எதனிடம் போனபின் மனிதர்கள் பிறப்பை அடைவதில்லையோ அது அறியத்தக்கது.

மலைப்பாம்பு ''யுதிஷ்டிரனே அறிய வேண்டியதை அறிந்து கொண்டிருக்கிறாய். நான் எப்படி உன்னுடைய தம்பியை சாப்பிடுவேன்? என்று கூறியபின் இருவருக்கும் விவாதங்கள் நடந்தன. அதனால் மகிழ்ந்த பாம்பு நான் தெளிவடைந்தேன். ஸத்யம் தமம், தவம், யோகம், அஹிம்சை, ஞானம் இவையே நற்கதிக்கு சாதனங்கள். ஜாதியும், குலமும் சாதகங்கள் ஆகா. உன் பதில்களால் நான் ஸ்வர்கம் போவேன். உன் தம்பியையும் விடுதலை செய்கிறேன் என்று கூறி பீமனை விட்டுவிட ஸ்வர்கம் ஏகிற்று.

(தொடரும்)

# ஸ்ரீமத் பாகவதம் காட்டும் வாழ்க்கை நெறி 4

*ராமாயணம் ஸ்ரீனிவாசன்*

*ஹ்ருதய முடிச்சு என்பது என்ன?இதனை அழிப்பது எப்படி? ஆண், பெண் தாம்பத்ய பாவத்தையே அழிக்க முடியாத இதய முடிச்சு என்பர். தன் உடல் பொறி புலன்கள் என்பதோடு வீடு ஸேவை மக்கள் ஆகியவற்றால் நான் எனது என்கின்ற மோஹம் தோன்றுகிறது. இவைகள் அழிய அதாவது இதய முடிச்சு தளர ஜீவன் முக்தனாகிறான்.*

***மனத்தின் நிலை :*** *இந்த மனதோடு ஒருபோதும் நட்பு கொள்ளக் கூடாது. இதன் மீது வைக்கும் நம்பிக்கையால்தான் வெகுகாலம் சேர்த்துவைக்கப்பட்ட தவ வலிமைகளை யோகிகள் இழந்தனர். ஆசை கோபம் மதம் பேராசை, துன்பம், மயக்கம், அச்சம் ஆகிய யாவற்றிற்கும் காரணம் இந்த மனமே.*

*இந்த மனதை அறிவாளி எவனாவது நம்புவானா?''(மனம் போனபோக்கில் போக வேண்டாம்'')*

*இந்த மனம் தான் நன்மை செய்வதுபோல் நடிக்கும் பலம் மிக்க எதிரி. இதை கண்காணிக்காவிட்டால் மேலும் பலம் பெற்றுவிடும். ஆத்மா வேறு உடல் வேறு என்பதை அறியாதிருக்கச் செய்வதும் மனம்தான். ஆகவே குருவின பாதம் பணிந்து பகவான் ஹரியின் தாள்களைப் பற்றி அவர்களின் அருளால் மனதை வெல்ல வேண்டும்.*

***தூய ஞ்யானம் என்பது என்ன? :*** *முழுமையான ஞானம் ஸத்யமானது, தூய்மையானது, அறிவு வடிவானது, இரண்டற்றது, உள் புறம் என்னும் வேறுபாடு அற்றது, நீக்கமற நிறைந்தது, அமைதியானது இல்லை என்று சொல்லமுடியாதது, அதைத்தான் பகவான் என்றும் வாஸுதேவன் என்றும் கூறுவர்.*

***அவனை அடைய வழி :*** *ஆகையால் மானிட பிறவி பெற்றவன் பற்றற்ற சான்றோர்களுடன் சேர்க்கை ஏற்படுத்திக்கொண்டு அதனால் வரும் ஞ்யானத்தால் உலகத் தளைகளை விலக்க வேண்டும். இதனால் பக்தி மேலிட்டு சம்சாரக் கடலை எளிதில் கடந்து பகவானை அடையலாம்.*

***குடும்பம் என்னும் தளை :*** *இந்த சம்சாரக் காட்டில் குடும்பம் என்னும் பெயரில் மனைவி, மக்கள் இவர்கள் செயலில் சென்னாய், நரி போன்றவர்கள். பொருளாசை கொண்டு இல்லறத்தானின் அவனது விருப்பமின்றியே அவன் எதிரிலேயே ஒநாய் ஆடுகளைக் கவர்ந்து கொள்வதுபோல் எடுத்துச் சென்றுவிடுகின்றனர்.*

*மனிதன் முதலில் வாழ்வில் தெரிந்து செயலாற்ற வேண்டியது எது ? இவ்வுலகில் ஒரு மனிதனின் முதல் கடமை அனைத்துச்செயல்களிலும் மிக முக்யமானது பகவானின் திரு நாமத்தைச் சொல்வது. அதனால் அவனிடம் பக்தி செலுத்துவதே. (பும்ஸாம் பரமோ தர்ம: )*

***உலகில் யார்யார்க்கு பாதுகாவலர்கள் விளக்கம் :*** *குழந்தைக்கு தாய், தந்தையர், கண்களுக்கு இமைகள், மனைவிக்கு கணவன், துறவிக்கும் ப்ரம்மசாரிக்கும் இல்லறத்தான், அஞ்ஞானிக்கு ஞானி நாட்டு மக்களுக்கு மன்னன்.*

***நல்ல ஸஹோதரன் என்பவன் யார்? :*** *அற நெறி தெரிந்தவன் தனது மூத்தவனின் நன்னெறியை பின்பற்றி நடப்பவன் உண்மையான சஹோதரன். அவன் புண்யபந்து. அவன் மேலுகில் சஹோதர பாசம் மிகுந்த மருத்துக்களோடு வாழ்கிறான்.*

***ஸாது என்பவன் யார்? :*** *ஸாது என்பவர் பிறர் செய்யும் தீமைக்கு பதிலுக்குப்பதில் திரும்பச் செய்யும் திறன் இருந்தும் பொறுமையால் பதிலடி கொடுப்பவர்.*

***மகன்களின் தலையாயக் கடமை என்ன? :*** *மகன்கள் குடும்பம் உடையவராக இருந்தாலும் தமது பெற்றோர்களுக்கு பணிவிடை செய்வதுதான் தர்மம். தாய் தந்தையர், சகோதரன், அதிதி எப்போதோ வரும் விருந்தாளி சகோதரர் உலகில் உள்ள ஜீவராசிகள் ஆகியவரை எப்படி மதிக்க வேண்டுமென்று தெரிந்து கொள்ள வேண்டும்.*

*ஆசார்யன் வேதத்தின் வடிவம் தந்தை ப்ரம்மா ஸ்கோதரன் இந்த்ரன் தாய் பூமி சகோதரி தயாதேவி எதிர்பாராமல் வரும் விருந்தாளி தர்ம தேவதை எப்போதோ வரும் அதிதி அக்னி அனைத்து ஜீவராசிகள் நாராயண ஸ்வரூபம்.*

*(தொடரும்)*

---

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்’’

# தத்வ சிந்தனை

*இளம்பூரணர்*

*தமிழர்களாகிய நாம் உணர்ச்சி வசப்படுகிறோம். இதை விட சிலர் உணர்ச்சியைக் கிளறிவிட்டு குளிர்காய்கின்றனர். இது தெரியாமல் பாமர மக்கள் பலிகடா ஆகின்றனர். சான்றாக இந்த குறளைப் பார்ப்போம்.*

**''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமையான்''**

*பொருள் பிறப்பு எல்லாருக்கும் சமம் ஆனால் வெவ்வேறு தொழில்கள் மனிதன் செய்ய இருப்பதால் சமம் எனும் சிறப்பு எடுபடுவதில்லை. இவ்வளவுதான் விஷயம். வந்தது வினை.*

*பார்த்தீர்களா மக்களே ஆரியன் செய்த சூழ்ச்சியை. எல்லோரும் சமம் என்று வள்ளுவனார் கூறியிருக்க நால் வருணப் பாகுபாட்டை புகுத்தி தன் மேன்மையை நிலை நாட்டிக்கொண்டான். இவர்கள் சாதுர்வணம் மயா ஸ்ருஷ்டம்'' என்னால் நான்கு வர்ணம் உண்டாக்கப்பட்டது'' என்று பகவத் கீதையை மேற்கோள் காட்டி இதுவே சிறப்பு என்பர். வள்ளுவத்தைவிடவா கீதை சிறந்தது? இப்படி தங்களுக்கே உரித்தான அடுக்கு மொழியில் பேசி மக்களை திசை திருப்பினர். பாமரனுக்கு எதுவும் தெரியாது பாவம்.*

*பண்டிதர்களுக்கு எங்கே போயிற்று மதி? ஆர்யன் த்ராவிடன் என்று பிரித்தாளும் சூழ்ச்சி இது என்று ஒரு தமிழ் பண்டிதனும் கூறுவதில்லை. Between the lines என்று ஆங்கிலத்தில் கூறுவர். அதாவது ஒரே ஒரு வாக்யத்தை எடுத்துக் கொண்டு (மற்றதை மறைத்து)விமர்சிப்பர். இக்குறளின் அவர்களது விமர்சனமும் அதுபோலதான். பார்ப்போம்.*

*வள்ளுவர் சொல்ல வந்தது பிறப்பு எல்லாருக்கும் சமம்தான். ஆனால் பல ஜாதி வர்ணம் இருப்பதால் அந்த ஸமம் ஏற்றத்தாழ்வுகளுடன் இருக்கும் சமுதாயத்தில் ஒவ்வாது போய்விடுகிறது. வள்ளுவர் இதனால் குறைந்து விடவில்லை. விமர்சகர்கள் இரண்டாம் அடியை விட்டுவிட்டு முதல்வரியைப் போற்றுவர். இக்குறளுக்கு இரண்டாமடிதான் ஜீவன். அவரது பல குறள்களில் இப்படிப்பார்க்கலாம். அவர்களுக்கு கீழ்கண்ட கேள்வியைக் குறள்வழியாகவே கேட்கலாம்.*

**''பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப்பெறின்''**

*பொருள் கற்பு என்னும் பண்பு உள்ள பெண்ணைப் போன்றுசிறப்புடையவர் யார்? பொருள் நன்றாகத் தெரிகிறது.*

*ஒரு கணிகை* between the lines *படிக்கிறாள் என்றால் என்னவாகும். பெண்ணைப் போன்று சிறப்பானவர் யாரென்று வள்ளுவர் கூறிவிட்டார். நானும் பெண், நானும் சிறப்பானவள்தான் என்று இரண்டாம் வரியை மறைத்துப் பேசினால் அர்த்தம் அனர்தமாகாதா சிந்திக்க வேண்டும் மக்கள். அரசியல்வாதிகளின் பகட்டுப்பேச்சில் சிக்ககூடாது. பகுத்தறிவு கொண்டு பார்க்க வேண்டும். அதே மாதிரி படிக்காமல் இருக்கும் மாணவன் ''கற்றதனாலாய பயன் என் கொல்'' என்று வள்ளுவர் கூறிவிட்டார் என்று கூறலாம். திரித்துகூறுவதற்கு அளவே இல்லை. ஆகவே யாரும் எதிலும் உணர்ச்சிவசப்படாமல் பகுத்தறிந்து படித்துப் பொருள் கொள்ள வேண்டும். இன்னொரு விஷயத்தையும் பார்ப்போம்.*

*இவர்கள் கரித்துகொட்டும் வடமொழி இலக்கியங்கள் பிறப்பு சமம் இல்லை விஷமம் தான் என்று விஷம் கக்குகின்றனவா? உண்மையில் அப்படி பேசவில்லை. மகாபாரதத்தில் வன பர்வத்தில் ஆஜகர பர்வத்தில் ஒரு நிகழ்ச்சி. மலைப்பாம்பு தர்மரிடம் கேள்விகளைக் கேட்கும்.*

*அதில் வரும் ஒரு ஸ்லோகத்தில் ''வாங்க்மைதுனமதோ ஜன்ம மரணம் ச ஸமம் ந்ருணாம்'' (வாக்கு சம்போகம் பிறப்பு இறப்பு இவை எல்லா மாந்தருக்கும் சமம்) என்று கூறப்படுகிறது. தர்மருக்கும் பாம்புக்கும் நடக்கும் உரையாடலை கூர்ந்து படித்தால் பல உண்மைகளை நாம் அறியலாம். நமது சாஸ்த்ரங்கள் பேதங்கள் பல இருப்பினும் அபேதமாக இருக்கும் பொருளைத்தான் சிறப்பித்துப் பேசும். வள்ளுவர் கூற்றிற்கும் சாஸ்த்ரங்களின் கூற்றுக்கும் எந்த பேதமுமில்லை. நடைமுறையில் பேதங்கள் தவிர்க்க முடியாதவை. அதைத்தாண்டி உண்மைப் பொருளை நாட வேண்டும்.*

*(தொடரும்)*

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ




**133. கேள்வி : ப்ராணாயாமம் என்பது என்ன?**

**பதில் :** ஒரு மூக்கால் காற்றை மெதுவாக இழுத்து பின்பு நிறுத்தி இன்னொரு மூக்கால் மெதுவாக விடுவது ப்ராணாயாமம்.

134. **கேள்வி :** இதன் பெயர்கள் என்ன? விளக்கவும்

**பதில் :** உள்ளுக்கு இழுப்பது பூரகம், நிறுத்தி வைப்பது கும்பகம், வேளியே விடுவது ரேசகம்.

135. **கேள்வி :** ப்ராணாயாமம் இல்லாமல் எந்த செயலும் செய்யலாமா?

**பதில் :** கூடாது பலன் அளிக்காது.

136. **கேள்வி :** அர்க்யம் எனப்து என்ன?

**பதில் :** இரு உள்ளங்கைகளிலும் நீர் நிரப்பி சூர்யனைப் பார்த்து அதனை விடுவது.

137. **கேள்வி :** அர்க்யத்தின் பொருள் என்ன?

**பதில் :** சிறப்பானவர்களுக்கு செய்யும் கௌரவம். காலையில் விடப்படும். அர்க்யம் மந்தேஹாருணம் என்னும் தீவில் உள்ள அஸுரர்களின் வாகனங்களை அழிக்கிறது, நடுப்பகல் அர்க்யம் அவர்களின் ஆயுதங்களை அழிக்கிறது, மாலையில் விடப்படும் அர்க்யம் அவர்களையே அழிக்கிறது.

138. **கேள்வி :** ஜபம் செய்யும் முறை என்ன?

**பதில் :** மனதில் மந்த்ரத்தை நினைக்க வேண்டும், உதடு அசையாமல் கழுத்தை ஆட்டாமல் ஜபிக்க வேண்டும். காலையில் மூக்கின் நுனியிலும், நடுப்பகலில் இதயப்பகுதியிலும், மாலையில் தொப்புள் பகுதியிலும், கைகளை வைத்து ஜபிக்கவும். அமர்ந்து ஜபிப்பது நல்லது. ஜபம் செய்யுமிடம் தூய்மையாக இல்லாமல் இருந்தால் ஜபத்தின் பயனை இந்த்ரன் கவர்கிறான். இதனால்தான்

ஜபத்தின் முடிவில் ஜபம் செய்யும் இடத்தைத் தொட்டு நெற்றியில் திலகம் இட்டுக் கொள்ளப்படுகிறது. கைகளை துணியினால் மூடி ஜபம் செய்தால் பலனளிக்கும்.

139. **கேள்வி :** எத்தனை முறை ஜபம் செய்ய வேண்டும்?

**பதில் :** 1008 முறை செய்வது உத்தமம்,108 முறை மத்யமம், அதற்கும்கீழ் எண்ணிக்கை அதமம்.

140. **கேள்வி :** ஜபம் எத்தனை வகை?

**பதில் :** ஜபம் மூன்று வகை. 1. வாசிகம், 2. உபாம்சு, 3. மானஸம் இவை முறையே 10, 100, 1000 மடங்கு பலனளிப்பவை.

141. **கேள்வி :** வாசிகம் விளக்குக

**பதில் :** தெளிவாக பதத்தை உயர்த்தி தாழ்த்தி ஸ்வர சுத்தமாக வாயால் கூறுவது.

142. **கேள்வி :** உபாம்சு விளக்குக

**பதில் :** மிகவும் மெதுவாக அடுத்தவர் காதில் விழாமல் மந்த்ரத்தை ஜபிப்பது.

143. **கேள்வி :** மானஸம் ஜபம் விளக்குக

**பதில் :** சொல்லப்படும் மந்த்ரத்தின் பொருளை தெளிவாக நினைத்து மனதால் செய்யப்படும் ஜபம் .

144. **கேள்வி :** காயத்ரி எத்தனை வகை?

**பதில் :** மூன்று வகை 1. ஸம்புடா, 2. ஒரு ப்ரணவத்துடன் கூடியது 3, 6 ப்ரணவத்துடன் கூடியது.


145. **கேள்வி :** இவைகளை யார் யார் ஜபிக்க வேண்டும்?

**பதில் :** ஒரு ப்ரணவத்துடன் கூடிய காயத்ரியை இல்லறத்தானும், ப்ரம்மசாரிகளும் ஜபிக்க வேண்டும். மற்ற இரண்டை யதிகள் தான் ஜபிக்க வேண்டும்.

(தொடரும் )



# ராமர் சிறப்பிதழ்



**நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்**
**வீடியல் வழியதாக்கும் வேரியம் கமலை நோக்கும்**
**நீடிய அரக்கர் சேனை நீறு பட்டழிய வாகை**
**சூடிய சிலையிராமன் தோள்வலி கூறுவார்க்கே.**

*பல அரக்கர்களின் சேனையை அழித்து சாம்பலாக்கி, வெற்றி வாகை சூடிய ராமனின் தோளின் வலிமையைப் பாடுபவர்க்கு, நினைத்த பொருள் கிடைக்கும். ராமா இரண்டெழுத்தைச் சொன்னால் எல்லா நன்மைகளும் கிடைக்கும். செல்வம், ஞானம் (நல் அறிவு), புகழ், லெட்சுமி கடாட்சம் எல்லாம் கிடைப்பதோடு பாவங்கள் அழிந்து இந்த ஜன்மத்திலேயே மரணச் சுழலில் இருந்து விடுதலையும் கிட்டும்.*

# அட இத்தனை ராமாயணங்களா ?

1. ராமனுடைய காலத்திலேயே பல ரிஷிகள் அவருடைய சரிதத்தைச் செய்ததாகத் தெரிகிறது. ஆனால் ச்யவனர், போதாயனர், பரத்வாஜர் முதலியவர்கள் செய்த ராமாயணம் இப்பொழுது பூர்ணமாகக் கிடைக்கவில்லை. வால்மீகி ராமாயணத்தை எழுதின பிறகு அவை மறைந்து விட்டன.

2. **சதகோடி ராமாயணம் :** வால்மீகியால் ஆதியில் நூறுகோடி சுலோகங்களால் செய்யப்பட்டது. 9- லக்ஷம் காண்டங்களும், 900 லக்ஷம் ஸர்க்கங்களுமுண்டு. தேவர்களும், தைத்யர்களும், நாகர்களும் இதைத் தங்களுடைய லோகங்களுக்கு கொண்டு போக முயன்றார்கள். ஆனால் பூலோக வாஸிகள் ஸம்மதிக்கவில்லை. அந்தக் கலஹத்தை மஹாவிஷ்ணு ஸமாதானம் செய்து, ராமாயணத்தை மூன்று பங்காக்கி, ஒவ்வொரு கக்ஷிக்காரருக்கும் 33 கோடி, 33 - லக்ஷம், 33 ஆயிரம், 333 சுலோகங்களையும், 10 - அக்ஷரங்களையும் பிரித்துக் கொடுத்தார். ஒவ்வொரு பாகத்திலுள்ள 10 - அக்ஷரங்களடங்கிய மூன்று மந்த்ரங்களை லக்ஷ்மி, ஆதிசேஷன், கருடனென்பவர்களுக்கு உபதேசித்தார். அவை முறையே வைகுண்டத்தில் தேவர்களுக்கும், பாதாளத்தில் நாகர்களுக்கும், பூலோகவாஸிகளுக்கும் உபதேசிக்கப்பட்டன. முடிவில் மிகுந்த 2 - அக்ஷரங்களைப் பரமசிவன் எடுத்துக் கொண்டார். அது தான் 'ராம' என்ற தாரக மந்திரம்.

பூலோகத்தின் பாகம் ஏழு த்வீபங்களுக்கும் பிரிக்கப்பட்டது. நான்கு சுலோகங்கள் மிகுந்தன. அவை பிரஹ்மாவால் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவைகளின் தாத்பரியம் ஜகத் உண்டாவதற்கு முன் நான் ஒருவனே இருந்தேன். ஸத், அஸத் என்றவைகளுக்கு மேலாக வேறில்லை. பிறகு எது மிகுந்ததோ அதே நான். தபஸ், தேஜஸ் என்றவைகளைப்போல் ஆத்மாவிடத்தில் எது தோன்றாதோ, விஷ்ணுவை விட்டு எது வேறாகத் தோன்றுமோ அதுவே மாயை. பல சரீரங்களில் மஹாபூதங்கள் எப்படிக் கலந்திருக்கின்றனவோ, அப்படி அவைகளில் நான் கலந்திருப்பதில்லை. எது இருந்தால் பிரபஞ்சம் பிரகாசிக்குமோ, எது இல்லாவிட்டால் அது அழியுமோ அதே பரதத்வம். 'மேற்சொன்னதே ஞானத்தின் ஸாரம். ஐம்பூ த்வீபத்திற்குக் கிடைத்த பாகத்தை அதிலுள்ள 9 வர்ஷங்களுக்குப் பிரித்தார்கள். இப்படி மிகுந்த ஸ்ரீ ' என்ற அக்ஷரம் அவைகளுக்குப் பொதுவாக கொடுக்கப்பட்டது. பிறகு வேதவியாஸர் இந்த த்வாபர யுகத்தில் நமது பாரத வர்ஷத்திற்குப் பாகமாகக் கிடைத்த ராமாயணத்தை ஆதாரமாக்கிதான் 17 புராணங்களையும், உப புராணங்களையும், பாரதத்தையும்

செய்தார். அப்படியும் அவருடைய மனம் ஸமாதானமில்லால் கங்கைக் கரையில் உட்கார்ந்திருக்கையில், நாரதர் அங்கே வந்து, மேற்சொன்ன நான்கு சுலோகங்களை உபதேசித்தார். அதனால் வியாஸருடைய மனம் சாந்தமாக, அந்த அர்த்தத்தையே பாகவத புராணமாகச் செய்தார். பிற்காலத்தில் வழங்கின ஸகல லௌகிக வைதிக கிரந்தங்களும் இந்தச் சதகோடி ராமாயணத்தையே ஆதாரமாகக் கொண்டவை. பாரதத்திற்கும் இப்படி விஸ்தாரமாகவும் ஸங்க்ரஹமாகவும் ரூபம் சொல்லப்படுகிறது. (ஆனந்த ராமாயணம்)

3. **ஆனந்த ராமாயணம் :** இதில் 9 காண்டங்களும் 109 ஸர்க்கங்களும் 12,252 சுலோகங்களுமுண்டு; வால்மீகி ராமாயணத்தை ஸாரகாண்டத்திலும்; ராமனுடைய தீர்த்த யாத்திரை யாத்ரா காண்டத்திலும்; அவர் செய்த அசுவமேதம் முதலிய யாகங்கள், அவருடைய 108 நாமங்கள் யாக காண்டத்திலும்; ராமனுடைய ராஜ்யாதிகாரம், ராமஸ்தவராஜம் விலாஸ காண்டத்திலும்; ராம ரக்ஷை, ஸீதையைக் காட்டிற்கனுப்பினது, குசலவர்களின் பிறப்பு, ராமன் அவர்களுடன் யுத்தம் செய்தது, ஸீதையைச் சேர்த்துக் கொண்டது. ஜன்ம காண்டத்திலும்; மூலகாஸுரவதம், ராமனுடைய திக்விஜயம், அவருடைய 1008 திருநாமங்கள், வால்மீகியின் பூர்வ சரித்திரம் ராஜ்ய காண்டத்திலும்; லகுராமாயணம், ராமனுடைய பூஜை உபாஸனை முதலியவைகளின் விதி, ராமதோபத்ர சக்ரம், லக்ஷம் ராம நாமம் செய்த விரதத்தின் பூர்த்தி, ஆஞ்ஜநேய ஸீதா லக்ஷ்மண, பரதசத்ருக்னாகளின் கவசம், ஹனுமத்பதாகை, ஆனந்த ராமாயண ஸங்க்ரம் மனோஹரா காண்டத்திலும்; ராமனுக்கும் சந்திரவம்சத்து ராஜாக்களுக்கும் நடந்த யுத்தம் பூர்ண காண்டத்திலும் சொல்லப்படுகின்றன. இது சத கோடி ராமாயணத்தின் பாகம்.

4. **அத்யாத்ம ராமாயணம் :** இது பிரஹ்மாண்ட புராணத்தில் அடங்கியதென்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்தப் புராணமோ வாயுவால் சொல்லப்பட்டது; வால்மீகியால் செய்யப்பட்டதல்ல. பவிஷ்ய புராணத்தில், ராமாநந்தஸ்வாமிகள் பரமசிவனுடைய வரத்தாலும், கிருஷ்ண சைதன்யர்களின் கட்டளையாலும், அத்யாத்ம ராமாயணத்தைச் செய்தாரென்று தெரிகிறது. இந்த ராமாயணம் பார்வதிக்குப் பரமேச்வரனால் உபதேசிக்கப்பட்டு, வால்மீகியால் சொல்லப்படாத பல உள்ளுறைப் பொருள்களை எடுத்துச் சொல்லுகிறது.

5. **அத்புத ராமாயணம் :** வால்மீகியால் பரத்வாஜனென்ற சிஷ்யனுக்கு உபதேசிக்கப்பட்டது. 27 அத்யாயங்களுள்ளது. ராமன், ஸீதை என்றவர்களின் அவதாரங்களுக்குப் பல காரணங்களும், ஆஞ்சநேயருக்கு ராமன் செய்த உபதேசமும்,

*ஸஹஸ்ரமுக ராவணனை ஸீதை ஸம்ஹாரம் செய்தது முதலிய ஆச்சரியகரமான விஷயங்களும் வர்ணிக்கப்படுகின்றன.*

*6.* ***அக்னிவேச்ய ராமாயணம் :*** *ராமாயணத்தின் முக்கியமான விஷயங்களை வருஷம், மாதம், திதிப்படி பஞ்சாங்க ரூபமாகக் குறிக்கும் சில சுலோகங்களே நமக்குக் கிடைத்திருக்கின்றன.*

*7.* ***ஸங்க்ரஹ ராமாயணம் :*** *நாராயண பண்டிதரால் செய்யப்பட்டது. வால்மீகி ராமாயணத்திற்கு அதிக பேதமில்லை.*

*8.* ***மூல ராமாயணம் :*** *இது த்வைத கிரந்தங்களில் அடிக்கடி சொல்லப்பட்டாலும், இதன் ஸ்வரூபம் இன்னதென்றே தெரியவில்லை.*

*9.* ***யோகவாஸிஷ்ட ராமாயணம் :*** *அர்ஜுனனுக்கு யுத்த ஸமயத்தில் தர்ம சந்தேகம் உண்டானது போல், ராமன் வித்யாப்பியாஸம் செய்து, தீர்த்த யாத்திரையிலிருந்து திரும்பி வந்தவுடன், யாவற்றிலும் வெறுப்புண்டு ஒன்றையும் கவனிக்காமல் கவலையில் ஆழ்ந்திருந்தார். அப்பொழுது விசுவாமித்திர மஹர்ஷி அவரை யாக ஸம்ரக்ஷணத்திற்காக யாசிக்க வந்தார். ராமனுடைய ஸ்திதியைப் பற்றித் தசரதர் அவரிடத்தில் முறையிட அவர் ராமனைத் தருவித்து விசாரித்தார். ராமன் தன் கொள்கையை விஸ்தாரமாக எடுத்துரைத்தார். விச்வாமித்திரர் அதைக் கேட்டு அங்கிருந்த வஸிஷ்டரைப் பார்த்து 'முன்பு நாமிருவரும் விரோதித்துக் கொண்டிருந்தபொழுது பிரஹ்மா நமக்குத் தத்வத்தை உபதேசஞ் செய்து காமக்குரோதங்களை விலக்கித் தெளிவான ஞானத்தைக் கொடுத்தாரல்லவா? அந்த அருமையான விஷயங்களை இப்பொழுது ராமனுக்கு உபதேசிக்கலாம்' என்றார். அதே யோகவாஸிஷ்டமென்றும், ஞான வாஸிஷ்ட மென்றும் வழங்குகிறது. இதுவும் வால்மீகியால் பரத்வாஜருக்குச் சொல்லப்பட்டது.*

*10.* ***மற்ற ராமாயணங்கள் :*** *பரத்வாஜ மஹரிஷி, ச்யவனர், போதாயனர், பார்க்கவர், மாருதி முதலியவர்களால் செய்யப்பட்ட ராமாயணங்களுண்டென்று கேள்விப்படுகிறோம். அவை கிடைப்பதரிது. மஹா நாடகமென்று வழங்கும் கிரந்தத்திலுள்ள சமத்காரமான சுலோகங்கள் ஆஞ்சநேயரால் செய்யப்பட்டனவென்று சொல்லப்படுகிறது.*

*11.* ***ஸ்ரீதர ராமாயணங்கள் :*** *பாகவதத்திற்கு உரை செய்த ஸ்ரீதர ஸ்வாமிகளென்று இவரைச் சிலர் சொல்வதுண்டு. வால்மீகியால் சொல்லப்படாததும், கர்ண பரம்பரையாகப் பால்ய முதல் நாம் பெரியோர்களிடத்திலிருந்து கேட்டதுமான பல*

அரிய கதைகள். ஆனந்த ராமாயணத்திலும். இதிலும் காணப்படுகின்றன. ஸத்குரு ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகளைப் போன்ற பெரியவர்களால் இவை ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதே நமக்குப் போதுமான ப்ரமாணம்.

12. **மந்த்ர ராமாயணம் :** லக்ஷ்மணார்யரால் செய்யப்பட்டது. நாரதர் ராம சரிதத்தை வால்மீகிக்கு 156 ரிக்வேத மந்திரங்களால் உபதேசித்தாரென்றும், அவைகளை எல்லோரும் படிக்க அதிகாரமில்லாததால் வால்மீகியோ அவருடைய சிஷ்யர்களோ பிறகு அவைகளை சுலோகமாகச் செய்தாரென்றும், பரம்பரைக் கதை. மேற்சொன்ன மந்திரங்களை, யாகம், பிரஹ்மவித்யை, ராமாயணமென்றவைகளுக்கு அனுகுணமாக வியாக்யானம் செய்திருக்கிறார். இது வெகு அருமையான கிரந்தம், கவனிக்கத்தகுந்தது.

13. **புராணங்கள் :** இவை ஒவ்வொன்றிலும், பாரதத்திலும், ராமாயணக் கதை சில சில மாறுதல்களுடன் காணப்படுகிறது. பத்ம புராணத்தில் பல புதிய கதைகளுக்கும் சென்ற கல்பத்தில் நடந்த ராமாவதாரத்தின் சரித்திரமும் சொல்லப்படுகிறது.

14. **ரகுவம்சம் :** காளிதாஸனால் செய்யப்பட்டது. 19 ஸர்க்கங்களுடன் திடீரென்று முடிகிறது. ஸூரியவம்ச சக்கரவர்த்திகளில் திலீபன் முதல் அக்னிவர்ணன் வரையிலுள்ள அரசர்களின் சரித்திரங்கள் சொல்லப்படுகின்றன. இதில் பல அம்சங்கள் வால்மீகி ராமாயணத்தில் காணப்படவில்லை. முன்னிருந்த பெரியோர்களால் செய்யப்பட்ட பல சரித்திரங்களை உபயோகித்துத் தான் எழுதியிருப்பதாகக் காளிதாஸன் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறான். மேலும், ராம சரிதத்தில் பல இடங்களில் வால்மீகியின் வழி மாற்றப்பட்டிருக்கிறது. தென்னாட்டில் வடமொழியைக் கற்பவர்கள் இதையே முதலில் படிப்பதுண்டு.

15. **பட்டிகாவ்யம் :** (ராவண வதம்) வலபி நகரத்தில் ஆண்டு வந்த தரஸேனனுடைய ஸதஸில் விளங்கின பட்டிகவியால் செய்யப்பட்டது. 22 ஸர்க்கங்களுள்ளது. மஹா காவ்யம். ஒவ்வொரு ஸர்க்கத்திலும் ஒவ்வொரு வியாகரணப் பிரயோகம் விளக்கப்பட்டிருக்கிறது.

16. **கம்ப ராமாயணம் :** தெய்வப் புலமை வாய்ந்த கம்ப நாட்டாழ்வார் பாடினது. அவர் பல புராணங்களையும், ராம சரிதங்களையும் பரிசோதித்து இதைச் செய்திருக்கிறார். வால்மீகிக்கும் அவருக்கும் பலவிடங்களில் வேற்றுமை காணப்படுகிறது. வடமொழியில் வால்மீகி ராமாயணத்திற்குள்ள பெருமை தென்மொழியில் இதற்குண்டு.

17. **ராமநாடகம் :** சீர்காழி அருணாசலக் கவிராயரால் ஸுமார் 250 வருஷங்களுக்கு

முன் பாடப்பட்டது. தரு, திபதை, கண்ணி, விருத்தம், ஓரடி, கீர்த்தனை முதலிய பலவகைகளாக கேட்பவருடைய மனத்தைக் கவரும் வண்ணம் செய்யப்பட்டிருக்கிறது. தென்னாட்டில் வெகு பிரஸித்தி பெற்றது.

18. **பாஸ்கர ராமாயணம் :** இது ஆந்த்ர பாஷையில் பாஸ்கர கவியால் செய்யப்பட்டது. அரிய கல்பனைகளும், விருத்தங்களும் பதச் சேர்க்கையும் பொருந்தினது. ஆயினும் சில விடங்களில் கடினமான பதப் பிரயோகங்களும், சிக்கலான கற்பனைகளும் காணப்படுகின்றன.

19. **துளஸீதாஸ ராமாயணம் :** அல்லது ராமசரித்ர மானஸம். இது புஸுண்ட மஹர்ஷியால் கருடனுக்கும், யாக்ஞவல்கியருக்கும் சொல்லப்பட்டது. யாக்ஞவல்கியரிடமிருந்து பரத்வாஜரும், அவருடைய சிஷ்ய பரம்பரையாய்த் துளஸிதாஸரும் அதைப் பெற்றார்கள். இவருடைய காலம் கி.பி. 1575 - 1624. ஹஸ்தின புரத்தில் பிறந்து காசியில் வஸித்தவர். மொகல் சக்கரவர்த்தியான ஷாஜஹானால் ஆதரிக்கப்பட்டவர். ஹிந்தி பாஷையில் இது ஏழு காண்டங்களாக எழுதப்பட்டது. பாலகாண்டம் விஸ்தாரமானது. உத்தரகாண்டத்தில் புஸுண்ட மஹர்ஷியின் கதையும் பக்தியின் லக்ஷணமும் சொல்லப்படுகின்றன.

20. **ஜைன ராமாயணம் :** ஹேமசந்திராசார்யரென்ற ஜைன கவியால் எழுதப்பட்ட த்ரிஷஷ்டிசலாக புருஷ சரித்திரமென்றதில் 7-வது பாகம் 10-வது அத்யாயம். வால்மீகி ராமாயண கதைக்கும், இதற்கும் ஸம்பந்தம் ஸ்வல்பமே. இது மாகதி பாஷையில் எழுதப்பட்டது. கும்பகோணம் பாரதாசார்யரென்ற சாமண்ணாசார்யரால் வெகுகாலத்திற்கு முன்பு ஸம்ஸ்கிருதத்தில் சுலோக ரூபமாய் மொழி பெயர்க்கப்பட்டது. அந்த ஏட்டுப் பிரதியிலிருந்து என்னால் தமிழில் எழுதப்பட்டது.

21. **பௌத்த ராமாயணம் :** கௌதம புத்த பகவானால் அருளிச் செய்யப்பட்ட தர்மபதமென்ற நீதி கிரந்தத்திற்கு புத்தகோஷர் எழுதின உரையிலும், அவர் ஸூத்திர நிபாதமென்ற வேறொரு கிரந்தத்திற்கு எழுதின உரையிலும், மஹா வம்சமென்ற சரிதத்திலும், புத்தருடைய பூர்வஜென்ம கதைகளில் ஒன்றான தசரத ஜாதகத்திலும், ராமசரிதம் வெகு விசித்திரமாகச் சொல்லப்படுகிறது. (இந்த பௌத்த, ஜைன ராமாயணங்கள் சிறு நூலாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன)

22. **மொல்ல ராமாயணம் :** மொல்ல என்ற ஒரு ஸ்த்ரீ ஆந்திர பாஷையில் செய்த ராமாயணமும் வழங்குகிறது.

### பெரியவாச்சான் பிள்ளை தொகுத்தருளிய

# திவ்ய பிரபந்த பாசுர ராமாயணம்

பகவத்குணானுபவங்களில் ஆழ்ந் தமிழ்ந்தவர்கள் பண்ணி பன்னிரு ஆழ்வார்கள், ஆங்காங்கே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் அச்சாமூர்த்திகளைக் கண்ணாரக் கண்டு, அவன் திருவிளையாடல்களையும் அவதார வைபவங்களையும் நினைந்து, நினைந்து இல்வாழ்வார்கள் உ்ள நெகிழ வாயாரப் பாடியவைகளின் தொகுப்பே நாராயிர திவ்யப் பிரபந்தம் எனப்படுகின்றது. ராமாயண தத்வார்த்தங்களை உலகுக்கு உவந்தருளிய பெரியவாச்சான் பிள்ளை என்னும் மாமுனிவர், பன்னிரு ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்த பாசுரங்களிலுள்ள பதங்களையே தொகுத்து, ராமாயணமாக அருளிச் செய்திருக்கிறார். இதை அநுதினமும் பாராயணம் செய்தால், நாலாயிர திவ்யப் பிரபந்தத்தைப் பாராயணம் செய்த பலனும், ராமாயண பாராயண பலனும் ஒருங்கே கிடைக்கும்.

### பால காண்டம்

திருமடந்தை, மண் மடந்தை இருபாலும் திகழ
நலமந்தமில்லதோர் நாட்டில்
அந்தமில் பேரின்பத்தடியரொடு
ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும்
அயர்வரும் அமரர்கள் அதிபதியான
அணியார் பொழில்சூழ் அரங்க நகரப்பன்,
அலைநீர்க் கடலுள் அழுந்தும் நாவாய் போல்
ஆவாரார் துணையென்று துளங்கும்
நல்ல அமரர் துயர் தீர
வல்லரக்கர் இலங்கை பாழ்படுக்க எண்ணி
மண்ணுலகத்தோ ருய்ய
அயோத்தி என்னும் அணி நகரத்து
வெங்கதிரோன் குலத்துகோர் விளக்காய்
கௌசலை தன் குல மதலையாய்த்
தயரதன் தன் மகனாய்த் தோன்றிக்
குணம் திகழ் கொண்டலாய்
மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்வி காக்க நடந்து
வந்தெதிர்ந்த தாடகை தன்உரத்தைக் கீறி
வல்லரக்கர் உயிருண்டு கல்லைப் பெண்ணாக்கிக்



*காரார் திண்சிலை யிறுத்து*
*மைதிலியை மணம் புணர்ந்து*
*இருபத் தொருகால் அரசு களை கட்ட*
*மழுவாளி வெவ்வரி நல் சிலை வாங்கி வென்றிகொண்டு*
*அவன் தவத்தை முற்றும் செற்று*
*அம்பொனெடு மணிமாட அயோத்தி எய்தி*

## அயோத்யா காண்டம்

*அரியணை மேல் மன்னன் ஆவான் நிற்கக்*
*கொங்கைவன் கூனி சொற் கொண்ட*
*கொடிய கைகேயி வரம் வேண்ட*
*அக் கடிய சொற் கேட்டு*
*மலக்கியமா மனத்தனனாய் மன்னவனுமறாதொழியக்*
*குலக்குமரா ! காடுறையப் போ என்று விடை கொடுப்ப*
*இந்நிலத்தை வேண்டாது*
*ஈன்றெடுத்த தாயரையும் இராச்சியமும் ஆங்கொழிந்து*
*மைவாய களிறொழிந்து மாவொழிந்து தேரொழிந்து*
*கலன்ணியாதே காமரெழில் விழலெடுத்து*
*அங்கங்கள் அழகு மாறி*
*மானமரு மென்னோக்கி வைதேவி யின் துணையா*
*இளங்கோவும் வாளும் வில்லும் கொண்டு பின் செல்லக்*
*கலையும் கரியும் பரிமாவும்*
*திரியும் கானம் கடந்து போய்ப்*
*பக்தியுடைக் குகன் கடத்தக் கங்கை தன்னைக் கடந்து*
*வனம் போய்ப் புக்கு காயோடு நீடு கனியுண்டு*
*வியன் கானம ரத்தின் நிழல்*
*கல்லணைமேல் கண் துயின்று*
*சித்திரகூடத் திருப்ப, தயரதன் தான்*
*"நின் மகன் மேல் பழிவினைத்திட்டு*
*என்னையும் நீள்வானில் போக்க*
*ஏன் பெற்றாய் கைகேசீ !*
*நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன்*
*என்று வானேறத்*
*தேனமரும் பொழில்சாரல் சித்திரகூடத்து*

*ஆனை புரவி தேரோடு காலாள்*
*அணி கொண்ட சேனை சுமந்திரன்*
*வசிட்டருடன் பரத நம்பி பணியத்*
*தம்பிக்கு மரவடியை வான்பணயம் வைத்துக் குவலயத்*
*துங்கக் கரியும் பரியும் இராச்சியமும்*
*எங்கும் பரதற்கு கருளிவிடை கொடுத்துத்*
*திருவுடைய திசைக்கருமம் திருத்தப்போய்த்*
*தண்டகாரண்யம் புகுந்து*

## ஆரண்ய காண்டம்

*மறை முனிவருக்கு*
*'அஞ்சேல்மின்!' என்று விடை கொடுத்து*
*வெங்கண் விறல் விராதனுகு உக வில் குனித்து*
*வந்தமிழ் மாமு கொடுத்த வரிவில் வாங்கி*
*புலர்த்தெழுந்த காமத்தால் சீதைக்கு நேர் ஆவன் என்ன,*
*பொன்னிறம் கொண்ட சுடு சினத்த சூர்ப்பணகி*
*கொடி மூக்கும் காதிரண்டும்*
*கூரார்ந்த வாளால் ஈரா விடுத்து,*
*கரனோடு தூடணன் தன் உயிரை வாங்கி,*
*அவள் கதறித் தலையில் அங்கை வைத்து*
*மலை இலங்கை ஓடிப்புக,*
*கொடுமையின் கடுவிசை அரக்கன்*
*அலைமலி வேற்கண்ணாளை அகல்விப்பான்*
*ஒருருவாய மானை அமைத்து*
*செங்கல் பொடிக்கூரை சிற்றெயிற்று*
*முற்றல் மூங்கில் மூன்று தண்டத்தனாய் வஞ்சித்து*
*இலைக்குரம்பில் தனி இருப்பில்*
*கனிவாய்த் திருவினைப் பிரித்து*
*நீள்கடல் சூழ் இலங்கையில்*
*அரக்குர் குலத்துக்கு நஞ்சாகக் கொண்டுபோய்*
*வம்பு உலாம் கடிகாவில் சிறையாய் வைக்க*
*அயோத்தியர் கோன் மாயமான் மாயச் செற்று*
*அலைமலி வேற் கண்ணாளை அகன்று தளர்வெய்தி*
*சடாயுவை வைகுந்தத்தேற்றிக்*

*கங்குலும் பகலும் கண்துயில் இல்லா*
*கானகம் படி உலாவி உலாவி*
*கணை ஒன்றினால் கவந்தனை மடித்து*
*சவரி தந்த கனி உவந்து*

**கிஷ்கிந்தா காண்டம்**

*வனமருவு கவியரசன் தன்னோடு காதல் கொண்டு*
*மராமரம் ஏழ் எய்தி*
*உருத்து எழு வாலி மார்பில்*
*ஒரு கணை உருவ ஓட்டிக்*
*கருத்துடைத் தம்பிக்கு*
*இன்பக் கதிர் முடி அரசளித்து*
*வானரக்கோனுடனிருந்து வைதேகி தனைத் தேட*
*விடுத்த திசைகருமம் திருத்தி,*
*திறல் விளங்கு மாருதியும்*
*மாயோன் தூதுரைத்தல் செப்ப!*

**சுந்தரகாண்டம்**

*சீராரும் திறலனுமன் மாகடலைக் கடந்தேறி*
*மும்மதில் நீள் இலங்கை புக்குக் கடிகாவில்*
*வாராருமுலை மடவாள் வைதேவி தனைக்கண்டு*
*'நின்னடியேன் விண்ணப்பம் கேட்டருளாய்!*
*அயோத்திதனில் ஓர் இடவகையில்*
*எல்லியம் போதினிதிருத்தல்*
*மல்லிகைமாமலை கொண்டாங்கார்த்ததும்*
*கலக்கிய மாமனத்தினளாய்க் கைகேயி வரம் வேண்ட*
*மலக்கிய மாமனத்தவனாய் மன்னவனும் மறாதொழிய*
*குலக்குமரா காடுறையப்போ என்று விடைகொடுப்ப*
*இலக்குமணன் தன்னோடங்கேகியதும்*
*கங்கை தன்னில்*
*கூரணிந்த வேல்வலவன் குகனோடு*
*சீரணிந்த தோழமை கொண்டதுவும்,*
*சித்திரகூடத்திருப்பப் பரத நம்பி பணிந்ததுவும்,*

*சிறுகாக்கை முலைதீண்டி மூவலகும் திரிந்தோடி*
*வித்தகனே ராமா ஓ நின்னபயம்*
*என்ன அத்திரமே அவன் கண்ணை அறுத்ததுவும்*
*பொன்னொத்த மானொன்று புகிந்தினிது விளையாட*
*நின்னன்பின் வழி நின்று சிலைபிடித்தேம்பிரான் ஏக*
*பின்னே அங்கு இலக்குமணன் பிரிந்ததுவும்*
*அயோத்தியர்கோன் உரைத்த அடையாளம்*
*ஈதவன் கை மோதிரமே என்றடையாளம் தெரிந்துரைக்க*
*மலர்க்குழலாள் சீதையும்*
*வில்லிறுத்தான் மோதிரம் கண்டு*
*அனுமன் அடையாளம் ஒக்கும் என்று*
*உச்சிமேல் வைத்துகக்க*
*திறல் விளங்கு மாருதியும்*
*இலங்கையர்கோன் மாக்கடிகாவையிறுத்து*
*காதல் மக்களும் சுற்றமும் கொன்று*
*கடி இலங்கை மலங்க எரித்து*
*அரக்கர்கோன் சினமழித்து மீண்டு*
*அன்பினால் அயோத்தியர்கோன்*
*தளிர்புரையும் அடியிணை பணிய*

## யுத்தகாண்டம்

*கானஎண்கும் குரங்கும் முசுவும்*
*படையாக் கொடியோன் இலங்கை புகலுற்று*
*அலையார் கடற்கரை வீற்றிருந்து*
*செல்வ விபீடணர்க்கு நல்லனாய்*
*விரிநீர் இலங்கை அருளி,*
*சரண்புக்க குரை கடலை அடலம்பால் மறுக எய்து*
*கொல்லைவிலங்கு பணிசெய்ய*
*மலையால் அணைகட்டி மறுகரை ஏறி*
*இலங்கை பொடியாக,*
*சிலைமலி செஞ்சரங்கள் செல உய்த்துக்*
*கும்பனொடு நிகும்பனும் பட*
*இந்திரசித்தழியக் கும்பகர்ணன் பட*

*அரக்கர் ஆவி மாள, அரக்கர்*
*கூத்தர் போலக் குழமணி தூரமாட*
*இலங்கை மன்னன் முடி ஒருபதும்*
*தோள் இருபதும் போயுதிர,*
*சிலைவளைத்து சரமழை பொழிந்து*
*கரந்துணித்து வென்றி கொண்ட செருக்களத்துக்*
*கடிக்கமல நான்முகனும், கண்மூன்றத்தானும்*
*எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓரிருவர்*
*மற்றுமுள்ள வானவர் மலர்மழை பொழிந்து*
*மணிமுடி பணிதர அடி இணை வணங்க*
*கோலத்திருமாமகளொடு*
*செல்வவீ டணன் வானரக்கோனுடன்*
*இலகுமணி நெடுந்தேர் ஏறி, சீரணிந்த குகனோடு கூடி*
*அங்கண் நெடுமதில் புடை சூழ் அயோத்தி எய்தி,*
*நன்னீராடிப் பொங்கிளவாடை யரையில் சாத்தித்*
*திருச்செய்ய முடியும் ஆரமும் குழையா*
*முதலா மேதகு பல்கலணிந்து*
*சூட்டு நன்மாலைகளணிந்து*
*பரதனும் தம்பி சத்துருக்கனனும்*
*இலக்குமணனும் இரவும் நண்பகலும் ஆட்செய்ய*
*வடிவிணை இல்லாச் சங்கு தங்கு முன்கை நங்கை*
*மலர்க்குழலாள் சீதையும் தானும்*
*கோப்புடைய சீரிய சிங்காதனத்திருந்து ஏழுலகும்*
*தனிக்கோல் செல்ல வாழ்வித்தருளினார்.*

**விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் ராமனின் புகழ் பாடும் சிவ பெருமான்**

*சிவபெருமான் விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் ராம நாமத்தின் புகழைப் பாடும் விதத்தில் ஒரு பலஸ்ருதி ஸ்லோகம் அதில் வருகிறது. இந்த ஸ்லோகத்தை படிக்க அனைத்து பலன்களும் முழுமையாக கிடைக்கும்.*

*ஈஸ்வரோ உவாச*

*''ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோ ரமே*
*சஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம வரானனே''*

# நாம ராமாயணம்

**பாலகாண்ட:**

ஸுத்தப்ரஹ்மபராத்பர ராம் 1
காலாத்மகபரமேவர ராம் 2
ஸேஷதல்பஸுகனித்ரித ராம் 3
ப்ரஹ்மாத்யமரப்ரார்தித ராம் 4
சண்டகிரணகுலமண்டன ராம் 5
ஸ்ரீமத்தஸரதனந்தன ராம் 6
கௌஸல்யாஸுகவர்தன ராம் 7
விஸ்வாமித்ரப்ரியதன ராம் 8
கோரதாடகாகாதக ராம் 9
மாரீசாதினிபாதக ராம் 10
கௌஸிகமகஸம்ரக்ஷக ராம் 11
ஸ்ரீமதஹல்யோத்தாரக ராம் 12
கௌதமமுனிஸம்பூஜித ராம் 13
ஸுரமுனிவரகணஸம்ஸ்துத ராம் 14
நாவிகதாவிதம்ருதுபத ராம் 15
மிதிலாபுரஜனமோஹக ராம் 16
விதேஹமானஸரஞ்சக ராம் 17
த்ர்யம்பககார்முகபஞ்சக ராம் 18
ஸீதார்பிதவரமாலிக ராம் 19
க்ருதவைவாஹிககௌதுக ராம் 20
பார்கவதர்பவினாஸக ராம் 21
ஸ்ரீமதயோத்யாபாலக ராம் 22
ராம ராம ஜய ராஜா ராம்
ராம ராம ஜய ஸீதா ராம்

**அயோத்யாகாண்ட:**

அகணிதகுணகணபூஷித ராம் 23
அவனீதனயாகாமித ராம் 24
ராகாசந்த்ரஸமானன ராம் 25
பித்ருவாக்யாஸ்ரிதகானன ராம் 26
ப்ரியகுஹவினிவேதிதபத ராம் 27
தத்க்ஷாலிதனிஜம்ருதுபத ராம் 28
பரத்வாஜமுகானந்தக ராம் 29
சித்ரகூடாத்ரினிகேதன ராம் 30
தஸரதஸந்ததசிந்தித ராம் 31
கைகேயீதனயார்தித ராம் 32
விரசிதனிஜபித்ருகர்மக ராம் 33
பரதார்பிதனிஜபாதுக ராம் 34
ராம ராம ஜய ராஜா ராம்
ராம ராம ஜய ஸீதா ராம்

**ஆரண்யகாண்ட:**

தண்டகாவனஜனபாவன ராம் 35
துஷ்டவிராதவினாஸன ராம் 36
ஸரபங்கஸுதீக்ஷ்ணார்சித ராம் 37
அகஸ்த்யானுக்ரஹவர்தித ராம் 38
க்ருத்ராதிபஸம்ஸேவித ராம் 39
பஞ்சவடீதடஸுஸ்தித ராம் 40
ஸூர்பணகார்த்திவிதாயக ராம் 41
கரதூஷணமுகஸூதக ராம் 42
ஸீதாப்ரியஹரிணானுக ராம் 43
மாரீசார்திக்ருதாஸுக ராம் 44
வினஷ்டஸீதான்வேஷக ராம் 45
க்ருத்ராதிபகதிதாயக ராம் 46
ஸபரீதத்தபலாஸன ராம் 47
கபந்தபாஹுச்சேதன ராம் 48
ராம ராம ஜய ராஜா ராம்
ராம ராம ஜய ஸீதா ராம்

**கிஷ்கிந்தாகாண்ட:**

ஹனுமத்ஸேவிதனிஜபத ராம் 49
நதஸுக்ரீவாபீஷ்டத ராம் 50
கர்விதவாலிஸம்ஹாரக ராம் 51
வானரதூதப்ரேஷக ராம் 52
ஹிதகரலக்ஷ்மணஸம்யுத ராம் 53
ராம ராம ஜய ராஜா ராம்
ராம ராம ஜய ஸீதா ராம்

**ஸுந்தரகாண்ட:**

கபிவரஸந்ததஸம்ஸ்ம்ருத ராம் 54
தத்கதிவிக்னத்வம்ஸக ராம் 55
ஸீதாப்ராணாதாரக ராம் 56
துஷ்டதனனதூஷித ராம் 57
ஸிஷ்டஹனூமத்பூஷித ராம் 58
ஸீதாவேதிதகாகாவன ராம் 59

க்ருதசூடாமணிதர்ஸன ராம் 60
கபிவரவசனாஸ்வாஸித ராம் 61
ராம ராம ஜய ராஜா ராம்
ராம ராம ஜய ஸீதா ராம்

**யுத்தகாண்ட:**

ராவணனிதனப்ரஸ்தித ராம் 62
வானரஸைன்யஸமாவ்ருத ராம் 63
ஸோஷிதஸரிதீர்தித ராம் 64
விபீஷணாபயதாயக ராம் 65
பர்வதஸேதுனிபந்தக ராம் 66
கும்பகர்ணசிரச்சேதக ராம் 67
ராக்ஷஸஸங்கவிமர்தக ராம் 68
அஹிமஹிராவணசாரண ராம் 69
ஸம்ஹ்ருததஸமுகராவண ராம் 70
விதிபவமுகஸுரஸம்ஸ்துத ராம் 71
க:ஸ்திததஸரதவீக்ஷித ராம் 72
ஸீதாதர்ஸனமோதித ராம் 73
அபிஷிக்தவிபீஷணனத ராம் 74
புஷ்பகயானாரோஹண ராம் 75
பரத்வாஜாபினிஷேவண ராம் 76
பரதப்ராணப்ரியகர ராம் 77
ஸாகேதபுரீபூஷண ராம் 78
ஸகலஸ்வீயஸமானத ராம் 79
ரத்னலஸத்பீடாஸ்தித ராம் 80
பட்டாபிஷேகாலங்க்ருத ராம் 81
பார்திவகுலஸம்மானித ராம் 82
விபீஷணார்பிதரங்கக ராம் 83
கீஸகுலானுக்ரஹகர ராம் 84
ஸகலஜீவஸம்ரக்ஷக ராம் 85
ஸமஸ்தலோகாதாரக ராம் 86
ராம ராம ஜய ராஜா ராம்
ராம ராம ஜய ஸீதா ராம்

**உத்தரகாண்ட:**

ஆகதமுனிகணஸம்ஸ்துத ராம் 87
விஸ்ருததஸகண்டோத்பவ ராம் 88
ஸீதாலிங்கிதனிர்வ்ருத ராம் 89
நீதிஸுரக்ஷிதஜனபத ராம் 90
விபினத்யாஜிதஜனகஜ ராம் 91
காரிதலவணாஸுரவத ராம் 92
ஸ்வர்கதம்புகஸம்ஸ்துத ராம் 93
ஸ்வதனயகுஸலவனந்தித ராம் 94
அஸ்வமேதக்ரதுதீக்ஷித ராம் 95
காலாவேதிதஸுரபத ராம் 96
ஆயோத்யகஜனமுக்தித ராம் 97
விதிமுகவிபுதானந்தக ராம் 98
தேஜோமயனிஜரூபக ராம் 99
ஸம்ஸ்ருதிபந்தவிமோசக ராம் 100
தர்மஸ்தாபனதத்பர ராம் 101
பக்திபராயணமுக்தித ராம் 102
ஸர்வசராசரபாலக ராம் 103
ஸர்வபவாமயவாரக ராம் 104
வைகுண்டாலயஸம்ஸ்தித ராம் 105
நித்யானந்தபதஸ்தித ராம் 106
ராம ராம ஜய ராஜா ராம் 107
ராம ராம ஜய ஸீதா ராம் 108

ராம ராம ஜய ராஜா ராம்
ராம ராம ஜய ஸீதா ராம்
இதி நாமராமாயணம் ஸம்பூர்ணம்



# ஆஸேது ஹிமாசலம் ராமர் ஸன்னிதிகள்

*அதில் சிலவற்றை இங்கு தருகிறோம்*

1. மதுராந்தகம் ஸ்ரீ வகுளாரண்ய க்ஷேத்ரம்
2. பஞ்சவடி நாஸிக் ஸ்டேஷனுக்கு 5மைல் தூரத்தில் உள்ளது.
3. வேல்துர்தி கர்னூலிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ளது.
4. பத்ராசலம் ராஜமஹேந்த்ரத்திற்கு வடமேற்கில் உள்ளது.
5. திருமலை திருமலையில் ஸ்ரீனிவாசப்பெருமாள் மூல ஸ்தானத்தில்
6. திருவஹந்தீபுரம் திருப்பாதிரிப்புலியூருக்கு அருகில் அமைந்துள்ள க்ஷேத்ரம் . நிகமாந்த தேசிகன் ரகுவீர கத்யம் அருளிய இடம்.
7. அயோத்தி உபியில் சரயு நதிக்கரையில் உள்ள க்ஷேத்ரம். (இதைச் சுற்றித் தான் இவ்வளவு விஷயமும்
8. லக்ஷ்மணஜூலா இமயமலையில் ரிஷிகேசத்தில்
9. அயோத்தி ஒரு தென்னாட்டுப் பெண்மணியால் ராமரின் ஆணியாகக் கட்டப்பட்ட ''அம்மாஜி மந்திர்''
10. ஸ்ரீரங்கம்
11. திரு நின்றவூர் ரயில் நிலையத்திலிருந்து 1கிமீ தூரத்தில் உள்ளது.
12. திரு நீர்மலை பல்லாவரம் நிலையத்திலிருந்து 5கிமீ தூரத்தில் உள்ளது.
13. வடுவூர் மன்னார்குடிக்கு 10 மைல் தூரத்தில் உள்ளது அழகுக்கோர் அணி போன்றதாகும்.
14. தில்லை விளாகம் தஞ்சை ஜில்லாவில் உள்ள இந்த க்ஷேத்ர ராமர் சிற்பக்கலைக்கு ஓர் உதாரணம்.
15. திருச்சேறை கும்பகோணத்திலிருந்து திருவாரூர் பஸ் மார்க்கத்தில் உள்ளது. வனவாஸத் திருக்கோலம்.
16. திருப்புல்லாணி ராமனதபுரம் மாவட்டம். தர்பசயனத் திருக்கோலம்.
17. ராமேஸ்வரம் ராமேஸ்வரம் கோயில் உள்ளே எழுந்தருள்யிருக்கும் சன்னிதி.
18. தனுஷ்கோடி ரயில் நிலையத்துக்கு அருகில் ஸமுத்ரக் கரையில் உள்ளது.

நன்றி லிஃப்கோ

# ராம நாமத்தின் பெருமை

*துளசிதாஸர்*

*நான் ரகுவரனுடைய ராம நாமத்தை வணங்குகிறேன். அந்த நாமத்தில் உள்ள 'ர' என்ற எழுத்து அக்னியின் விதை (பீஜம்). 'ஆ' என்பது ஸுர்யனின் விதை (பீஜம்). 'ம' என்பது சந்திரனின் பீஜம். அந்த ராம நாமம் பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்களின் உருவம். அது வேதங்களுக்கு உயிர். அது நிர்குணம், உவமையற்றது, குணங்களின் கருவூலம்.*

*அதுவே பரமேச்வரன் ஜபிக்கின்ற மஹா மந்திரம். அந்தப் பரமேச்வரன் காசியில் - மோட்சத்தை அளிப்பதன் பொருட்டு உபதேசிக்கிறார். எந்த மஹா கணபதி இந்த ராம நாமத்தின் பிரபாவத்தினால் முதற் பூஜை பெறுகிறாரோ, அவருக்கு அதன் அருமை பெருமை தெரியும்.*

*ஆதி கவியான வால்மீகி எதைத் தலைகீழாக மரா மரா என ஜபித்து தூயவரானாரோ, அவர் ராம நாமத்தின் பெருமையை அறிவார். ஒரு ராம நாமம் ஆயிரம் நாமங்களுக்கு ஈடானது என்று . பரமேச்வரன் சொன்னதைக் கேட்டு - பார்வதீ தேவீ எப்பொழுதும் தன் கணவருடன் கூட ராம நாமத்தை ஜபிக்கிறாள்.*

*பார்வதி தேவிக்கு ராம நாமத்தில் உள்ள பேரன்பைக் கண்டு மகிழ்ந்து - பரமேச்வரன் பெண்மணிகளுக்கே அணியாக விளங்குகின்ற அவளை - தனக்கு அணியாக (தன் உடலில் பாதியாக) ஏற்றுக் கொண்டார். எதனுடைய பிரபாவத்தினால், காலகூட விஷம் அவருக்கு அமுதினும் இனிய பழமாயிற்றோ, அந்த பரமேச்வரன் அந்த ராம நாமத்தின் பெருமையை நன்கு அறிவார்.*

*ஸ்ரீரகுபதியின்பால் ஏற்படும் பக்தியே மழைக்காலம் ஆகும். துளஸீதாஸர் கூறுவார் - உயர்ந்த பணியாளர்களே தானியங்கள். ராம நாமத்தில் உள்ள இரண்டு எழுத்துக்கள் ஆவணி, புரட்டாசி மாதங்கள்.*

*ரா-ம என்ற இரண்டு அட்சரங்களும் இனிமையானவை. மனதிற்கு உகந்தவை. அட்சர்க் கோவை என்ற உடலுக்குக் கண்மணிகள். பக்தர்களுக்கு உயிரானவை. நினைப்பதற்கு எளியவை. ஸுகமளிப்பவை. இவ்வுலகில் லாபத்தையும் மேலுலகில் மேன்மையையும் தருபவை. (அதாவது பகவானுடைய ஸாந்தாநிக லோகத்தில் தைவீக உடலளித்து பகவானுக்கு சேவை புரிய வைக்கின்றன.)*

*இது சொன்னாலும், கேட்டாலும், நினைத்தாலும் மிகவும் அழகானது. இனிமையானது. இந்த இரண்டு எழுத்துக்களும் துளஸிதாஸருக்கு ராம லட்சுமணர்கள்*

போல பிரியமானவை. ரா-ம-என்று தனித்தனியாகச் சொன்னால், அன்பு தனித்தனியாகத் துலங்குகிறது. (அதாவது பீஜமந்த்ரங்கள் என்ற வகையில் இவற்றை உச்சரிக்கும்போது இவற்றின் பொருளும் பயனும் தனியாகத் தெரிகின்றன). ஆயினும் ஜீவனும் பிரஹ்மமும் போல இயல்பாகவே இணைபிரியாதவை ; ஒன்றேயானவை.

இவ்விரண்டு எழுத்துக்களும் நர நாராயணர் போல இணைபிரியாத ஸோதரர்கள். உலகத்தை - முக்கியமாக பக்தர்களைக் காப்பவை. பக்தி என்ற பெண்மணியின் அழகான காதணிகள். உலகின் ஹிதம் பொருட்டு உதித்த சந்திர ஸூர்யர்கள்.

இவை மோட்சமாகிய அமுதத்தின் சுவைக்கும், திருப்திக்கும் இணையானவை. ஆமைபோலவும் ஆதிசேஷன் போலவும் பூமியைத் தாங்குபவை. பக்தர்கள் உள்ளமாகிய அழகிய தாமரையை மொய்க்கின்ற இரு வண்டுகள் போன்றவை. நமது நாக்கு என்ற யசோதை அன்னைக்கு ஸ்ரீ கிருஷ்ணனும் பலராமனும் போல. ஆனந்தமளிப்பவை.

துலஸீதாஸர் கூறுகிறார், அந்த ராம நாமத்தின் ஒரு எழுத்து ரா -குடையாகவும், மற்றது - ம - கிரீடமாகவும், எல்லா எழுத்துக்களுக்கும் மேலே விளங்குகின்றன. நுண்ணறிவுக்கு 'ராம - என்ற பெயரும், அதற்குடையவனான ராமனும் ஒன்றுதான். ஆனால் இரண்டும் ஒன்றுக்கொன்று - எஜமான் பணியாள் - போல. (எஜமான் கூப்பிட்டால் பணியாள் ஓடிவருவது போல ராம நாமா (வைச் சொல்லி) அழைத்தால் ராமன் வருவார்). ராம என்ற நாமமும், ராமன் என்ற ஸ்வரூபமும் பகவானுடைய இயல்புகள். இவை விளக்கத்திற்கு அகப்படாதவை. அநாதியானவை. தூயதான பக்தி உள்ளத்தில் தான் இவற்றின் அருமை துலங்கும்.

ராம நாமம், ராமனின் ஸ்வரூபம், இவ்விரண்டில் எது பெரிது? எது சிறிது? என்று கூறுவது அபசாரமாகும். இவற்றின் தத்துவத்தைக் கேட்டறிந்த ஸாதுக்கள் இப்படிக் காண்பார்கள் ஸ்வரூபம் - நாமத்தை அண்டியுள்ளது. நாமமின்றி ஸ்வரூபத்தின் அறிவு பெற முடியாதே.

ஒரு பொருள் உள்ளங்கையில் இருந்தால்கூட, அதன் பெயர் தெரியாவிட்டால் இன்னதென்று சொல்ல முடியாது. உருவத்தைக் காணாவிட்டாலும், அவன் நாமத்தை நினைத்துக் கொண்டால் பேரன்புடன் அவன் உருவம் இதயத்தில் தோன்றும்.

பகவானுடைய நாமம், ஸ்வரூபம், இவற்றின் போக்கின் (பெருமையின்) கதை சொற்களுக்கு அப்பாற்பட்டது. அறிந்து கொண்டுவிட்டால் இன்பம் அளிக்கும். அதைச் சொல்லிமாளாது. நிர்குணமானதும் ஸகுணமானதுமான பரதத்துவ

ஸ்வரூபத்தினிடையே நிற்கும் சாட்சி. இரண்டையும் பற்றி உண்மையான அறிவைப் புகட்டுகின்ற திறமையுள்ள மொழி பெயர்ப்பாளர்.

துளஸீதாஸர் கூறுகிறார். நீ உள்ளும் புறமும் வெளிச்சம் காட்ட விரும்பினால் - உன் வாய் என்ற வாசற்படியில், நாக்கு என்ற இடைகழியில் - ராம நாமம் என்ற ரத்ன தீபத்தை வைத்துவிடு.

பிரம்மதேவன் படைத்த இந்த பிரபஞ்சத்தை உதரிவிட்டு - வைராக்யத்துடன் முக்தி பெற்ற யோகீ - ராம நாமத்தை - நாக்கினால் ஜபித்துக் கொண்டே (தத்துவ ஞானம் என்ற பகலில்) விழித்துக் கொள்கிறார். நாமமும், உருவமும் அற்ற - இணையற்ற - சொற்களுக்கு அகப்படாத - குறைவற்ற - ப்ரஹ்மானந்தத்தை - அனுபவிக்கிறார்.

எவர் பரமாத்மாவின் மறைந்திருக்கிற ரகசியத்தை அறிய - விரும்புகிறாரோ - அவரும் நாக்கினால் ராம் நாமத்தை ஜபித்தால் - அறிய முடியும். உலகியலில் பொருள் சேர்க்க விரும்புகின்ற ஸாதகர் கூட - லயிக்கின்ற உள்ளத்துடன் ராம நாமம் ஜபித்தால் அணிமா முதலிய ஸித்திகள் பெற்று சித்தர் ஆவார்.

சங்கடத்தில் ஆழ்ந்த பக்தர் ராம நாமம் சொன்னால், அவருடைய மிகப் பெரிய கொடிய சங்கடங்கள் விலகிவிடும். ஸுகம் அடைவார். இவ்விதம் 'ஆர்த்த: ஜிஜ்ஞாஸு : அர்த்தார்த்தீ - ஜ்ஞாநீபரதர்ஷப -உதாரா : ஸர்வே ஏவ ஏதே' பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் சொல்லியபடி 1. பொருள் விரும்புபவன், 2. கஷ்டத்தில் ஆழ்ந்தவன், 3. பகவானை அறிய விரும்புபவன், 4. ஞாநீ என்று பக்தர்கள் நால்வகைப்பட்டவரும் புண்ணியசாலிகள்; பாபமற்றவர்கள்; - பெருமனது படைத்தவர்கள். இவர்கள் பகவானின் உண்மை அறிந்து - பிரேமையுடன் பகவானை பூஜிப்பவர்கள்.

பக்தித் திறம் பெற்ற இந்த நால்வருக்கும் ராம நாமம் தான் - ஆதாரம். இவர்களுள் ஞானீயான பக்தர் பிரபுவுக்கு மிகவும் பிடித்தமானவர். நான்கு யுகங்களிலும் நான்கு வேதங்களிலும் ராம நாமத்தின் பெருமை பேசப்படும். ஆயினும் கலியுகத்தில் ராம நாமம் அதிகப் பெருமை வாய்ந்தது. ஏனெனில் அதைவிட்டால் கடைத்தேற - வேறு உபாயமில்லை.

எல்லா விதமான வேட்கைகளையும் (அதாவது உலகிய இன்பங்கள் - மோட்சம் இவற்றையும்) துறந்து ஸ்ரீ ராம பக்தி என்ற பரலத்தில் தோய்ந்து மூழ்கி விட்டவர்கள் கூட ராம நாமம் என்ற அழகான அமுதப் பொய்கையில் தமது மனங்களை மீன்களாக்கி விடுவார்கள். (அதாவது - ராம நாமம் என்ற அமுதத்தை இடைவிடாமல் பருகிக்கொண்டே இருப்பவர்கள் ஒரு கணம்கூட அதை விட்டு வெளியேற விரும்பமாட்டார்கள்.)

'நிர்குணம்', 'ஸகுணம்' என்று ப்ரஹமத்திற்கு இரண்டு பக்கங்கள். இரண்டுமே சொற்களுக்கு அகப்படாதவை. ஆழம் முடியாதவை. அநாதி, உவமையற்றவை. ஆனால் இந்த இரண்டையும் காட்டிலும் பெரிது ராம நாமம்தான். இது தன் திறமையினால் இரண்டையும் தன்வசமாக்கிக் கொண்டது என்பது என் கருத்து.

பெரியோர்கள் நான் சொல்வதை 'மிகை, வெறும் கவிக்கூற்று என்று நினைக்கலாகாது. என் திட நம்பிக்கை, மனதில் உள்ள பேரன்பு, ருசி, காரணமாக உண்மையாக நான் அறிந்ததைக் கூறுகிறேன். நிர்குணம், ஸகுணம், நெருப்பின் இரு தன்மைகள் போல. காய்ந்த கட்டையில் உள்ளிருக்கும் நெருப்பு போன்றது நிர்குணம். தீப்பற்றி எரியும் கட்டை போன்றது ஸகுணம். (உண்மையில் இரண்டுமே ஒன்றுதான்). நிர்குண ஸகுணங்களைக் கசடற அறிந்து கொள்வது கடினம் தான். ஆனால் நாமத்திற்கு இரண்டுமே எளிதாகக் கட்டுப்பட்டவை. இதனால்தான் நிர்குணமான ப்ரஹ்மத்தைக் காட்டிலும், ஸகுணமான ராமனைக் காட்டிலும், ராம நாமம் பெரிது என்று கூறினேன். அதன் பொருளான ப்ரஹ்மம் எங்கும் நிறைந்தது. ஒன்றே. அது அழிவற்றது. அதுவே உணர்வுமயமான 'ஸத்'. ஆனந்த குவியல்.

இத்தகைய விகாரமற்ற பிரபு இதயத்தில் வீற்றிருந்தும்கூட, ஜீவர்கள் ஏழ்மையுற்று துயரப்படுகிறார்கள். ராம நாமத்தின் உண்மையான தன்மை, பெருமை, ரகசியம், பிரபாவம், அறிந்து ராம நாமத்தில் (ஊக்கத்துடன் நாம் ஜபம் என்ற ஸாதனையில்) பாடுபட்டுவிட்டால், மண்ணில் கிடந்த ரத்தினத்தின் மதிப்பு தெரிந்த உடன், விலை தெரிந்து விடுவது போல, தானே பகவான் வெளிப்படுவார்.

இவ்விதம் நிர்குணப்ரஹ்மத்தைக் காட்டிலும் ராம நாமத்தின் பெருமை உயர்ந்தது ; எல்லையற்றது ; (என்று சொன்னேன்) இப்போது என் ஆராய்ச்சிக்குத் தெரிந்த அளவுக்கு - ராம நாமம் (ஸகுணமான) ராமனைக் காட்டிலும் கூட உயர்ந்தது என்று கூறுவேன்.

## ராமனை விட உயர்ந்தது ராம நாமம்

ஸ்ரீராமன் பக்தர்களின் நன்மை கருதி மனித உருவில் வந்து தான் கஷ்டங்களை அனுபவித்து ஸாதுக்களை ஸுகப்படுத்தினார். ஆனால் பக்தர்கள் பேரன்புடன் ராம நாமம் ஜபித்து - எளிதாகவே ஆனந்தமும் மேன்மையும் பெற்றுவிடுகின்றனர்.

ஸ்ரீராமன் ஒரே ஒரு தவசியின் மனைவியை (அகலிகையை) கரை ஏற்றினார். ஆனால் ராம நாமம் கோடி கொடியவர்களின் கெடுமதியைத் தூய்மையாக்குகிறது. ஸ்ரீராமன் ஒரு முனிவருக்காக ஒரு ஸுகேதுவின் பெண்ணான தாடகையையும் அவளுடைய படையையும் பிள்ளையையும் (ஸுபாஹுவையும்) முடிவு கட்டினார். ஆனால் ராம

நாமம் தன்னுடைய பக்தரின் மாசுகள் துயரங்கள் பேராசைகள் எல்லாவற்றையும் - சூர்யன் இருட்டை போல, அழித்து விடுகிறது. ஸ்ரீராமன் சிவபெருமானின் ஒரு வில்லைத்தான் ஒடித்தார். ராம நாமப் பெருமை உலகில் எல்லா பாவங்களையும் அழித்து விடுகிறது.

ராமப்ரபு ஒரு தண்டக வனத்தைச் சீர்படுத்தினார். ராம நாமமோ எண்ணற்ற மாந்தர்களின் மனக்காடுகளைத் தூயதாக்குகிறது. ரகுநந்தநன் அரக்கர் கூட்டங்களை அழித்தார். ராம நாமமோ கலியுகத்தின் அத்தனை பாபங்களையும் வேரோடு களைகிறது.

ஸ்ரீரகுநாதன் சபரீ, ஜடாயு, போன்ற உத்தம அடியவர்களுக்கு நல்ல கதியை அளித்தார். நாமமோ - எண்ணற்ற கொடியோர்களைக் கரை ஏற்றியது. நாமத்தின் பெருமைக்கதை வேதங்களில் பிரசித்தம்.

ஸ்ரீராமன் சுக்கிரீவ விபீஷணர் இருவருக்குத்தான் சரணமளித்தார். இதை எல்லோரும் அறிவர். ராம நாமமோ பல ஏழைகளுக்கு அருள் புரிகிறது. நாமத்தின் இந்த அழகான விருதுகள் உலகிலும் -வேதங்களிலும் மிகவும் சிறப்புற்றன.

ஸ்ரீராமன் கடலில் அணை கட்ட, கரடி வாநரக் கூட்டங்களுடன் சேர்ந்து கொஞ்சப் பாடுபடவில்லை. ஆனால் ராம நாமத்தை ஏற்றாலே - ஸம்ஸாரக்கடல் வற்றிவிடுகிறது. நன்மக்களே! உங்கள் மனதால் நன்கு ஆராய்ந்து பாருங்கள் (எது சிறந்தது ?)

ஸ்ரீராமன் ராவணனைக் குடும்பத்தோடு போரில் அழித்தார். எதையோடு கூட தன் நகரத்தில் அடி எடுத்து வைத்தார். ராமனோ அரசர். அயோத்தி தலைநகரம். தேவர்களும் முனிவர்களும் இனிய சொற்களால் அவர் குணங்களைப் பாடுகின்றனர். ஆனால் அடியார்கள் பிரேமையுடன் ராம நாமத்தை நினைத்தவுடன், ஒரு சிரமமுமின்றி, உலக மயக்கம் என்கிற பயங்கரப் படையை வெற்றி கொண்டு, பிரேமையில் மூழ்கி ஆத்ம ஆனந்தத்தில் திளைக்கிறார்கள். ராம நாமத்தின் அருளினால் அவர்களுக்குக் கனவில் கூட கவலை கிடையாது.

இவ்விதம் (நிர்குண) ப்ரஹ்மத்தைக் காட்டிலும் (ஸகுண) ராமனைக் காட்டிலும் நாமம் சிறந்தது. வரம் கொடுப்பவர்களுக்குக் கூட வரமளிப்பது. பரமேச்வரன் இதையும் உள்ளத்தில் உணர்ந்து நூறுகோடிச் செய்யுள்களாக விரிந்துள்ள ராமசரிதத்தில் ஸாரமாக நாமத்தைத் தேர்ந்து எடுத்துக்கொண்டார்.

# ராம ப்ரபாவம்

*மூல பல யுத்தம்*

**ஸ ப்ரவிஶ்ய ஸபாம் ராஜா தீந: பரமது‘: க்கித: ।**

**நிஷஸாதா ஸநே முக்யே ஸிம்ஹ: க்ருத் த. இவஶ்வஸத் ந (1)**

*ராவணன் ஸபாமண்டபத்தில் பிரவேசித்து, தீனனாய் மிகுந்த துக்கத்துடன், கோபங்கொண்ட ஆண் ஸிம்ஹத்தைப் போல ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்து, நெடு நேரம் யோசிகதான். பிறகு புத்திர சோகத்தால் தேஹம் வாடி, தன்னைச் சுற்றியிருந்த ஸேனைத் தலைவர்களைப் பார்த்து, கைகூப்பி, ‘நீங்களெல்லோரும் ஸகல ஸைன்யங்களாலும் ரதகஜ துரகபதாதிகளாலும் சூழப்பட்டு,யுக்தத்திற்குச் சென்று, ராமன் ஒருவனையே சூழ்ந்து கொண்டு, மழைக் காலத்து மேகங்களைப்போல் பாண வர்ஷத்தால் அவனைச் சின்னா பின்னஞ் செய்ய வேண்டியது, அப்படி முடியாவிட்டால், உங்களுடைய பாணங்களால் அவயவங்கள் பிளந்து தவிக்கும் அந்த ராமனை, நான் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கையில் அதி ஸுலபமாய்க் கொல்வேன்‘ என்று தசக்ரீவன் கட்டளையிட, லங்கையிலுள்ள ராக்ஷஸர்கள் பர்வதங்களைப்போன்ற ரதங்களிலும் யானைகளிலும், குதிரைகளிலுமேறி யுத்தத்திற்குப் புறப்பட்டார்கள். (ராக்ஷஸர்களுக்கு அதிபதியாயிருந்தும் அவர்களைத் தன் எண்ணப்படி நடக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறான். ஆகையால் கைகூப்புவது பிசகல்ல).*

*பரிகம், பட்டா, கோடாலி, கத்தி முதலிய ஆயுதங்களால் வானரர்களை ராக்ஷஸர்கள் அடித்தார்கள்; மரங்களையும் மலைகளை யும், வானரர்கள் ராக்ஷஸர்களின் மேல் விட்டெறிந்தார்கள். இப்படி அவ்விருவர்க்கும் ஸர்யோ தயம் முதல் கோர யுத்தம் நடந்தது. பலவகை ஆயுதங்களால் ஒருவரையொருவர் அடித்துக் காயப்படுத்தி ராக்ஷஸர்களும் சற்றும் பின்வாங்காமல் போர் செய்கையில், செந்தூளெழும்பி, ஸைன்யங்களை மறைத்து, பிறகு மலையருவிகளைப்போல் பெருகும் ரத்த ப்ரவாஹத்தால் அடங்கிற்று. யானைகளும் சதங்களும் இரு கரைகள்; குதிரைகளே மீன்கள்; த்வஜங்களே விருக்ஷங்கள், மிதக்கும் சாரல்களே தெப்பங்கள். இவ்விதமாய் ஓடின ரத்த ப்ரவாஹத்தால் வானரர்கள் நனைந்து, தாவித்தாவி ராக்ஷஸர்களுடைய த்வஜவ்களையும், கவசங்களையும், ரதங்களையும். குதிரைகளையும், ஆயுதங்களையும் ஒடித்தார்கள். அவர்களுடைய தலை மயிர்களையும், காதுகளையும், நெற்றிகளையும் மூக்குகளையும் கூர்மையான நகங்களாலும், பற்களாலும் அறுத்துக் கிழித்தார்கள். ஒரு*

விருக்ஷத்தில் அநேக பக்ஷிகள் உட்காருவதுபோல், ஒரு ராக்ஷஸ வீரனை அநேக வானரச்ரேஷ்டர்கள் சூழ்ந்துகொண்டார்கள். மலைகளைப் போன்ற ராக்ஷஸர்கள் வானரவீரர்களைக் கதை கதை, கத்தி, கோடாலி, ஈட்டி, வல்லயம் முதலிய ஆயுதங்களால் அடித்துக் கொன்றார்கள். ராக்ஷஸர்களால் மிகவும் உபத்ரவிக்கப்பட்டு, வானரர்கள் ஸர்வலோக சரண்யனான - ராமனைச் சரணமடைந்தார்கள். ரகுநாதன் ப்ரசண்ட கோதண்டத்தை எடுத்து, வளைத்து, நாணேற்றி, ராக்ஷஸர்களைச் சரமாரியால் அனைத்தார். பாணாக்னியால் தங்களைக் கொளுத்தும் ராமசந்திரனை ராக்ஷஸர்கள் நெருங்க தேஜஸுடன் ஆகாச வீதியில் ஜ்வலிக்கும் ஸூர்யனை மேகங்கள் நெருங்க முடியுமோ? ராமனால் செய்யப்பட்ட அத்புதமான வீர கிருத்யங்களைப் பார்த்து ராக்ஷஸர்கள் பயந்து திகைத்தார்கள்.

எல்லையற்ற ராக்ஷஸ ஸைன்யத்தைக் கலக்கிக்கொண்டும் ராக்ஷஸ மஹாரதர்களை எரித்துக்கொண்டுமிருக்கும் ராமனை அவர்கள் காணமுடியவில்லை. வனத்தில் மரங்களை முறித்துத் தள்ளும் காற்றைக் காணமுடியுமா? அதிலுண்டாகும் நாசத்தைத் தவிர நமக்கு வேறு புலப்படுவ துண்டோ? ராக்ஷஸர்கள் தேஹம் பிளந்து, அவயவங்களறுந்து, பாணாக்னியால் வெந்து, எலும்புகளொடிந்து, அலங்கோலமாய் மடிவதைக் கண்டார்களேயொழிய, அவர்களுள் அதிவேகமாய் ஸஞ்சரிக்கும் ராமனைக் காணவில்லை. பஞ்ச பூதங்களால் அமைக்கப்பட்ட சாரத்தில் விளங்கும் ஜீவாத்மாவை நாம் பார்க்கிறோமா? பஞ்சேந்திரியங்களால் விஷயங்களை அனுபவிப்பதாலேயே அனுமானிக்கிறோமல்லவா ? அப்படி ராக்ஷஸர்களுடைய தேஹங்களில் ராமனுடைய பாணங்கள் விழுவது மாத்ரம் காணப்படுமேயொழிய ராகவனைப் பார்த்தவர்களில்லை.

'இவனே யானைகளைக் கொல்லுகிறான்; இவனே மஹா ரதங்களை உடைக்கிறான்; இவனே குதிரைகளை நாசம் செய்கிறான்; இவனே காலாட்களை ஸம்ஹரிக்கிறானென்று கோபங்கொண்டு, தங்களைச் சேர்ந்தவர்களே ராமனாகத் தோன்றி, ராக்ஷஸர்களெல்லோரும் ஒருவர்க்கொருவர் அடித்துக் கொன்றார்கள். அது அந்த மஹாத்மாவால் ப்ரயோகிக்கப்பட்ட காந்தர்வாஸ்த்ரத்தின் மஹிமை; ஆகையால் தங்களுடைய ஸைன்யத்தைக் கொளுத்தும் ராமனைக் காணமுடியவில்லை. ஒருபொழுது எங்கே பார்த்தாலும் அநேக ஆயிர ராமன்கள் நிற்பதாகக்கண்டார்கள். பிறகு ரகுநாதன் ஒருவரே கோதண்டபாணியாய் யுத்தபூமியில் விளங்கக் கண்டார்கள். ராமன் மண்டலாகாரமாய்ச் சுழன்று பிரயோகிக்கையில், தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட கோதண்டதின் முனை மாத்ரம் ராக்ஷஸர்களுக்குக் காணப்பட்டது: ராமன் ஒருவரே அதிவேகமாய்ச் சுழல்வதால் எங்குமிருப்பதுபோல் காணப்பட்டார். அவருடைய

கோதண்டத்தின் நுனி தெரிந்தேயொழிய, அவர் காணப்படவில்ல. ராமனே விஷ்ணுவின் சக்ராயுதம்; அதற்கு நடுமுணையாயிருக்கும் அவருடைய சரீரமே குடம்; பலமே அதிலிருந்து கிளம்பும் காந்தி; அதனால் ப்ரயோகிக்கப்படும் பாணங்களே வெளிவட்டம்; நாணோசையும் காண் கையில் அடிபடும் ஓசையுமே சக்ரத்திலிருந்து தஸ்தான மான நேத்ரம்; சரீரகாந்தியே அதிலிருந்து வெளிப்படும் ஜியோ திஸ்; திவ்யாஸ்த்ரங்களின் சக்தியே அதன் எல்லை இப்படி ராக்ஷஸர்களை யுத்தத்தில் கணக்கில்லாமல் நாசம் செய்யும்ராமன், கோ தண்டத்துடன் ஸுதர்சன சக்ரத்தைப்போல் காணப்பட்டார். வாயுவேகமுள்ள பதினாயிரம் அநீகம் ரதங்களும், பதினெண்ணாயிரம் அகேம் யானைகளும், பதினாலாயிரம் அதிகம் குதிரைகளும், பாகர்களும், இரண்டு லக்ஷம் அநீகம் காலாட்களும் பகலின் எட்டிலொரு பாகத்தில் ராமன் ஒருவரால் ஸம்ஹரிக்கப்பட்டார்கள்.

யானைகள் மடிந்து குதிரைகளழிந்து ரதங்களொடிந்து காலாட்களொழிந்து அந்த ராக்ஷஸஸைன்யம் கொழுப்படங்கி லங்கையை நோக்கி ஓடிற்று. யானைகளும், குதிரைகளும், ரதங்களும் வானர ராக்ஷவீரர்களும் மலைமலையாய் அங்கங்கே கிடந்தார்கள். அந்த யுத்த பூமியைப் பார்க்கையில், ப்ரளயகாலத்தில் ருத்ரமூர்த்தி கோபங் கொண்டு விளையாடுமிடம்போலிருந்தது. தேவர்களும், கந்தர்வர்களும், ஸித்தர்களும், ரிஷிகளும், சாமனை நல்லது. நல்ல தென்று கொண்டாடினார்கள். தம் ஸமீபத்திலிருந்த ஸுக்ரீவன், விபீஷணன், ஜாம்பவான், ஹனுமான், மைந்தன், தவிவி தன் முதலியவர்ளை நோக்கி ராமன் இந்த காந்தர்வாஸ்த்ரத்தை ப்ரயோகிக்கும் சக்தி எனக்குண்டு: அல்லது பரமசிவனுக்கு ஸம் ஹார காலத்திலுண்டு. இப்படி ஒரு க்ஷணத்தில் கணக்கில்லாத ராக்ஷஸர்களை நாசஞ் செய்தது மாயாபலமென்று நீங்கள் எண்ண வேண்டாம். கேவலம் அஸ்த்ரபலமே'' என்றார். இப்படி பலபராக்ரமத்தில் தேவேந்திரனைப்போன்ற ராமன் ராக்ஷஸஸைன்யத்தை அழித்து, அஸ்த்ரசஸ்த்ரங்களில் அளவில்லாத பயிற்சியையும் திறமையையுமுடையவராய், தேவகணங்களால் ஸந்தோஷமாய்க் கொண்டாடப்பட்டார்.

நிஹத்ய தாம் ராக்ஷஸ வாஹிநீம் து
ராமஸ் ததா ஶக்ரஸமோ மஹாத்மா ।
அஸ்த்ரேஷு ஶஸ்த்ரேஷு ஜிதக்லமஶ்ச
ஸம்ஸ்தூயதே தேவக'ணை: ப்ரஹ்ருஷ்டை : ।।



# ராம கீர்த்தனை

## பத்ராசல ராமதாஸர்

*ராகம் : தர்பார் தாளம் : சாபு*

*தினமே ஸுதினமு ஸீதா ராம*
*ஸ்ரமணமே பாவனமு*

*ப்ரீதினைன ப்ராணபீதினைன பக்தி*
*ஸாதனைன யேரீ தீயைன தலசின*

*அர்த்தாபேக்ஷ ஜன்ம வ்யர்தமுகாகுண்ட*
*ஸார்தமுகா மிம்மு ப்ரார்தன ஜேஸின*

*நிரதமு மெரகு பங்காரு புஷ்பமுல ரகு-*
*வருனி பாதமுல னமர பூஜிஞ்சின*

*ம்ருதங்க தாளமு தம்புரு ஸ்ருதி கூர்ச்சி*
*அனுராகமுன கீர்தனலு பாடு சுன்ன*

*கனமைன பக்திகே வெனகொனி யே வேள*
*மனஸுன ஸ்ரீராமுனி சிந்திஞ்சின*

*பக்துலதோ ரனுரக்தினி கூடுக*
*பக்தி மீரகனு பக்தவத்ஸலு பொகடு*

*ராரா நனு கை கோரா நெர நம்மி-*
*னாரா நின்னு விடலேரா யனி வேடு*

*தீனசரண்ய மஹானுபாவ ஓ*
*கானலோல நனு கருணிஞ்சுமனி கொலுசு*

*வாஸிக ஸ்ரீஹரிதாஸுல கூடு கொனி*
*வாஸுதேவுனி பஹு வாஞ்சதோ பாடேடி*

*அக்கரதோட பத்ராசலமுலலோ*
*சக்கக ஸீதாராமுல ஜூசின*

*கரமுன வெலயு பங்காரு புஷ்பமுலசேத-*
*தர பத்ரகிரி ராமதாஸு பூஜிஞ்சு*

*சீதா ராமனை நினைக்கும் நாளே நல்ல நாள். அன்புடனோ, ப்ராண பயத்தாலோ, பணத்திற்காகவோ எப்படி நினைத்தாலும் நல்ல நாளே. நிஷ்காமமாய் ஒரு நாள் கூட வீணாக்காமல் உன்னை வணங்கும் நாள் நல்ல நாள். ரகுவீரனின் பாதங்களை பொன் மலர்களால் அர்ச்சிக்கும் நாள் நல்ல நாள். தம்புராஸ்ருதியுடன் மேளதாளங்களுடன் ராகங்களுடன் உன் புகழ் கேட்கும் நாள் நல்ல நாள். எந்த வேளையில் பக்தியுடன் ராமனை பக்தியுடன் நினைக்கும் நாள் நல்ல நாள். பக்தர்களுடன் பக்தியுடன் ராமனை நினைக்கும் நாளே நல்ல நாள்.*

*ராமா வா வா உன்னைவிட்டால் எனக்கு கதியேது? கானலோலனான அனாதரக்ஷகனான பரம புருஷனை வேண்டும் நாளே நல்ல நாள்.ஹரிதாஸர்களுடன் வாஸுதேவனை அடையும் நோக்கத்துடன் பாடும் நாள் நல்ல நாள்.*

# ராமன் பர ப்ரம்மம்

ஸீதா உவாச

ராமம் வித்தி பரம் ப்ரம்ம ஸச்சிதானதமத்வ்யம்
ஸர்வோபாதி வினிர்முக்தம் ஸத்தாமாத்ரமகோசரம் ।
ஆனந்தம் நிர்மலம் சாந்தம் நிர்விகாரம் நிரஞ்சனம்
ஸர்வவ்யாபினமாத்மானம் ஸ்வப்ரகாஸமகல்மஷம் ।।
மாம் வித்தி மூல ப்ரக்ருதிம் ஸர்கஸ்திதி அந்தகாரணீம்
தஸ்ய ஸன்னிதிமாத்ரேண ஸ்ருஜாமீதமதந்த்ரிதா ।।
தத்ஸான்னித்யாத் மயா ஸ்ருஷ்டம் தஸ்மின்னரோப்யதே அபுதை: ।।
அயோத்யா நகரே ஜன்ம ரகுவம்சே அதி நிர்மலே
விஸ்வாமித்ரஸாஹயத்வம் மகஸம்ரக்ஷணம் தத:
அஹல்யாஸாபசமனம் சாபபங்கோ மஹேசிது:
மத்பாணிக்ரஹணம் பச்சாத் பார்கவஸ்ய மதக்ஷய:
அயோத்யா நகரே வாஸோ மயா த்வாதசவார்ஷிக:
தண்டகாரண்ய கமனம்விராதவத ச மாயாமரீசிமரணம்
மாயாஸீதாஹ்ருதிஸ்ததா ।।
ஜடாயுஷோ மோக்ஷலாப: கபந்தஸ்ய ததைவ ।
சபர்யா: பூஜனம் பச்சாத் ஸுக்ரீவேண ஸமாகத: ।।
வாலினச்ச வத: பச்சாத் ஸீதான்வேஷணமேவ ।
ஸேதுபந்தச்ச ஜலகெள லங்காயாச நிரோதனம்
ராவணஸ்ய வதோ யுத்தே ஸபுத்ரஸ்ய துராத்மன:
விபீஷணே ராஜ்யதானம் புஷ்பகேன மயா ஸஹ ।।
அயோத்யாகமனம் பச்சாத் ராஜ்யே ராமாபிஷேசனம்
ஏவமாதீனி கர்மாணி மயைவாசரிதான்யபி
ஆரோபயந்தி ராமே அஸ்மின் நிர்விகாரே அகிலாத்மனி ।।
ராமோ ந கச்சதி ந திஷ்டதி நானுசோசத்யாகாங்க்ஷதே
த்யஜதி நோ ந கரோதி கின்சித் ।
ஆனந்தமூர்திரசல: பரிணாமஹீனோ மாயாகுணாமுகதோ ஹி ததா விபாதி ।।

ஸீதை சொன்னாள்

பரப்ரம்மமாகவும் சச்சிதானந்தமாகவும் த்வயமாகவும் உபாதிகளற்ற ஸத்தையாகவும் ராமனை அறி. அது ஆனந்தம் நிர்மலம் நிர்விகாரம் சாந்தம் எங்குமிருப்பது

ஸ்வப்ரகாசம் அழுக்கற்றது. படைப்பு, காப்பு, அழிப்பு இவைகளுக்குக் காரணமான அவருடைய ஸன்னிதியில் இயங்கும் மூல ப்ரக்ருதியாக என்னை அறி. அவரது ஸன்னிதிமாத்ரத்திலேயே இவை அனைத்தையும் செய்கிறேன்.பாமரர்களால் இவை அனைத்தும் அவர் செய்கை என்று ஆரோபிக்கப்படுகின்றன.

அயோத்யையில் தூய்மையான ரகுவம்சத்தில்ஜனனம், விஸ்வமித்ரருக்கு ஹாயம்,வேள்வி ரக்ஷணம், அகலிகை சாபவிமோசனம்,சிவதனுர்பங்கம்,என்னுடைய பாணிக்ரஹணம், பரசுராம கர்வபங்கம், அயோத்தியில் 12 வருஷம் வசித்தல், தண்டகாரண்ய ப்ரவேசம், விராதவதம், மாரீசமரணம், மாயாஸீதை அபகரணம், ஜடாயுமோக்ஷம், கபந்தமோக்ஷம், சபரியின் பூஜை, ஸுக்ரீவ சக்யம், வாலிவதம், சீதையைத் தேடல், ஸேது பந்தனம்,லங்கை முற்றுகை, தன் பரிவார புத்ரர்களுடன் ராவண வதம்,விபீஷண பட்டாபிஷேகம்,மீண்டும் அயோத்யா ப்ரவேசம் பின்பு ராமபட்டாபிஷேகம்.

இவை அனைத்தும் மூலப்ரக்ருதியான என்னால் செய்யப்பட்டிருப்பினும் நிர்விகாரமான, எல்லா ஆத்மாவாகவுள்ள ராமன்மீது ஆரோபிக்கப்பட்டன. ராமன் போக்கும் வரவும் இல்லாதவன், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்,எதையும் எடுப்பதில்லை, விடுவதுமில்லை. பரிணாமம் இல்லாதவன், ஆனந்த மூர்த்தி, அசைவு இல்லாதவன், மாயாகுணத்தை அனுசரித்து அதற்கு ஆதாரமாக விளங்குகிறான்.

## ராம ஹ்ருதயம்

ததோ ராம: ஸ்வயம் ப்ராஹ ஹனூமந்தமுபஸ்திதம்
ஸ்ருணுத்வம் ப்ரவக்ஷ்யாமி ஹி ஆத்மானாத்மபராத்மானாம் ।।
ஆகாசஸ்ய யதா பேதஸ்த்ரிதோ த்ருஸ்யதே மஹான்
ஜலாசயே மஹாகாசஸ்தத்விச்சின்ன ஏவ ஹி ।।
ப்ரதிபிம்பாக்யமபரம் த்ருஸ்யதே த்ரிவிதம் நப: ।।
புத்த்யவிச்சின்ன சைதன்யமேகம் பூர்ணமதாபரம்
ஆபாஸஸத்வபரம் பிம்பபூத்மேவம் த்ரிதா சிதி: ।।
ஸாபாஸபுத்தே: கர்த்ருத்வமவிச்சின்னே அவிகாரிணி
ஸாக்ஷிண்யாரோப்யதே ப்ராந்த்யா ஜீவத்வம் ச ததா புதை:
ஆபாஸஸ்து ம்ருஷா புத்த்யவித்யாகாரயமுச்யதே
அவிச்சின்னம் து தத்பரம்ம விச்சேதஸ்து விகல்பத; ।।
அவிச்சின்னஸ்ய பூர்ணேன ஏகத்வம் ப்ரதிபாத்யதே
தத்வமஸ்யாதிவாக்யைச்ச ஸாபாஸஸ்யாஹமஸ்ததா ।।

ஐக்யஞ்யானம் யதோத்பன்னம் மஹாவாக்யேன சாத்மனோ:

ததா அவித்யா ஸ்வகார்யைச்ச நச்யத்யேவ ந ஸம்சய;

ஏதத்விஞ்யாய மத்பக்தோ மத்பாவே ஏவ உபபத்யதே

மத்பக்திவிமுகானாம் ஹி சாஸ்த்ரகர்தேஷு முஹ்யதாம்

ந ஞ்யானம் ந ச மோக்ஷ; ஸ்யாத் தேஷாம் ஜன்மசதைரபி ।।

இதம் ரஹஸ்யம் ஹ்ருதயம் மமாத்மனோ மயைவ

ஸாக்ஷாத் கதிதம் தவானக ।।

மத்பக்திவிஹீனாய சடாய ந த்வயா தாதவ்யம் ஐந்த்ராதபி ராஜ்யதோஅதிகம் ।।

ஹனுமனை முதற்கொண்டு ராமர் கூறுவார்

ஆத்மா அனாத்மா பரமாத்மா இவைபற்றி கூறுவேன்.

ஆகாசம் மூன்று பிரிவுபடும். எல்லாவிடத்திலும் உள்ள ஆகாசம், ஏரி, குளம் இவை எடுத்துக் கொள்ளும் ஆகாசம் இரண்டாவது இதுவும் பெரும் ஆகாசமும் வேறல்ல. இது தவிர கடம் கிண்ணம் போன்றவையில் உள்ள ஆகாசம் இதுவும் வான்பரப்பில் உள்ள ஆகாசம் வேறல்ல.

அதுபோலவே சைதன்யம் மூன்றாகப் பிரிவுபடும். எங்குமிருக்கும் சைதன்யம், புத்தியுடன் இருக்கும் சைதன்யம், புத்தியில் இருக்கும் சைதன்யம் இப்படி மூன்று பிரிவுகள். மூடர்கள் எங்குமுள்ள சைதன்யத்துக்கு கர்த்ருத்வம் ஏற்று கர்மாவைச் செய்வதாகக் கூறுகிறார்கள்.

புத்தியில் ப்ரகாசிக்கும் ஆபாஸ சைதன்யம் ஜீவனாக கார்யம் செய்கிறது. சுத்த சைதன்யத்துக்கு அவயவங்கள் இல்லை. எனவே ஜீவனும் பொய் புத்தியும் பொய். தத்வமஸி'' மஹாவாக்யத்தை உணர்ந்தால் ''நான் ' போய்விடும். ஒரே சைதன்யமாகும். இந்த உயர்ந்த தத்வத்தை எவன் அறிகிறானோ அவனே என் பக்தன். இதை அறியாமல் நூல்களில் அறிவைத் தேடுபவன் நூறுஜன்மத்திலும் விடுபடான். இந்த்ர பதவியைக் காட்டிலும் மேலான இந்த உண்மையை அஹம்காரம் உள்ளவனுக்குக் கூறாதே.

தக்ஷிணைகளுடன் எண்ணிறந்த அச்வமேத யக்ஞங்களைச் செய்து முடித்தார். அவருடைய ராஜ்யத்தில் ஸ்த்ரீகள் புருஷனை இழந்து வருத்தப்பட்டதில்லை. துஷ்ட மிருகங்கள்

# ஸ்ரீ தியாகராஜஸ்வாமி கீர்த்தனை

**பைரவி** **ஆதி**

நாதா ப்ரோவவே ரகு நாதா ப்ரோவவே (நா)

1. ஸலலிதுட நி முது பலிகிந வால்மீ-
குல வாக்குலு கல்லலாய நா ரகு (நா)

2. பயமுலுகல முநிசயமுல ஜூசி ஹ்ரு-
தயமு கரகக நபய மொஸகிந ரகு (நா)

3. வரமகு நுதுடி முங்கு ருலநு தொசூலகிஞ்சி
கருணநு நிஜபக்த வருலநு ஜூசே ரகு (நா)

4. அகணித ரிபுலகு வக லொ நரிஞ்சி ஸ்வ-
நகரமு நேல வச்சே ஸொக'ஸுநு ஜூபு ரகு (நா)

5. கலகலமது முக களக நி புரபா-
மலு வலசகது தல்லுலவலெ ஜூசே ரகு (நா)

6. பரது நி க நி மதி கரகுசு வாநி
யுரமுந ஜேர்ச்சி கரமுது ஜூபு ரகு (நா)

7. நிருபம நிர்குண ஸரஸிஜ லோசந
மறவக த்யாகராஜ வரத ஸ்ரீராம ரகு (நா)

நாதடே! இரகுநாதனே! நீ மதுர குணம் படைத்தவனென்று கூறும் வால்மீகி முதலியோரின் வாக்குப் பொய்யாகி விட்டதா? அச்சமடைந்த முனிவர் கூட்டத்தைக் கண்டு மனமிளகி நீ அபயமளிக்க வில்லையா? அழகிய உனது நெற்றியின்மீது புரளும் முன்னுச்சி மயிரை (கண்களை மறைக்காத வண்ணம்) ஒதுக்கிவிட்டுக் கருணையுடன் மெய்யடியார்களைக் குளிர நோக்குகிறாய், எண்ணற்ற எதிரிகளுக்குத் துயர் விளைவித்து, உனது நகரத்தை ஆளுவதற்கு வரும்பொழுது சொகசுடன் எழுந்தருளுகிறாய். தள தளவென்று மின்னும் உன் முகத்தின் களையைக் கண்டு (அயோத்தியா) பட்டணத்தின் மாதர் உன்னைக் காதலிக்கவும், அவர்களைத் தாய்மாராகக் கருதிய தர்மமூர்த்தி நீ. பரதனைக் கண்டு மனங் கரைந்து அவனை மார்புறத் தழுவி உனது பரிவைக் காட்டியருளி! னாய். இணையற்றவனே! நிர்க்குண சொருபனே! தாமரைக் கண்ணனே! என்னை மறவாதே.

# பெரியவா கூறிய ராம நாமாவின் மகிமை

*காஞ்சி மகாபெரியவரிடம் ஒருவர் சென்று, நாம் மிகவும் துன்பத்தில் இருக்கின்றேன். என்னால் இந்த நிலையிலிருந்து மீள என்ன செய்வது என தெரியவில்லை. என்னால் பரிகாரம் செய்ய சொன்னால் பண்ண முடியாது அவ்வளவு வறுமை. என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள் என கேட்டுக் கொண்டார்.*

*அதற்கு காஞ்சி பெரியவர், உனக்கு துன்பம் என உணரும் போதெல்லாம் நான் சொல்லும் செயலை செய்து வா உன் துன்பம் ஓடி விடும் என்றார். அதற்கு அந்த நபர் அதை உடனே கூறுங்கள் என் துன்பத்தை போக்கிக் கொள்கின்றேன் என்றார்.*

*பெரியவரோ, சற்று நேரம் அங்கு அமைதியாக உட்கார்ந்திரு, சிறிது நேரத்தில் கூறுகின்றேன் என்றார். சிறிது நேரம் கழித்து பெரியவரிடம் செல்ல, அவர் யாரிடமோ பேசிக் கொண்டிருந்தார். மீண்டும் அதே இடத்திற்கு சென்று அமைதியா அமர்ந்து கொண்டார். பொறுமையாக அமர்ந்து இருந்து, பின்னர் மீண்டும் பெரியவரிடம் சென்றார்.*

*இப்போது உன் துன்பம் பறந்தோட என்ன செய்வது என சொல்லுகின்றேன் என்றார்.*

***பெரியவரின் ஆலோசனை :*** *இவ்வளவு நேரம் பொறுமையாக அமைதியாக இருந்தாய் அல்லவா, அதே போல் பொறுமையாக அமர்ந்து ''ராமா ராமா ராமா ராமா ராமா '' என்ற மந்திரத்தை சொல்லிக்கொண்டே இரு.*

*அப்படி சொன்னால் அந்த இடத்திற்கு ஆஞ்சநேயர் வந்துவிடுவார். ராமா என அழைத்தால் அந்த இடத்திற்கு சீதா தேவி வந்துவிடுவார். ராமா ராமா என பூஜித்தால் ராமரை பூஜிக்கும் பரமேஷ்வரன் அந்த இடத்திற்கு வந்து விடுவார். ஈசன் வந்துவிட்டால், அங்கு அம்பாள் வந்துவிடுவார். சிவனும், அம்பாளும் இருக்கும் இடத்திற்கு விநாயகரும், முருகனும் வந்துவிடுவார்கள்.*

*பிள்ளையார், முருகன் வந்துவிட்டால் அங்கு லட்சுமி கடாட்சம் வந்துவிடும். லட்சுமி கடாட்சம் வந்துவிட்டால் அங்கு லட்சுமி தேவி வந்துவிடுவார். லட்சுமி தேவி வந்துவிட்டால் அங்கு மகா விஷ்ணு வந்து விடுவார்.*

*அவர் வந்துவிட்டால் அங்கு தசாவதார மூர்த்திகளைப் பார்த்துவிடலாம். இப்படி இறைவன் அந்த இடத்திற்கு வந்துவிட்டால் தேவர்கள், முனிவர்கள், ரிஷிகள் அனைவரும் அங்கு வந்துவிடுவார்கள்.*

*இதனால் 'ராம' நாமத்தை சொன்னால் அந்த இடத்திற்கு அனைத்து தெய்வங்களும் வந்துவிடும். அதனால் இவ்வளவு நேரம் பொறுமையாக அமர்ந்திருந்தது போல அமர்ந்து ராம நாமத்தை கூறி வந்தால் அனைத்து தெய்வங்களும் உன் துன்பத்தைப் போக்க துணை நிற்பார்கள்.*

# பலச்ருதி

## ஸ்ரீ ராம நவமி

*“வன்மையும் செல்வமும் நாளும் நல்குமே*
*தின்மையும் பாவமும் சிதைந்து தேயுதே*
*சென்மமும் மரணமும் இன்றித் தீருமே*
*இம்மையே இராமவென் றிரண்டெ ழுத்தினால்”*

*(கம்ப ராமாயணம் சிறப்புப் பாயிரம் 14)*

*ஸ்ரீ ராமநவமியன்று குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை ஒவ்வொருவரும் கம்ப ராமாயணத்தில் ஸ்ரீ ராமாவதார கட்டத்தில் உள்ள கீழ்க்காணும் பாக்களைப் பாராயணம் செய்ய வேண்டும்.*

**வேய்புனர் பூசமும் விண்ணு ளோர்களும்**
**தூயகற் கடகமும் எழுந்து துள்ளவே**
**சித்தரும் இயக்கரும் தெரிவை மார்களும்**
**வித்தக முனிவரும் விண்ணு ளோர்களும்**
**நித்தரும் முறைமுறை நெருங்கி யார்புறத்**
**தத்துறல் ஒழிந்துநீள் தருமம் ஓங்கவே.**

**ஒருபகல் உலகெலாம் உதரத்துட் பொதிந்**
**தருமறைக் குணர்வரும் அவனை யஞ்சனக்**
**கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத்**
**திருவுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை**

*(கம்ப ராமாயணம் : பாலகாண்டம் திரு அவதாரப் படலம்)*

*இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் ஸ்ரீ ராம நவமியன்று முழுவதும் பட்டினி (சித்த உபவாஸ) விரதம் இருக்க வேண்டும்.*

*ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிச் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை எல்லோரும் ஏதாவது சிறிய கோயில் சந்நிதியிலோ அல்லது எல்லோரும் ஏதாவது சிறிய கோயில் சந்நிதியிலோ அல்லது பஜனை மடத்தின் முன்போ கூடி, ஸ்ரீ ராம நாம மந்திரத்தை ஐந்து நிமிஷம் ஜபம் செய்து, பிறகு “ஸ்ரீராம் ஜயராம் ஜய ஜயராம்” என்னும் பதின்மூன்று அக்ஷரங்கள் கொண்ட மந்திரத்தை, ஒருவர் முதலில் சொல்ல, எல்லோரும் அதைப்*

பின்பற்றிச் சொல்லிக் கொண்டு, ஊரைச் சுற்றி வந்து, முதலில் ஆரம்பித்த இடத்தை அடைந்து, அங்கு பத்து நிமிஷம் பஜனை செய்து, பூர்த்தி செய்ய வேண்டும்.

மறுநாள் காலை அதே இடத்தில் கூடி, ஸ்ரீ ராமாவதாரத்தில் (கம்ப ராமாயணத்தில்) ஸ்ரீ ராம பட்டாபிஷேகத்தை வர்ணிப்பதாக உள்ள கீழ்க்காணும் பாக்களைப் பாராயணம் செய்து, அல்லது ஸம்ஸ்கிருதம் படித்தவர்கள் எவரேனும் இருந்தால், அவரைக் கொண்டு வால்மீகி ராமாயணத்தில் உள்ள ஸ்ரீராம பட்டாபிஷேக வர்க்கத்தைப் பாராயணம் பண்ணும்படி செய்து, பத்து நிமிஷம் பஜனை செய்து, ஊர்ப் பொதுச் செலவில் ஏழை மக்களுக்கு அன்னம் பாவிக்க வேண்டும்.

ஸ்ரீ ராமா என சொன்னாலே வாழ்க்கை வளம் பெற்று செல்வ செழிப்பு உண்டாகும். இவ்வளவு ஏன், இராமாயணத்தை முழுமையாக படிக்காமல் போனாலும், ராம் என்ற இரண்டெழுத்து மந்திரத்தை உச்சரித்தாலே ஆணவம், காமம், பேராசை ஆகியவை எல்லாம் அழிந்து அன்பும், அறிவும் பெருகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி மனிதனிடம் இருக்கும் மனிதத்தை அழிக்கக் கூடிய விஷயங்களை எல்லாம் ‘ராமா’ என்ற ஒற்றை பெயர் செய்வதால், நாம் வாழ்வின் அனைத்து வித நன்மைகளையும் அருளையும் பெற முடியும்.

ராம நாமத்தை சொல்லி ராமனிடம் நாம் சரணடைய நமக்கு மோட்சத்தை கொடுப்பார்.

ஸ்ரீராம மந்திரங்கள்

**ராமரின் மிக சக்தி வாய்ந்த மந்திரம்:**

ராமாய ராமபத்ராய ராமசந்திராய வேதசே ரகுநந்தாய நாதாய சீதாய பதயே நமஹ

பொருள்:

இந்த மந்திரம் ஸ்ரீ ராமனின் பல்வேறு பெயர்களை பிரதிபலிக்கின்றது. ராமனை புகழும் இந்த மந்திரம் மிக மங்களகரமானது. தாய் சீதா தேவியின் கணவனான ராமனின் பெயர் சொன்னாலே இன்பத்தை வாரி வழங்குவார்.